விலை : 20.00
பக்கங்கள் : இருபத்து நான்கு

website : www.valampurii.lk
Viber : 076 636 3378

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

சங்கு 18 வள்ளுவர் ஆண்டு 2048 ஆடி 04 வியாழக்கிழமை (20.07.2017) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 213

கல்யாண மாலை
(சர்வதேச திருமண சேவை)
T.P: 021 720 1005



இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
Email:kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக் கட்டணம்
1000/- மட்டுமே

## காணி நேற்று விடுவிக்கப் படவில்லை!

(பனிக்கன்குளம்)
முல்லைத்தீவு கேப்பாப் பிலவில் நேற்று விடுவிக்கப் படுவதாக உறுதியளிக்கப் பட்ட காணிகள் 23

## ஆமை இறைச்சி; ஒருவர் கைது

(மல்லாவி)
தருமபுரம் பொலிஸ் நிலையப் பிரிவில் கண்டா வளை பகுதியில் பாதுகாக் கப்பட்ட அரியவகை ஆமை ஒன்றை பிடித்து இறைச்சிக் காக கொண்டு 23

## டெங்கு ஒழிப்பு; கலந்துரையாடல்

(கொழும்பு)
டெங்கு ஒழிப்பு செயற் பாட்டு குழுவின் விசேட கல ந்துரையாடல் ஜனாதிபதி யின் செயலாளர் ஒஸ்ரின் பெர்ணான்டோ தலைமை யில் நேற்று முற் 24

# தமிழ் சமூகத்துக்கு எதிராக மெருகூட்டப்பட்ட சித்திரவதைகள்




## வருந்தத்தக்க அனுபவம் – எமர்ஸன்

(ஜெனிவா) இலங்கையில் தேசிய பாதுகாப்பை காரணம் காட்டி கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப் பட்டுள்ள நபர்களுக்கு எதிராக சித்திரவதை தொடர்வதாக குற்றஞ்சாட்டியுள்ள ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் உயர்ஸ்தானிகராலயம், அங்கு மனித உரிமைகள், சீர்திருத்தங்கள், நீதி வழங்குதல் உள்ளிட்ட பல்வேறு விடயங்களில் முன்னேற்றம் மிகவும் மெதுவாகவே காணப்படுவதாகவும் விசனம் வெளியிட்டுள்ளது.

(23-ம் பக்கம் பார்க்க...)

## சிங்கப்பூர் வெளி. அமைச்சர் முதலமைச்சருடன் சந்திப்பு



(யாழ்ப்பாணம்)
யாழிற்கு விஜ யம் மேற்கொண்டு ள்ள சிங்கப்பூர் வெளி விவகார அமைச்சர் மருத்துவ கலாநிதி விவியன் 24

## விவியன் பாலகிருஸ்ணன் பல தரப்பினருடன் சந்திப்பு

(யாழ்ப்பாணம்)
சிங்கப்பூர் வெளி விவகார அமைச்சர் வைத்திய கலாநிதி விவியன் பாலகிரு ஸ்ணன் நேற்று யாழ் ப்பாணத்தி 23



## சிறுபான்மையினருக்கு பாதுகாப்பு அவசியம்

### கிழக்கு முதலமைச்சர் வலியுறுத்து

(மட்டக்களப்பு)
உத்தேசிக்கப்பட்டுள்ள புதிய அரசியலமைப்பில் சோல்பரி யாப் பின் 29-ம் சரத்தின் 2-ம் பிரிவு இணைக்கப்பட வேண்டும் என கிழக்கு மாகாண முதலமைச்சர் ஹாபிஸ் நசீர் அஹமட் தெரிவித் துள்ளார். 23

## சகவாழ்வு, நல்லிணக்கத்துக்கு சிங்கப்பூர் ஆதரவு வழங்கும்

### அமைச்சர் விவியன் யாழில் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)
இலங்கையின் சமாதானம் நல்லிணக் கம், சகவாழ்வு போன்ற விடயங்களை மேம் படுத்த சிங்கப்பூர் அரசாங்கத்தினால் பல்வேறு செயற்பாடு தொடர்ந்தும் முன்னெடுக்கப்படும் என சிங்கப்பூரின் வெளிவிவகார அமைச்சர் வைத்திய கலாநிதி விவியன் பாலகிருஸ் ணன் தெரிவித்துள்ளார். 24




## பட்டதாரிகள் போராட்டம் தற்காலிகமாக நிறுத்தம்!

(யாழ்ப்பாணம்)
அரச நியமனம் கோரி வட மாகாண வேலையற்ற பட்டதாரிகளினால் கடந்த 143 நாட்களாக நடத்தப்பட்ட 24

## 160 கிலோ கொகேய்ன் நேற்று மீட்பு

(கொழும்பு)
கொழும்பு ரத்மலானையில் உள்ள பொருளாதார மத்திய நிலையத்தில் உள்ள சதோச களஞ்சியசாலை க்கு கொண்டு செல்லப்பட்டுக் கொண்டி 23

## காணி அளவீட்டு பணிக்கு எதிர்ப்பு

(பனிக்கன்குளம்)
முல்லைத்தீவு கொக்குத்தொடுவாய் கோட்டக்கேணி பிள்ளையார் கோவில் பகுதி யில் இருந்து மணல் இறக்கம் பகுதி வரை யான மக்களின் மானாவாரி விவசாய காணி கள் மகாவலி எல் வலய செயற்பாட்டாளர்க ளால் கடந்த இரண்டு நாட்களாக அளவீடு செய்யப்பட்டு எல்லைக்கல் நாட்டும் பணி மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

இந்நிலையில் குறிப்பிட்ட காணி 23

## 11 தமிழ் இளைஞர்கள் கடத்தல் திசாநாயக்கவுக்கு மீளவும் மறியல்!

(கொழும்பு)
முன்னாள் கடற் படை ஊடகப் பேச்சா ளர் டீ.கே.பி. திசாநா யக்கவை எதிர்வரும் ஆகஸ்ட் 02-ம் திகதி வரை விளக்கமறிய லில் வைக்க கொழு ம்பு கோட்டை 24



## வித்தியா படுகொலை வழக்கு

## கடத்தல், வன்புணர்வு, கொலை; கலவரம், கைது, விசாரணை

### நீதாய விளக்க முறையில் நேற்றும் சாட்சிய பதிவு

(யாழ்ப்பாணம்)
புங்குடுதீவு பாடசாலை மாணவி வித்தியா படுகொலை வழக்கில் கைது செய்யப்பட்டுள் ளவர்களில் [illegible] 22

## "வானம் தூவிய மஞ்சள் நிறத் துளிகள்"

(யாழ்ப்பாணம்)
யாழ்ப்பாணம் வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலையில் நேற்றுக் காலை வானத்தில் இருந்து விழுந்த மஞ்சள் நிறத் துளிகள் மாணவிகள் 23

## கேப்பாப்பிலவு மக்கள் ஏமாற்றப்படும் நிலை?

### அமை. சுவாமிநாதனுடன் மக்கள் முறுகல்



(பனிக்கன்குளம்)
கேப்பாப்பிலவு மக்க ளின் தொடர் போராட் டம் நேற்றுடன் 141-வது நாளை எட்டிய நிலை யில் தொடர்ந்து வருகின் றது. 138 குடும்பங்களு க்கு சொந்தமான 23

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# சிங்கப்பூர் வெளி அமைச்சருடன் அமைச்சர் சத்தியலிங்கம் சந்திப்பு

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாணத்திற்கு விஜயம் செய்துள்ள சிங்கப்பூர் வெளிவிவகார அமைச்சர் வைத்திய கலாநிதி விவியன் பால கிருஸ்ணனனை வடக்கு சுகாதார அமைச்சர் மருத்துவர் ப.சத்தியலிங்கம் நேற்று சந்தித்து கலந்துரையாடியுள்ளார். யாழ்ப்பாணம் மருத்துவ பீடத்தில் நடைபெற்ற இந்த சந்திப்பின் போது வடக்கின் சுகாதார துறை அபிவிருத்தி தொடர்பில் கலந்துரை யாடப்பட்டதாக வடக்கு சுகாதார அமைச்சரின் ஊடக செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள் ளதாவது.

இலங்கைக்கான இரு நாள் உத்தியோக பூர்வ விஜயத்தை மேற்கொண்டுள்ள சிங்கப்பூர் வெளியுறவு அமைச்சர் நேற்று யாழ்ப்பாணத்திற்கு விஜயம் செய்திருந்தார்.

இதன்போது சிங்கப்பூர் அரசின் அனுசரணையுடன் யாழ்ப்பாணம் மருத்துவ பீடம் மற்றும் யாழ்.போதனா வைத்தியசாலைகளில் என்புமுறிவு சிகிச்சை தொடர்பான விசேட பிரிவுகள் அமைப்பது தொடர்பான ஆரம்ப கட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

போரிற்கு பின்னரான சூழ்நிலையில் யுத்தத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கான விசேட சிகிச்சை பிரிவுகளை ஆரம்பித்தல் தொடர்பிலும் சுகாதார துறைசார் ஊழியர்களுக்கான திறன்விருத்தி பயிற்சிகள் வழங்குவதற்கும் சிங்கப்பூர் அரசாங்கம் உதவி வழங்கவேண்டுமென வடக்கு சுகாதார அமைச்சர், வெளியுறவு அமைச்சரிடம் கோரிக்கை விடுத்தார்.

இதற்கு பதிலளித்த வெளியுறவு அமைச்சர் அதற்கான திட்ட முன்மொழிவுகள் சமர்ப்பிக்கப்படுமிடத்து தங்கள் அரசாங்கம் வடக்கு மாகாண சுகாதார அமைச்சுடன் இணைந்து செயற்பட தயாராகவுள்ளதாக உறுதி யளித்தார் என அச்செய்தி குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (செ-11)




## கண்ணீர் அஞ்சலி



### கந்தையா உதயராசா

எனது நீண்ட கால நண்பனும் வலம்புரி பத்திரிகையில் ஊடகவியலாளராக பணிபுரியும் சாளின் அவர்களின் அன்புத் தந்தையார் கந்தையா உதயராசா அவர்கள் காலமான செய்தி அறிந்து ஆழ்ந்த துயர் அடைவதுடன் அன்னாரின் இழப்பால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அவரின் ஆத்மா சாந்தியடைய கலட்டி வீரகத்தி விநாயகரை பிரார்த்திக்கின்றோம்.

*ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!*

நண்பன்
விவேகானந்தக் குருக்கள் பிரணவன்

(C-9122)


## மது பாவனை
# இலங்கைக்கு 4ஆம் இடம்

உலகில் மது பாவனையில் இலங்கை 4ஆம் இடத்தில் உள்ளது. நாட்டில் அனுமதி பெற்ற மதுபாவனை நிலையங்கள் 4664 உள்ளதுடன் இதில் குருநாகலில் மட்டும் 162 நிலையங்கள் உள்ளன.

அந்த வகையில் நாட்டின் அரசியல்வாதிகளின் உறவினர்கள் என பலதரப்பட்டவரினால் இந்நிலையங்கள் நடத்தப்படுவதாகவும் ஜனாதிபதி விசேட செயலணி பணிப்பாளர் அபயரத்ன தகவ லொன்றில் குறிப்பிட்டுள்ளார்.

மதுபான விற்பனையில் 12 வீதம் அரசுக்கு ஒருநாள் வருமானமாக உள்ளது.

அதேவேளை வருடத்துக்கு 40 ஆயிரம் பேர் மது பாவனையால் மரணிக்கிறார்கள் என்பது குறிப்பிடத்தக்கது. (செ)


## விற்பனையாளர்கள் தேவை

எமது புடைவை நிறுவனத்துக்கு
விற்பனை உதவியாளர்கள்
ஆண்/பெண் தேவை. நேரில் வரவும்

**சிவகணேசன் ரெக்ஸ்**
41, பெரியகடை, யாழ்ப்பாணம். (9861)

## வேலையாட்கள் தேவை

லைடன் புடைவை நிலையத்துக்கு
இரு விற்பனையாளர்கள் தேவை.
பழகியவர்களும்
பழகவிரும்புபவர்களும்
விரும்பத்தக்கது. (பெண்கள்)

(C-9120)

**லைடன் புடைவை நிலையம்**
410, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

## வீட்டுடன் காணி விற்பனை

புத்தூர் சுன்னாக வீதியில் நிலாவரையில் இருந்து சுன்னாகம் பக்கமாக 1KM தூரத்தில் றோட்டுக்கு தெற்குப் பக்கமாக இரண்டாவதாக, அண்மையில் கட்டப்பட்ட வீட்டுடனான 16 பரப்பு காணி விற்பனைக்கு உண்டு. (9847)

தொடர்பு:
**077 844 9701**

திருச்சிற்றம்பலம்



சைவநெறிக்கூடம்

# அருள்மிகு ஞானாம்பிகை உடனாய ஞானலிங்கேச்சுரர் திருக்கோவில்

**இணுவில் தெற்கு, யாழ்ப்பாணம்.**

# பெருந்திருவிழா அழைப்பு - 2017

கண்ணுதற் பெருங்கடவுளும் கழகமோ டமர்ந்து
பண்ணுறத் தெரிந்தாய்ந்த இப்பசுந் தமிழ் (பரஞ்சோதி முனிவர்: திருவிளையாடல் புராணம்)

சிவனடியார்களே!

சீரும், திருவும் பொலியும் ஈழமணித் திருநாட்டின் யாழ்.நகரின் வடபால் சிவநெறியும் செந்தமிழும் செழித்து வாழும் இணுவையம்பதியுறை, அருள்மிகு ஞானாம்பிகை உடனாய ஞானலிங்கேச்சுரர் திருக் கோவிலிலே பெருந்திருவிழா நிகழும் திருவள்ளுவர் ஆண்டு 2048 (பொற்றடை வருடம்) கடகத் திங்கள் 5ஆம் நாள் (21.07.2017) முதல் 17ம் நாள் (02.08.2017) வரை நடைபெறத் திருவருள் கைகூடியுள்ளது.

| | | | | |
|---|---|---|---|---|
| | | | | பெருந்திருவிழா ஆரம்பம் |
| 21.07.2017 | வெள்ளிக்கிழமை | 1ம் திருவிழா | மாலை 4.00 மணி | மாதொருபாகன் திருக்கோலம் |
| 22.07.2017 | சனிக்கிழமை | 2ம் திருவிழா | மாலை 4.00 மணி | அன்னபூரணியிடம் ஐயமிரக்கும் கோலம் |
| 23.07.2017 | ஞாயிற்றுக்கிழமை | 3ம் திருவிழா | மாலை 4.00 மணி | பிட்டுக்கு மண்சுமந்த திருக்கோலம் |
| 24.07.2017 | திங்கட்கிழமை | 4ம் திருவிழா | மாலை 4.00 மணி | பரமசிவன் பள்ளி கொள்ளும் திருக்கோலம் |
| 25.07.2017 | செவ்வாய்க்கிழமை | 5ம் திருவிழா | மாலை 4.00 மணி | தென்முகக்கடவுள் திருக்கோலம் |
| 26.07.2017 | புதன்கிழமை | 6ம் திருவிழா | மாலை 4.00 மணி | அம்மையப்பன் திருக்கோலம் (மாம்பழத் திருவிழா) |
| 27.07.2017 | வியாழக்கிழமை | 7ம் திருவிழா | மாலை 4.00 மணி | கேதார கௌரிநாதர் திருக்கோலம் |
| 28.07.2017 | வெள்ளிக்கிழமை | 8ம் திருவிழா | மாலை 4.00 மணி | வேட்டைத் திருவிழா |
| 29.07.2017 | சனிக்கிழமை | 9ம் திருவிழா | மாலை 7.00 மணி | சப்பரத் திருவிழா |
| 30.07.2017 | ஞாயிற்றுக்கிழமை | 10ம் திருவிழா | காலை 8.00 மணி | தேர்த்திருவிழா |
| 31.07.2017 | திங்கட்கிழமை | 11ம் திருவிழா | மாலை 5.30 மணி | திருமுழுக்குப் பெருவிழா (தீர்த்தம்) |
| 01.08.2017 | செவ்வாய்க்கிழமை | 12ம் திருவிழா | மாலை 5.00 மணி | திருமண வினை நாள் (திருக்கல்யாணம்) |
| 02.08.2017 | புதன்கிழமை | 13ம் திருவிழா | மாலை 6.00 மணி | வைரவர் மடை |
| | | | | பெருந்திருவிழா நிறைவு |

கண்ணுதற் பெருங்கடவுளாகிய சிவபெருமான் சங்கம் கண்டு இன்பம் நுகர்ந்த தெய்வத் தமிழிலே
நடைபெறும் விழாக்களில் பங்கெடுத்து இறையருள் பெற்று மண்ணில் நல்லவண்ணம் வாழ அன்புடன் அழைக்கின்றோம்.

"என்னை நன்றாக இறைவன் படைத்தனன் தன்னை நன்றாகத் தமிழ் செய்யுமாறே" (திருமூலர் - திருமந்திரம்)

தொலைபேசி இல: 0212243545
மின்னஞ்சல்: gnanalingechurarinuvil@gmail.com
முகப்புத்தகம்: http://www.facebook.com/gnalinkeswarar (9854)

இவ்வண்ணம்,
சைவநெறிக்கூடம்,
அருள்மிகு ஞானலிங்கேச்சுரர் திருக்கோவில், இணுவில்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மாணவி வித்தியா கொலை துயர்மிக்க சம்பவம்

# போதைப்பொருளை ஒழித்துக்கட்ட எதிர்காலத்தில் விசேட திட்டங்கள்

## ஜனாதிபதி மைத்திரி உறுதி

(கொழும்பு)

சட்டவிரோத போதைப் பொருள் கண்டுபிடிப்பு நடவடிக்கைகளில் ஈடுபடும் உத்தியோகத்தர்களை பாராட்டுவதற்கும், ஊக்கப்படுத்துவதற்கும் அவர்களுக்கான சம்பள அதிகரிப்பு உள்ளிட்ட வரப்பிரசாதங்களை வழங்கவும், பதவி ஏற்றத்தின்போது விதந்துரைகளை வழங்கவும் பொருத்தமான திட்டம் எதிர்காலத்தில் நடைமுறைப்படுத்தப்படுமென ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

பாணந்துறை நகர சபை விளையாட்டரங்கில் நேற்று நடைபெற்ற "போதைப் பொருட்களற்ற நாடு" தேசிய செயற்றிட்ட நிகழ்வில் உரையாற்றும் போதே ஜனாதிபதி மேற்கண்டவாறு தெரிவித்தார்.

போதைப்பொருட்களற்ற நாட்டினை கட்டியெழுப்புவதற்காக அரசாங்கத்தினால் நடைமுறைப்படுத்தப்படும் தேசிய செயற்றிட்டத்தை மேலும் பலப்படுத்தும் வகையில் மேலதிக செயற்பாடுகள் பல எதிர்வரும் சில மாதங்களில் ஆரம்பிக்கப்படும் என்று ஜனாதிபதி இதன்போது தெரிவித்தார்.

போதைப் பொருட்கள் தொடர்பாக சமூகத்தில் காணப்படும் கசப்பான அனுபவங்களை எதிர்கால சந்ததியினருக்கு வழங்காது நாட்டையும், சமூகத்தையும் போதைப் பொருளின் பிடியிலிருந்து விடுவிப்பதற்கு பொறுப்பு வாய்ந்த அரசாங்கம் என்ற வகையில் சகல நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படுகின்றன.

மாணவி வித்தியாவின் கொலைச் சம்பவம் போன்ற போதைப்பொருட்கள் மற்றும் போதைப்பொருள் கடத்தலுடன் இணைந்த நிகழ்வுகள் துயர்மிக்கவை எனத் தெரிவித்த ஜனாதிபதி மேலும் இவ்வாறான அச்சம் மிகுந்த போதைப்பொருட்களுடன் தொடர்பான பல குற்றச்செயல்கள் நாட்டில் கடந்த காலங்களில் இடம்பெற்றுள்ளன என்றும் தெரிவித்தார்.

இவ்வாறான அசாதாரண நிகழ்வுகளுக்கு இனிமேலும் இடமளிக்க முடியாது என வலியுறுத்திய ஜனாதிபதி அவர்கள், போதைப்பொருட்களற்ற நாடு எனும் எண்ணக்கருவினை வெற்றிகரமாக நடைமுறைப்படுத்தி அவ்வாறான ஒரு நாட்டினை கட்டியெழுப்புவதற்கு அனைவரும் அர்ப்பணிப்புடன் செயற்பட வேண்டும் என்றும் வலியுறுத்தினார்.

போதைப்பொருள் ஒழிப்பு நடவடிக்கைகளுக்கு அர்ப்பணிப்புடன் செயற்படும் அரச உத்தியோகத்தர்களுக்கான விருது வழங்கலும், பாடசாலை போதைப்பொருள் ஒழிப்பு செயற்பாட்டாளர்களுக்கு உத்தியோகபூர்வ சின்னம் சூட்டுதலும் ஜனாதிபதியால் மேற்கொள்ளப்பட்டது.

புகையிலை நிறுவனங்களின் செயற்பாடுகளை அவதானிப்பதற்கும் ஆய்வு செய்வதற்கும் கொழும்பு பல்கலைக்கழகத்தில் நிறுவப்பட்டுள்ள புகையிலை ஆய்வு நிலையத்தின் இணையத்தளமும் ஜனாதிபதியால் ஆரம்பித்து வைக்கப்பட்டது. (இ-3)

## வெளிவிவகார அமைச்சர் ரவியுடன் அரசியல் விவகாரங்களுக்கான ஐ.நா.செயலாளர் நேற்று சந்திப்பு



அரசியல் விவகாரங்களுக்கான ஐ.நா. கீழ் செயலாளர் நாயகம் ஜெப்ரி பெல்ட்மன் மற்றும் வெளிவிவகார அமைச்சர் ரவி கருணாநாயக்க ஆகியோருக்கிடையில் சந்திப்பு இடம்பெற்றுள்ளது.

வெளிவிவகார அமைச்சில் நேற்றுக் காலை இந்த சந்திப்பு இடம்பெற்றதாக ஐக்கிய நாடுகள் சபையின் இலங்கைக்கான அலுவலகம் விடுத்துள்ள ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அரசியல் விவகாரங்களுக்கான ஐ.நா. கீழ் செயலாளர் நாயகம் ஜெப்ரி பெல்ட்மன் மூன்று நாள் உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டு இலங்கை வந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

## வடமத்திய மாகாண சபை மோதலுக்கு பசிலே காரணம்

### முதலமைச்சர் இசுறு குற்றச்சாட்டு



வட மத்திய மாகாண சபையில் நேற்று முன்தினம் இடம்பெற்ற மோதல் சம்பவத்திற்கு முன்னாள் அமைச்சர் பசில் ராஜபக்ஷவே பொறுப்பாளி என மேல் மாகாண முதலமைச்சர் இசுறு தேவப்பிரிய குற்றம் சாட்டியுள்ளார்.

கொழும்பில் உள்ள முதலமைச்சரின் அலுவலகத்தில் நேற்று நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இதனை தெரிவித்தார்.

பசில் ராஜபக்ஷ கடந்த 2012ஆம் ஆண்டு ஒக்டோபர் 2ஆம் திகதி இந்த சிக்கலை ஏற்படுத்தியதாகவும், ஐக்கிய தேசியக் கட்சி தெரிவு செய்த மாகாண சபையின் தலைவரை அந்த கட்சியே நீக்க வேண்டிய நிலைமை ஏற்பட்டுள்ளதாக சுட்டிக்காட்டியுள்ளார்.

வட மத்திய மாகாண சபையில் நேற்று முன்தினம் நடந்த சம்பவமானது கூட்டு எதிர்க்கட்சிக்கும் ஐக்கிய தேசியக் கட்சிக்கும் இடையிலான மோதலே அன்றி ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்கும் அதற்கும் எந்த சம்பந்தமும் இல்லை எனவும் முதலமைச்சர் மேலும் தெரிவித்தார். (இ-7)

### அரசியலமைப்பு உருவாக்கம்

## வீரவன்ச உள்ளிட்ட குழு விலகுவதாக அறிவிப்பு

தேசிய சுதந்திர முன்னணியை பிரதிநிதித்துவம் செய்யும் பாராளுமன்ற உறுப்பினர்கள் புதிய அரசியலமைப்புக்கான குழுவில் இருந்து விலகுவதாக அறிவித்துள்ளனர்.

கடந்த பாராளுமன்ற தேர்தலில் ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பு சார்பாக போட்டியிட்டு வெற்றிபெற்று பாராளுமன்றத்திற்கு தெரிவான தேசிய சுதந்திர முன்னணியை பிரதிநிதித்துவம் செய்யும் உறுப்பினர்கள் ஐந்து பேர் சபாநாயகர் கருஜயசூரியவிடம் நேற்று எழுத்து மூலம் இதனை அறிவித்துள்ளனர்.

அந்தக் கட்சியின் தலைவர் விமல் வீரவன்ச, ஜயந்த சமரவீர, வீரகுமார திஸாநாயக்க, நிரோஷன் பிரேமரத்ன மற்றும் பத்ம உதயசாந்த குணசேகர ஆகியோரே இவ்வாறு புதிய அரசியலமைப்புக்கான குழுவில் இருந்து விலகியுள்ளனர். (இ-7)

## வெளிநாட்டு உடன்படிக்கைக்கு அமைச்சுக்களுக்கு விசேட நபர்

### ஜனாதிபதி மைத்திரி ஆலோசனை

அரசாங்கம் வெளிநாடுகளுடன் ஏற்படுத்திக் கொள்ளும் உடன்படிக்கைகள் சம்பந்தமாக நடவடிக்கைகளை எடுப்பதற்கு உரிய அமைச்சுக்களில் விசேட நபர் ஒருவர் நியமிக்கப்பட வேண்டும் என்று ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன ஆலோசனை வழங்கியுள்ளார்.

தற்போதைய அரசாங்கம் இதுவரை பல நாடுகளுடன் பல்வேறு உடன்படிக்கைகளில் கைச்சாத்திட்டுள்ளதாகவும் அந்த உடன்படிக்கைகள் ஊடாக சிறந்த பிரதிபலன்களைப் பெற்றுக் கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் அவர் தெரிவித்தார்.

அவ்வாறில்லாவிட்டால் அந்த உடன்படிக்கைகள் ஊடாக கிடைக்க வேண்டிய பிரதிபலன்கள் இல்லாமல் போகும் என்று ஜனாதிபதி தெரிவித்தார். (இ-7)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



World Class UK Degree @ICBT Jaffna Campus

Accredited by EQAA European Quality Assurance Agency

Apply now for New Intake 2017

# ICBT HND IN BUSINESS MANAGEMENT

Finance/ Marketing/ Human Resource Management

**Duration**
- Full Time: 18 Months (Mon-Fri)
- Part Time: 2 Years (Sat & Sun Evening)

Part Time Entry qualifications: GCE A/L + Work Experience

Cardiff Metropolitan University

## BSc (Hons) BUSINESS MANAGEMENT

Offered by Cardiff Metropolitan University, UK

**Duration**
- 1 year

UGC Recognized

**Entry Qualifications**
- Higher National Diploma in Business Management or any other accepted programs.

**Why Study ICBT ?**
- Qualified Lecturer Panel
- High Quality Learning Experience
- Cafeteria/Library/Computer Laboratory/ Recreation Area/Modern Lecture Halls.
- Easy Payment schemes

Week End Part Time Classes | TVEC REGISTERED

0770 746 553 | 0769 289 784

ICBT CAMPUS JAFFNA
580, Hospital Rd., Jaffna
Tel: (+94)214 777 888
Fax: (+94)654 777 890
Email : jaffna@icbtcampus.edu.lk

National Business Excellence 2016 | 2015 | 2014 | 2013 Gold Award Winner Education Service Sector

www.icbt.lk



Study Engineering with The Leader

Apply now for New Intake 2017

EQAA Institutionally Accredited

# HND IN CIVIL ENGINEERING

**Entry Qualifications**
- G.C.E. A/L or Equivalent Qualification

**Duration**
- 2 Years

★ All HND's are equal to NVQ Level 06
★ All HND's are mapped to British qualification frame work (NQF Level 5)

TVEC REGISTERED

A/L's → HND → BSc → MSc | DEGREE COMPLETION IN SRI LANKA

LIVERPOOL JOHN MOORES UNIVERSITY

## BSc (Hons) CIVIL & STRUCTURAL ENGINEERING

Recognised by ice Institution of Civil Engineers

UGC Recognized

**Entry Qualifications**
- Higher National Diploma in Civil Engineering or any other accepted programs.


**Why Study ICBT ?**
- Qualified Lecturer Panel
- High Quality Learning Experience
- Cafeteria/Library/Computer Laboratory/ Recreation Area/Modern Lecture Halls.
- Easy Payment schemes

0770 746 553 | 0769 289 784

ICBT CAMPUS JAFFNA
580, Hospital Rd., Jaffna
Tel: (+94)214 777 888
Fax: (+94)654 777 890
Email : jaffna@icbtcampus.edu.lk

National Business Excellence 2016 | 2015 | 2014 | 2013 Gold Award Winner Education Service Sector

[C-9121]



World Class British IT Degree Programme @ ICBT Jaffna Campus

Apply Now For New Intake 2017

EQAA Institutionally Accredited

Duration 2 Years

# ICBT DUAL HNDs Software Engineering + Computing

TVEC REGISTERED

★ All HND's are equal to NVQ Level 06
★ All HND's are mapped to British qualification frame work (NQF Level 5)

Cardiff Metropolitan University

## BSc (Hons) SOFTWARE ENGINEERING

Offered by Cardiff Metropolitan University, UK

UGC Recognized

**Duration** 1 year

**Entry Qualifications**
Higher National Diploma in Computing/ IT/ Networking/ Systems Development or any other accepted programs.

**Why Study ICBT ?**
- Qualified Lecturer Panel
- High Quality Learning Experience
- Cafeteria/Library/Computer Laboratory/ Recreation Area/Modern Lecture Halls.
- Easy Payment schemes

Week End Part Time Classes

A/L|O/L → HND → BSc | DEGREE COMPLETION IN SRI LANKA

0770 746 553 | 0769 289 784

ICBT CAMPUS JAFFNA
580, Hospital Rd., Jaffna
Tel: (+94)214 777 888
Fax: (+94)654 777 890
Email : jaffna@icbtcampus.edu.lk

National Business Excellence 2016 | 2015 | 2014 | 2013 Gold Award Winner Education Service Sector

www.icbt.lk



Cardiff Metropolitan University

SRI LANKA'S MOST ACCEPTED BRITISH

# MBA

MASTER OF BUSINESS ADMINISTRATION

in Jaffna

March, 2017 Intake (Third Batch in Jaffna)

» Duration: 18 Months

» Entry Qualification
- Degree in Business or related areas
- Any other Degree or Equivalent + 2 Years Working experience.
- DBF + 2 Years of Banking service
- Any other part qualification with not less than 5 Years of Managerial level work experience would be considered.

- 12 months of classroom study and 6 months of Dissertation works
- Part Time (Sundays only) class
- Pay Rs.150,000 on or before 20th of February and claim Rs.50,000 off from the Total Payment
- Join as a group of 3 or more and claim Rs.25,000 off from theTotal Payment.

**Why Study ICBT ?**
- Qualified Lecturer Panel
- High Quality Learning Experience
- Cafeteria/ Library Computer Laboratory/ Recreation Area/ Modern Lecture Halls.
- Easy Payment schemes

0770 746 553 | 0769 289 784

ICBT CAMPUS JAFFNA
580, Hospital Rd., Jaffna
Tel: (+94)214 777 888
Fax: (+94)654 777 890
Email : jaffna@icbtcampus.edu.lk

EQAA

National Business Excellence 2016 | 2015 | 2014 | 2013 Gold Award Winner Education Service Sector

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐ.நா. விசேட பிரதிநிதி எமர்சன் பயங்கரவாதக் குற்றச்சாட்டுள்ள சந்தேக நபர்களைச் சந்தித்ததில் எந்தவிதப் பிரச்சினையும் இல்லை

## அமைச்சர் ராஜித தெரிவிப்பு



(கொழும்பு)

பயங்கரவாத எதிர்ப்பு மற்றும் மனித உரிமை மீறல்கள் தொடர்பான ஐக்கிய நாடுகள் அமைப்பின் விசேட பிரதிநிதி பென் எமர்சன், இலங்கையில் பயங்கரவாத குற்றச்சாட்டுக்களின் அடிப்படையில் கைது செய்யப்பட்டுள்ள சந்தேக நபர்களை சந்தித்ததில் எவ்விதப் பிரச்சினையும் கிடையாது என அரசாங்கம் தெரிவித்துள்ளது. அண்மையில் எமர்சன் இலங்கைக்கு பயணம் செய்திருந்த போது பயங்கரவாத சந்தேக நபர்களை பார்வையிட்டிருந்தார்.

எமர்சன் பயங்கரவாத சந்தேக நபர்களை சந்திப்பதற்கு எவ்வாறான அனுமதியை பெற்றுக் கொண்டார் என்பது குறித்தே ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன கேள்வி எழுப்பியிருந்தார் எனவும், வெளிவிவகார அமைச்சு அனுமதி வழங்கியிருந்தது எனவும் அமைச்சரவை பேச்சாளர் டாக்டர் ராஜித சேனாரட்ன தெரிவித்துள்ளார். எதிர்வரும் காலங்களில் பாதுகாப்பு அமைச்சின் அனுமதியையும் பெற்றுக் கொள்ளப்பட வேண்டுமென ஜனாதிபதி அறிவுறுத்தினார் என ராஜித சேனாரட்ன தெரிவித்துள்ளார்.

ஐக்கிய நாடுகள் அமைப்புடன் முரண்பாடுகளை ஏற்படுத்திக் கொள்ள விரும்பவில்லை எனவும் இராஜதந்திர ரீதியில் பிரச்சினைகள் அணுகப்படும் எனவும் அவர் தெரிவித்தார்.

கடந்த அரசாங்கம் சர்வதேச சமூகத்தை எதிர்த்து செயற்பட்டதனால் ஏற்பட்ட நெருக்கடி நிலைமைகளை புரிந்து கொண்டு செயற்படவேண்டுமென அவர் வலியுறுத்தியுள்ளார். (இ-7)

# சிங்களராவய கிராம பெயர்ப்பலகை சுண்ணாம்புக்கழி பூசி மறைப்பு



(யாழ்ப்பாணம்)

நாவற்குழி ஸ்ரீசுமித்தி சுமண விகாரைக்கு முன்னால் நடப்பட்டுள்ள சிங்களராவய கிராமம் என்ற பெயர்ப்பலகை வெள்ளை நிற சுண்ணாம்புக்கழி பூசி மறைக்கப்பட்டுள்ளது.

நாவற்குழி பகுதியில் சிங்கள மக்கள் குடியேற்றப்பட்டுள்ள பகுதியில் அண்மையில் புதிதாக தாதுகோபம் அமைக்க முற்பட்ட விகாரைக்கு முன்பாக உள்ள தமிழ் மற்றும் சிங்கள மொழியிலான சீமெந்தில் அமைக்கப்பட்ட பெயர்ப்பலகையே மறைக்கப்பட்டுள்ளது. இதனை யார் மேற்கொண்டார்கள் என்ற விபரம் வெளி வரவில்லை.

இதேவேளை சாவகச்சேரி பிரதேச சபையால் சாவகச்சேரி நீதிமன்றில் கட்டட அனுமதியின்றி சட்டவிரோத கட்டடம் அமைக்க முற்பட்டமை தொடர்பாக வழக்கு தாக்கல் செய்யப்பட்டு விசாரணைகள் இடம்பெற்று வருகின்றது.

பாரிய விகாரை அமைப்பதற்காக இராணுவத்தினரின் ஒத்துழைப்புடன் அடித்தளம் இடப்பட்ட போது பல்வேறு தரப்பினரும் அதற்கு எதிர்ப்பு வெளியிட்டமையினை தொடர்ந்து சாவகச்சேரி பிரதேச சபையினால் கட்டட அனுமதியினைப் பெறாமல் சட்டவிரோதமாக அமைக்கப்படுவதற்கு எதிராக நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டு கடந்த 7ஆம் திகதி விசாரணைக்கு எடுக்கப்பட்டு கட்டட வேலைகளை உடன் நிறுத்துமாறு உத்தர விடப்பட்டுள்ளது.

இந்த விகாரை தொடர்பான வழக்கு நாளை வெள்ளிக்கிழமை சாவகச்சேரி நீதிமன்றத்தில் எடுத்துக் கொள்ளப்படவுள்ளது குறிப்பிடத்தக்கது. (இ-89)

# ராஜபக்ஷவின் ஆட்சிக் கனவு ஒருபோதும் பலிக்காது

ராஜபக்ஷக்களின் கொள்கைகளை தோற்கடிப்பதற்கு அரசாங்கம் தவறியுள்ளதாக ஜனாதிபதியின் இணைப்புச் செயலாளர் ஸ்ரீலால் லக்திலக்க தெரிவித்துள்ளார்.

கடந்த 2015ஆம் ஆண்டு தோற்கடிக்கப்பட்ட அரசாங்கத்தின் குழுக்களை உரிய முறையில் கொள்கை ரீதியில் தோற்கடிக்க அரசாங்கம் தவறியுள்ளது என குறிப்பிட்டுள்ள அவர் இது அரசாங்கத்தின் பலவீனம் என தெரிவித்துள்ளார்.

இருப்பினும் 2020ஆம் ஆண்டில் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவினால் அரசாங்கமொன்றை அமைக்க முடியாது எனவும் ராஜபக்ஷவின் கனவு எந்த வொரு சந்தர்ப்பத்திலும் பலிக்காது எனவும் தெரிவித்துள்ளார். (இ-3)


# அறிவித்தல்

**கரவெட்டி பனை தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கம் (வ-து)**
**கிளைக்குழு தெரிவு 22.07.2017 சனிக்கிழமை**

கீழ் குறிப்பிடப்படும் அட்டவணைப்படி கிளைக்குழு தெரிவுக்கான கிளைப்பொதுச்சபைக்கூட்டம் நடைபெறுமென சங்கத்தின் எல்லா உறுப்பினர்களுக்கும் இத்தால் அறிவிக்கின்றேன். (உரிய தவிசாளர் ஊடாக ஒவ்வொரு உறுப்பினர்களுக்கும் தனிப்பட்ட அழைப்பு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது)

01. **கிளைப்பொதுச்சபைக் கூட்டம் ஆரம்பம் 22.07.2017 சனிக்கிழமை மு.ப 10.30**
02. **கூட்டம் நடைபெறும் இடங்களின் விபரங்கள் பின்வருமாறு**

| தொகுதி இல | கிளை இல | கிளையின் பெயர் | கூட்டம் நடைபெறும் இடங்கள் | தவிசாளர் பெயர் |
|---|---|---|---|---|
| 01. | 146 | மடத்துப்புலம் | கலைமகள் சனசமூக நிலையம் -இமையாணன் | திரு.ச.சுவர்ணன் |
| 02. | 147 | கரணவாய் தெற்கு | வள்ளுவர் ச.ச.நிலையம்-கரணவாய் தெற்கு | திரு.க.பிரதீபன் |
| 03. | 148 | உடுப்பிட்டி | நாவலர் பாலர் பாடசாலை - நாவலடி | திரு.ஸ்ரீ.குகதீப் |
| 04. | 149 | கம்பர்மலை | கலாவாணி சனசமூக நிலையம்-கம்பர்மலை | திரு.வி.சிவபாலன் |
| 05. | 150 | வல்வெட்டி | பராசக்தி சனசமூக நிலையம்-வல்வெட்டி | திரு.ம.கபிலன் |
| 06. | 151 | கரணவாய் வடக்கு | கலைமதி சனசமூக நிலையம்-நவிண்டில் | திரு.த.பிரபாகரன் |
| 07. | 152 | இமையாணன் | கலைமகள் பாலர் பாடசாலை -இமையாணன் | திரு.பா.குருபரன் |
| 08. | 153 | கரவெட்டி மேற்கு | திருவள்ளுவர் சனசமூக நிலையம் | திரு.சி.பிரதீபன் |
| 09. | 157 | கரவெட்டி வடக்கு | தேவரையாளி சனசமூக நிலையம் | திரு.அ.விமல்ராஜ் |
| 10. | 158 | அல்வாய் தெற்கு | கரவெட்டி பிரதேச சபை உபசபை நூல் நிலையம் | திரு.நா.குமணதாசன் |
| 11. | 159 | மண்டான் | மாவலி சனசமூக நிலையம் | திரு.க.செந்தூரன் |

**செயலாளர். கரவெட்டி ப.தெ.வ.அ.கூ.சங்கம்,**
**கொடிகாமம் வீதி, நெல்லியடி.**

(C-9114)


# இராசி பலன்

20.07.2017
(ஆடி 04, வியாழக்கிழமை)
சூரிய உதயம் காலை 6.01 மணிக்கு
துவாதசி முன்னிரவு 11.34 மணிவரை
ரோகினி பிற்பகல் 4.03 மணிவரை
சுபநேரம் 7.31-9.01 மணிவரை
இராகுகாலம் 1.31-3.01 மணிவரை

வளவன்

| | | | |
|---|---|---|---|
| | | சந் | சுக் |
| கேது | கிரகநிலை சந்திராஷ்டமம் விசாகம்-அனுசம் இரவு3.05 மணிக்கு மிதுன-சந் | | சூரி, செவ், புத |
| | | | ராகு |
| | சனி | | குரு |

**மேடம்** எண்ணங்கள் எளிதில் நிறைவேறும் நாள், எடுத்த காரியத்தில் கண்ணும் கருத்துமாக இருப்பீர்கள், பித்த சம்பந்தமான ரோக பயமுண்டு.

**இடபம்** எந்தவொரு வேலையையும் நாளையென தள்ளி வைக்காமல் இன்றே செய்து முடிப்பீர்கள், பணத்தேவைகள் கடைசி நேரத்தில் பூர்த்தியாகும்.

**மிதுனம்** தொழில் ரீதியாக யாராவது வந்து உதவி கேட்கலாம், சுப காரியச் செலவுகள் ஏற்படலாம், சயன சுகக் குறைவான நாள், பயணங்கள் கைகூடும்.

**கடகம்** குடும்பச் செலவுகளில் தாராளம் காட்டுவீர்கள், அரச வழியில் எதிர்பார்புகள் கைகூடும், உற்சாகத்துடன் பணி புரிவீர்கள் போசன சுகமுண்டு.

**சிம்மம்** முன்னேற்றப் பாதையில் அடியெடுத்து வைப்பீர்கள், உற்ற நண்பர்கள் உறுதுணையாக இருப்பர், ஆரோக்கியமான நாள், போசன சுக முண்டு.

**கன்னி** பற்றாக்குறை தீர்ந்து பண வரவு கிடைக்கும் நாள், தேடிச் சென்றவர்கள் நாடி வந்து உதவும் நாள், தொழில் போட்டிகள் மாறும், பயணங்கள் கைகூடும்.

**துலாம்** புதிய முயற்சிகளில் சிறு தடை தாமதங்கள் ஏற்படலாம், வரவும் செலவும் சமமாகும் நாள், வாழ்க்கைத் துணை வழியே விட்டுக் கொடுத்துச் செல்வது நல்லது.

**விருச்சிகம்** தொலைபேசி வழியில் அனுகூலம் தரும் செய்திகள் வந்து சேரலாம், உறவினர்களின் வருகையால் உற்சாகம் அடையும் நாள், போசன சுகமுண்டு.

**தனுசு** இனிமையான அனுபவங்கள் ஏற்படும் நாள், ஆற்றல் மிக்கவர்கள் உங்களுக்கு பின்னணியாக செயற்படுவர், செய் தொழில் மேன்மையுண்டு.

**மகரம்** உள்ளம் மகிழும் விதத்தில் உதிரி வருமானங்கள் வந்து சேரலாம், கல்யாணக் கனவுகள் நனவாகலாம், மறைமுகப் போட்டிகள் மாறும்.

**கும்பம்** தொழில் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள், தொலைபேசி வழித்தகவல் ஆச்சரியப்பட வைக்கும், புண்ணிய காரியங்களுக்கு செலவு செய்து மகிழ்வீர்கள்.

**மீனம்** குடும்பத்தினர் உங்களின் குண மறிந்து நடந்து கொள்வர், மகிழ்ச்சி தரும் தகவல்கள் வந்து சேரலாம், இல்லத் தேவைகளைப் பூர்த்தி செய்ய முற்படுவீர்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தெல்லிப்பழை தமிழ்ச்சங்கத்தின் ஆடிப்பிறப்பு நிகழ்வும் ஆடிக்கூழ் வழங்கும் நிகழ்வும் நேற்று முன்தினம் திங்கட்கிழமை இரவு 7 மணியளவில் சங்கத்தின் தலைவரும் சண்டிலிப்பாய் கோட்டக்கல்விப் பணிப்பாளருமான சிவானந்தராஜா தலைமையில் தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தானத்தில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் வடமாகாணசபை உறுப்பினர் பா.கஜதீபன் பிர்தம விருந்தினராகக் கலந்துகொண்டதுடன் ஆசியுரையை தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தான தலைவர் செஞ்சொற்செல்வர் கலாநிதி ஆறு.திருமுருகன் வழங்குவதையும்வடமாகாணசபை உறுப்பினர் பா.கஜதீபனின் மாகாணசபை நிதியொதுக்கீட்டின் கீழ் தமிழ்ச்சங்கத்தின் பாவனைக்காக ஒலிபெருக்கி சாதனங்கள் வழங்குவதையும் படங்களில் காணலாம்.

# காணிப் பிணக்குகளை தீர்ப்பதற்கென அமைக்கப்பட்ட விசேட மத்தியஸ்த சபை ஓகஸ்டிலிருந்து இயங்கும்

## யாழ். மாவட்ட அதிகாரி தகவல்

(யாழ்ப்பாணம்)

நீதி அமைச்சின் மத்தியஸ்த சபைகள் ஆணைக் குழுவினால் காணிப்பிணக்குகளை தீர்ப்பதற்கென அமைக்கப்பட்ட "விசேட மத்தியஸ்த சபை (காணி) அடுத்த (ஓகஸ்ட்) மாதத்தில் இருந்து இயங்கும் என காணி மத்தியஸ்த சபைகள் ஆணைக் குழு அறிவித்துள்ளது.

நீதி அமைச்சின் மத்தியஸ்த சபைகள் ஆணைக் குழுவினால் யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி மாவட்டங்களில் புதிதாக அமைக்கப்பட்ட விசேட மத்தியஸ்த சபைகளின் (காணி) மத்தியஸ்தர்களுக்கான நியமனம் கடந்த வருடம் மே மாதம் 27 ஆம் திகதி நீதி அமைச்சால் வழங்கப்பட்டது.

யாழ் மாவட்டத்தில்அமைக்கப்பட்ட விசேட மத்தியஸ்த சபையில் (காணி) 27 மத்தியஸ்தர்களுக்கும் கிளிநொச்சி மாவட்ட மத்தியஸ்த சபையில் (காணி) 17 மத்தியஸ்தர்களுக்கும் நியமனக் கடிதங்கள் வழங்கப்பட்டன.

ஆனால் கடந்த வருடம் மே மாதம் நியமனம் வழங்கப்பட்டு 3 நாட்கள் பயிற்சிப் பட்டறையின் பின்னர் குறித்த மத்தியஸ்த சபையால் காணி தொடர்பான பிணக்குகளை தீரவுக்கும் நடவடிக்கைகள் எவையும் மேற்கொள்ளப்படவில்லை. பின்னர் கடந்த ஜனவரி மாதம் குறித்த மத்தியஸ்தர்களுக்கான பயிற்சிப் பட்டறை நடைபெற்று பெப்ரவரி மாதத்தில் இருந்து ஆரம்பிக்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

ஆனால் அதற்கான நடவடிக்கைகள் எவையும் மேற்கொள்ளப்படாத காரணத்தினால் பலதரப்பிடம் இருந்தும் நீதி அமைச்சுக்கு அழுத்தம் கொடுக்கப்பட்டது. அதனையடுத்து குறித்த மத்தியஸ்த சபையை விரைவில் ஆரம்பிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

இது தொடர்பாக மத்தியஸ்தர்களுடனான கலந்துரையாடல் ஒன்று நேற்று முன்தினம் யாழ். மாவட்ட செயலகத்தில் யாழ்.மாவட்ட அரச அதிபர் நா.வேதநாயகன் தலைமையில் நடைபெற்றது.

இதில் கலந்து கொண்ட விசேட மத்தியஸ்த சபை (காணி) யாழ். மாவட்ட அதிகாரி பி.சனதனன் குறித்த சபையின் செயற்பாடுகள் தொடர்பில் கருத்து தெரிவிக்கையில்,

வடக்கில் அதிகமாக காணிப்பிரச்சினைகள் உள்ளன. அப்பிரச்சினைகளை தீர்த்து மக்களை ஒரு சுமுகமான நிலைக்கு கொண்டு வருவதற்காக நீதி அமைச்சு இந்த விசேட மத்தியஸ்த சபையை ஆரம்பித்துள்ளது.

இச் சபை அதிகாரம் வாய்ந்த சபையாகவும் காணிப்பிணக்குகளை தீர்ப்பதில் ஒரு வலுவான செயற்பாட்டை ஏற்படுத்துவதுடன் மக்கள் மத்தியில் நல்லிணக்கத்தை ஏற்படுத்தும் பயனுள்ள சபையாக இயங்கும்.

மக்களின் காணிப் பிரச்சனைகள் நீதிமன்றங்களின் மூலம் நீண்ட காலங்களாக இழுத்தடிப்பு செய்யப்பட்டு வருவதால் மக்கள் வீண்பணச்செலவு செய்வதுடன் மன விரக்தி அடைகிறார்கள். வருடக்கணக்கில் இப்பிரச்சினை தீர்க்கப்படாமல் உள்ளது. எனவே இச்சபை மூலம் இலகுவாக தீர்க்கலாம்.

காணி தொடர்பான முறைப்பாடுகளை குமாரசாமி சண்முகநாதன், தவிசாளர், விசேட காணி மத்தியஸ்தர் சபை, ராமகிருஸ்ண பவனம், கொக்குவில் கிழக்கு, கொக்குவில் என்ற முகவரிக்கு அனுப்பி வைக்க முடியும்.

மக்களுக்கு இச் சபை தொடர்பில் தெளிவூட்டும் படிவங்கள் ஒவ்வொரு கிராம சேவகர் ஊடாகவும் வழங்கப்படவுள்ளன. அத்துடன் இச் செயற்பாட்டை முன்னெடுப்பதற்கு மத்தியஸ்த உறுப்பினர்கள் மிக ஆர்வமாக உள்ளார்கள் என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-9)



இளவாலை வருத்தப்படாத வாலிபர் சங்கத்தின் ''உயர்த்தும் கரங்கள்'' செயற்றிட்டத்தின் கீழ் கீரிமலை வலித்தூண்டல் பாடசாலை மாணவர்கள் 40 பேருக்கு கற்றல் உபரணங்கள் வழங்கப்பட்டன.

# கற்கை நெறிகளுக்கு விண்ணப்பம் கோரல்

இலங்கை சமுத்திர பல்கலைக்கழகத்தில் 2017 ஆம் ஆண்டின் இரண்டாம் கல்வியாண்டில்புதியதொழிற்கற்கை நெறிகளாக கடலக மாலுமி பயிற்சி நெறி (NVQ-4) மற்றும் உயிர்ப் பாதுகாப்பு பயிற்சி நெறி (NVQ-4) என்பன ஆரம்பிக்கப்படவுள்ளன. படகினை செலுத்துவதற்கான அனுமதிப் பத்திரத்தினை (Coxswains License) பெற்றுக் கொள்ள விரும்பு பவர்கள் கடலக மாலுமி பயிற்சி நெறியானது மிகவும் பயனுள்ளதாக அமையும். க.பொ.த. சாதாரணதரம் தோற்றியவர்கள் இதற்கு விண்ணப்பிக்க முடிவதுடன் விண்ணப்பதாரரின் பொருத்தமான நேர காலங்களுக்கு ஏற்ப கற்கை நெறிகள்யாவும் ஒழுங்கு செய்து தரப்படும். உள்நாடு மற்றும் வெளிநாடுகளில் தொழில் வாய்ப்புக்களை பெற்றுக் கொள்ளக் கூடிய வகையில் கற்கை நெறிகள் வடிவமைக்கப்பட்டுள்ளன.

அனைத்து கற்கை நெறிகளும் கட்டணமின்றி நடத்தப்படுவதுடன் இக் கற்கை நெறிகளை கற்க விரும்புபவர்கள் உரிய விண்ணப்பப் படிவங்களை இலங்கை சமுத்திர பல்கலைக்கழகம், பிராந்திய நிலையம், 2 ஆம் குறுக்குத்தெரு, குருநகர், யாழ்ப்பாண அலுவலகத்தில் பெற்று 28.07.2017 ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பிக்க முடியும் என உதவிப் பணிப்பாளர் அறிவித்துள்ளார். மேலதிக தொடர்புகளுக்கு தொ.இல. 021 738 8188 , 071 834 9073, 077 375 5063 என அறிவிக்கப்பட்டுள்ளது. (இ

# விருது வழங்கும் விழா

(யாழ்ப்பாணம்)

கொமர்ஷல் வங்கியின் "அருணலு" திட்டத்தின் கீழ் 2016 ஆம் ஆண்டு தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களுக்கு விருது வழங்கும் விழா நாளை மறுதினம் 22 ஆம் திகதி சனிக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு யாழ்ப் பாணம் கொமர்ஷல் வங்கிக் கிளையில் இடம் பெறும். (இ-3)




# பழைய மாணவர் பொதுக் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

தெல்லிப்பழை யூனியன் கல்லூரியின் பழைய மாணவர் சங்க பொதுக் கூட்டம் எதிர்வரும் 30 ஆம் திகதி முற்பகல் 10 மணிக்கு பாடசாலை பிரதான மண்டபத்தில் இடம்பெறும். அனைத்துப் பழைய மாணவர்களையும் பங்கு பற்றுமாறு கேட்டுக் கொள்வதுடன் இதுவரை அங்கத்துவம் பெறாதவர்களும் விண்ணப்பத்தைப்பெற்று பூரணப்படுத்தி கலந்து கொள்ள முடியும்.

புதிய நிர்வாக தெரிவு மற்றும் கல்லூரியின் எதிர்காலத் திட்டங்கள் தொடர்பான கலந்துரையாடல் என்பன இடம் பெறவுள்ளன என அதிபர் ரி. வரதன் அறிவித்துள்ளார். (இ

## சிவபுராண தெய்வீக இசை இறுவெட்டு அறிமுக விழா

சிவபுராண தெய்வீக இசை இறுவெட்டு அறிமுக விழா இன்று வியாழக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு யாழ். இலங்கைவேந்தன் கலைக் கல்லூரி மண்டபத்தில் இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களப் பணிப்பாளர் அ.உமாமகேஸ்வரன் தலைமையில் இடம் பெறும் என யாழ். ஆனைப் பந்தி குருகுல அபிவிருத்தி உத்தியோகத்தர்ம.செந்தூரன் அறிவித்துள்ளார். (இ-7)

# சைவப்புலவர் சங்கத்தின் செயற்குழுக் கூட்டம்

அகில இலங்கை சைவப் புலவர் சங்கத்தின் செயற்குழுக் கூட்டம் நாளை மறுதினம் 22ஆம் திகதி சனிக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு யாழ். வண்ணை நாவலர் மகாவித்தி யாலயத்தில் அகில இலங்கை சைவப்புலவர் சங்கத்த தலைவர் சைவப் புலவர் மு.திருஞானசம்பந்த பிள்ளை தலைமையில் இடம்பெறும்.


இச் செயற்குழுக் கூட்டத்தில் 2017 ஆம் ஆண்டுக்கான சைவப்புலவர் இளம் சைவப்புலவர் பரீட்சை பெறுபேறு வெளியிடல், பட்டமளிப்பு விழா நடத்துதல், அமரத்துவமடைந்த சங்கத்தின் முன்னாள் செயலாளர் சைவப்புலவர் க.நித்தியதசீதரனின் பிள்ளைகளுக்கான கல்வி நிதி வழங்குதல் போன்ற விடயங்கள் தொடர்பாக கலந்துரையாடப்படவுள்ளமையினால் அனைத்து செயற்குழு உறுப்பினர்களையும் தவறாது கலந்து கொள்ளுமாறு அகில இலங்கை சைவப் புலவர் சங்க செயலாளர் சைவப் புலவர் எஸ்.ரி. குமரன் அறிவித்துள்ளார். (இ-3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

81

# நம்பிக்கையில்லாத் தீர்மானம் நடந்தது என்ன?





எவரும் எதிர்பார்த்திராத அளவில் மக்களின் எதிர்ப்பு தமிழரசுக் கட்சிக்கு இருந்ததால் அவசர அவசரமாக நிலைமையைச் சுமுகமாக்க வேண்டும் என்பதில் தமிழரசுக் கட்சித் தலைமை முயற்சி செய்தது.

கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தர் வடக்கின் முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரனுக்கு கடிதமொன்றை அனுப்பியிருந்தார். அந்தக் கடிதம் 16.06. 2017 ஆம் திகதி கிடைக்கப் பெற்றது. அதில பின்வருமாறு தெரிவிக்கப்பட்டிருந்தது.

16.06.2017

கௌரவ நீதியரசர் சி.வி.விக்னேஸ்வரன அவர்கள்,

முதலமைச்சர் - வட மாகாணம்.

அன்புக்குரிய விக்னேஸ்,

தங்கள் உரையின் பிரதியுடன் 14.06. 2017 அன்று அனுப்பியிருந்த உங்கள் கடிதத்திற்கு நன்றி.

நான் பின்வருவனவற்றைக் குறிப்பிட விருமபுகிறேன். தங்களால் அமைக்கப்பட்ட விசாரணைக்குழு நான்கு அமைச்சர்கள் தொடர்பில தமது விசாரணைகளை நடத்தியிருந்தது. விசாரணையைப் பூர்த்தி செய்து அவர்களது அறிக்கையை உங்களுக்குச் சமர்ப்பித்திருந்தார்கள். இதில் இருவர் குற்றவாளிகளாகக் காணப்பட்டுள்ள அதேவேளை, ஏனைய இருவரும் குற்றவாளிகளாகக் காணப்படவில்லை.

விசாரணைக் குழுவின் அறிக்கையின் அடிப்படையில் நீங்கள் செயற்படப் போவதாக மாகாண சபையில் தெரிவித்திருந்தீர்கள்.

குற்றவாளிகளாகக் காணப்பட்ட இரண்டு அமைச்சர்களையும் இராஜினாமா செய்யுமாறு நீங்கள் கோரிக்கை விடுத்திருந்தீர்கள். அந்தத் தீர்மானத்துக்கு எவரும் முறைப்பாடு தெரிவிக்கவில்லை.

விசாரணைக் குழுவினால் குற்றவாளிகளாகக் காணப்படாத இரண்டு அமைச்சர்களுக்கும் எதிராக நீங்கள் எடுத்த நடவடிக்கை தொடர்பிலேயே முறைப்பாடு முன்வைக்கப்பட்டுள்ளது. இந்த நடவடிக்கையானது இயற்கை நீதிக் கோட்பாடுகளுக்கு முரணானதும் பொருத்தமற்றதாகவுமே பார்க்கப்படுகின்றது.

13ஆம் திகதி செவ்வாய்க்கிழமை நான் தங்களுக்கு அழைப்பை ஏற்படுத்திப் பேசிய போது இத்தகைய நடவடிக்கை குற்றவாளிகளாகக் காணப்படாத இரண்டு அமைச்சர்களினாலும் ஏனைய மாகாண சபை உறுப்பினர்களாலும் எதிர்க்கப்படக் கூடும் எனவும் இது குறித்து அவதானமாகச் செயற்படுமாறும் கூறியிருந்தேன்.

அத்துடன், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஏனைய பங்காளிக் கட்சிகளின் தலைவர்களோடு இந்த விடயம் தொடர்பில் நீங்கள் பேசியிருந்தபோதும், பாராளுமன்ற உறுப்பினரும் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைவருமான கௌரவ மாவை.சேனாதிராசா அவர்களோடு இந்த விடயம் தொடர்பில் நீங்கள் கலந்துரையாடாமை தொடர்பிலும் எனது கரிசனையை வெளிப்படுத்தியிருந்தேன். அதன் பின்னர், அன்று நீங்கள் அவரோடு உரையாடிய போது, குற்றவாளிகளாகக் காணப்படாத அமைச்சர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படக்கூடாது என்பதனை உங்களுக்குத் தெரியப்படுத்தியிருந்தார்.

14ஆம் திகதி புதன்கிழமை, குற்றவாளிகளாகக் காணப்படாத இரு அமைச்சர்களுக்கு எதிராகவும் தண்டனை நடவடிக்கையை அறிவித்திருந்தீர்கள். அதற்குப் பிற்பாடு இடம்பெற்றவை எல்லாமே நீங்கள் மேற்கொண்ட மேற்குறித்த நடவடிக்கையின் விளைவேயாகும்.

இச் சம்பவங்களை முடிவிற்குக் கொண்டு வர வேண்டுமெனில், முதலில் குற்றவாளிகளாகக் காணப்படாத இரு அமைச்சர்கள் தொடர்பில் தேவையான திருத்த நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்பது எனது கருத்தாகும்.

அவசியமற்ற நடவடிக்கைகள் ஒற்றுமையின்மையை ஊக்குவிப்பதாகவும், வடமாகாண சபையின் நடவடிக்கைகளைப் பாதிப்பதாகவும் அமைந்துவிடக் கூடாது.

எனவே, உங்களது விசாரணைக் குழுவினால் குற்றவாளிகளாகக் காணப்படாத இரு அமைச்சர்கள் தொடர்பில் தேவையான உடனடித் திருத்த நடவடிக்கைகளை எடுக்குமாறு நான் உங்களைக் கேட்டுக்கொள்ள விரும்புகின்றேன். இது, நீங்கள் எதிர்காலத்தில் மேற்கொள்ளும் விசாரணைகளுக்கு எவ்வித தடையும் ஏற்படுத்தாது என்பதனையும் கூறிக கொள்ள விரும்புகின்றேன்.

**உண்மையுள்ள,**

**இரா.சம்பந்தன் , தலைவர்,**

**தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு**

என அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்தக் கடிதம் தொடர்பில் இரா.சம்பந்தர் அவர்களுக்கு முதலமைச்சரால் 17.06.2017 அன்று பதில் கடிதம் அனுப்பப்பட்டது. இக் கடிதம் அன்றைய தினமே இரா. சம்பந்தருக்குக் கிடைத்திருந்தது.

## தமிழர் தலைவிதி எப்படியாகும்?

முதலமைச்சரின் கடிதம் இரா. சம்பந்தருக்கு கிடைக்கும் போது அவர் தான் எழுத்து மூலம் உத்தரவாதம் தரமுடியாது எனவும் தமிழரசுக் கட்சியில் நான் ஒரு சாதாரண உறுப்பினர் மட்டுமே. ஆகையால் தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை. சேனாதிராஜாவுடன் கதையுங்கள் என்பதாக இரா.சம்பந்தனின் பதில் கடிதம் இருந்தது.

இது பொறுப்புக்கூறலில் இருந்து விலகுவதாக இருப்பதை அவதானிக்க முடிந்தது. 18. 06.2017 அன்று முதலமைச்சருக்கு சம்பந்தர் அனுப்பிய அக்கடிதத்தில் பின்வருமாறு இருந்தது.

**கௌரவ நீதியரசர் சி.வி.விக்னேஸ்வரன் அவர்கள்,**

**முதலமைச்சர்-வடக்கு மாகாணம்.**

**அன்புக்குரிய விக்னேஸ்,**

தங்களது 17.06.2017 திகதியிடப்பட்ட கடிதத்திற்கு நன்றி.

எமக்கு முன்னால் உள்ள பிரச்சினையை மட்டுமே நான் கையாளுவேன். விசாரணைக் குழுவினால் குற்றவாளிகளாகக் காணப்படாத இரண்டு அமைச்சர்களுக்கும் எதிரான தண்டனைச் செயற்பாடு நியாயப்படுத்தக் கூடியதா என்பதே அது. இரண்டு அமைச்சர்களுக்கும் எதிராக, அவர்கள் குற்றவாளிகளாகக் காணப்படாத போதிலும் நீங்கள் மேற்கொண்ட தண்டனை நடவடிக்கையே தற்போதைய குழப்பங்கள் எழக் காரணமாகியுள்ளது.

உங்களைச் சந்தித்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மூன்று கட்சித் தலைவர்களினதும் ஆலோசனைக்கு அமைவாக, ஏதேனும் விசாரணையின்போது இரண்டு அமைச்சர்களினதும் நடத்தை தொடர்பாக நான் ஓர் உத்தரவாதத்தைத் தந்தால், குறித்த அமைச்சர்கள் இருவர் தொடர்பான திருத்த நடவடிக்கையை எடுக்க வேண்டும் என்ற எனது கருத்தை, கட்சித் தலைவர்களும் ஆதரிப்பார்கள் என்ற ஆலோசனையைக் கூறியுள்ளீர்கள்.

விசாரணை தொடர்பாக இரண்டு அமைச்சர்களினதும் நடத்தையையிட்டு நான் உத்தரவாதமளிக்க வேண்டுமென்று எவ்வாறு ஆலோசனை தெரிவிக்கப்பட்டுள்ளது என்பதை என்னால் விளங்கிக் கொள்ள முடியவில்லை. அத்தகைய உத்தரவாதமொன்றை நிச்சயமாக நான் தரப் போவதில்லை. நான் ஏற்கெனவே தெரிவித்திருந்தபடி இயற்கை நீதிக் கோட்பாடுகளுக்கு மாறான தங்களுடைய நடவடிக்கையின் தொடர்ச்சியாக மாகாண சபையில் ஏற்பட்டுள்ள குழப்ப நிலைமையைச் சீர் செய்வதற்காகவே நான் எனது ஒத்துழைப்பை நல்க முயற்சிக்கின்றேன்.

எனினும், ஒரு சட்டரீதியான, சுதந்திரமான விசாரணைக்குத் தடைகள் எதனையும் ஏற்படுத்தக்கூடாது என நான் குறித்த இரு அமைச்சர்களுக்கும் நிச்சயமாக ஆலோசனை கூறுவேன்.

இந்த விடயம் மேலும் தாமதப்படுத்தக் கூடியதென நான் கருதவில்லை. ஆதலால் தாங்கள் தாமதமின்றிச் செயற்பட வேண்டும்.

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் செயற்பாடுகளில் எனது செல்வாக்கைச் செலுத்த வேண்டிய தேவையுள்ளதாகத் தாங்கள் குறிப்பிட்டுள்ளீர்கள். இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தற்போதைய தலைவராக மாவை சேனாதிராசா அவர்களும், தற்போதைய செயலாளர் நாயகமாக கே.துரைராஜசிங்கம் அவர்களும் உள்ளனர். இ.த.அ.கட்சியின் மத்திய செயற்குழு ஒழுங்காகக் கூடுகின்றது.

நான் இ.த.அ.கட்சியின் ஒரு சிரேஷ்ட உறுப்பினர் என்பதோடு, ஒரு காலத்தில் அதன் தலைவராகவும் இருந்தேன். தந்தை செல்வநாயகம் அவர்கள் தலைமைதாங்கிய இலங்கைத் தமிழரசுக் கட்சியும், தமிழர் விடுதலைக் கூட்டணியுமே எப்பொழுதும் எனக்கு உரித்தான அரசியல் இயக்கங்களாகும்.

வடக்கு மாகாணத்துக்கான முதலமைச்சர் வேட்பாளராகத் தங்களைத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தீர்மானித்து அதனைத் தங்களுக்குத் தெரிவித்தவேளையில், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் எல்லாத் தலைவர்களின் முன்பாகவும் மாவை சேனாதிராசாவிடம் நீங்கள் கூறினீர்கள், வடமாகாண சபையின் நிர்வாகத்தை நடத்திச் செல்வதில் அவரது வழிகாட்டலும் அரசியல் ஆலோசனைகளும் உங்களுக்குத் தேவைப்படும் என்பதாக. இது அவ்வாறே நிறைவேற்றப்பட்டதா என்பதைச் சிலவேளை நீங்கள் உங்களையே கேட்டுக் கொள்ளலாம்.

மாவை சேனாதிராசா அவர்கள் எமது மக்களுக்காகவும் கட்சிக்காகவும் பல தியாகங்களைச் செய்த, அதிக துயரங்களை அனுபவித்த ஒரு தலைவராவார். இத்தகைய பெறுமதி வாய்ந்தவர்கள் ஓரங்கட்டப்படக் கூடாது.

எவ்வாறாயினும், இ.த.அ.கட்சியின் செயற்பாடுகளில் எனது சாதகமான செல்வாக்கைப் பிரயோகிக்க முயலுவேன் என்ற உத்தரவாதத்தை உங்களுக்குத் தருகின்றேன்.

தங்களால் மேற்கொள்ளப்பட வேண்டியுள்ள திருத்த நடவடிக்கைகள் தாமதியாது எடுக்கப்பட வேண்டும்.

**உண்மையுள்ள,**

**இரா.சம்பந்தன்,தலைவர்,**

**தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு**

என அக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

கடிதங்கள் பரஸ்பரம் பரிமாறிக் கொள்ளப்பட்டாலும் மக்களின் கொதிநிலை அடங்கியதாகத் தெரியவில்லை.

முதலமைச்சர் விக்னேஸ்வரனுக்கு எதிராக தமிழரசுக் கட்சி கொண்டுவந்த நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை தமிழ் மக்கள் ஒருபோதும் மன்னிக்கமாட்டார்கள்.

எனவே இதற்குரிய பிராயச்சித்தம் செய்யாவிட்டால் தமிழரசுக் கட்சி அதளபாதாளத்தில் வீழ்ந்து விடும் என்ற கருத்தியலை கட்சியின் பற்றாளர்கள் கட்சித் தலைமைக்கு எடுத்தியம்பினர்.

இந்நிலையில் நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை வாபஸ் பெறுவதுதான் ஒரேவழி என்று கட்சித் தலைமை முடிவு செய்தது. இதற்கு கட்சியில் இருக்கக்கூடிய சிலர் மௌனமாக தமது எதிர்ப்பை வெளியிட்டனராயினும் அவை எதுவும் எடுபட

(வளரும்)

-புருசோத்தமன்-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரணைமடு குளத்தில் சட்டவிரோத மீன்பிடி வலைகளை தடை செய்க



கிளிநொச்சி இரணைமடு குளத்தின் கீழ் 150 இற்கு மேற்பட்ட மீனவ குடும்பங்கள் தமது வாழ்வாதாரத்தை முன்னெடுத்து வருகின்ற னர். குறித்த குளத்தின் நீர் மட்டம் வெகுவாக குன்றவடைந்துள்ள நிலையில் மீனவர்களும் பெரும் பாதிப்பை எதிர்கொண்டுள்ளனர்.

இதேவேளை குறித்த குளத்தில் தடை செய்யப்பட்ட தங்கூசி வலையைப் பயன்படுத்தி சில மீனவர்கள் மீன் பிடியில் ஈடுபட்டு வருவதாக தெரிவிக்கப்படுகின்றது.

இதனால் சிறிய மீன்களும் பிடிக் கப்பட்டு வருவதாகவும் எதிர்காலத்தில் மீன்பிடிக்கு சவால் விடும் வகையில் அவர்களின் செயற்பாடு உள்ளதாகவும் கவலை தெரிவிக்கின்றனர்.

இவ்விடயம் தொடர்பில் சம்பந்தப்பட்ட திணைக்களங்களின் கவனத்திற்கு கொண்டு சென்றும் குறித்த மீன்பிடி முறை தடைசெய்யப்படவில்லை என தெரிவி க்கும் பாதிக்கப்பட்ட மீனவர்கள், உடனடியாக சம்பந்தப்பட்டவர்கள் தலையீடு செய்து நடவடிக்கை எடுக்க வேண்டும் என கோரிக்கை விடுக்கின்றனர். (2-15)




# 2,703 குடும்பங்களுக்கு வீடுகள் தேவை

## கண்டாவளை பிரதேச செயலர் தெரிவிப்பு

(கிளிநொச்சி )

கிளிநொச்சி - கண்டாவளை பிரதேச செயலாளர் பிரிவில் மீள்குடியேறியுள்ள சுமார் 2 ஆயிரத்து 703 குடும்பங்களுக்கு வீடுகள் அமைத்துக்கொடுக்க வேண்டிய தேவை காணப்படுவதாக கண்டாவளைப் பிரதேச செயலர் ரீ.முகுந்தன் தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சி கண்டாவளைப் பிரதேச செயலாளர் பிரிவின் கீழ் உள்ள 16 கிராம அலுவலர் பிரிவுகளிலும் 8 ஆயிரத்து 314 குடும்பங்களைச் சேர்ந்த 25 ஆயிரத்து 969 பேர் வரையில் இதுவரை மீள்குடியேறியுள்ளனர்.

கண்டாவளைப் பிரதேசத்தில் மீள்குடியேறியுள்ள 8 ஆயிரத்து 314 குடும்பங்களில் இதுவரை 5 ஆயிரத்து 278 குடும்பங்களுக்கான வீட்டுத்திட்டங்கள் வழங்கப்பட்டுள்ளன.

இதேவேளை, 2 ஆயிரத்து 703 புதிய வீடுகளையும் பகுதியளவில் சேதமடைந்த 333 வீடுகளை புனரமைத்தும் கொடுக்க வேண்டிய தேவை காணப்படுவதாகவும் கண்டாவளைப் பிரதேச செயலர் ரீ.முகுந்தன் தெரிவித்துள்ளார். (2)

# குரங்குகளை கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும்

கிளிநொச்சி, பச்சிலைப்பள்ளி பிரதேசத்தில் பொதுமக்களுக்கு அச்சுறுத்தல் விடுக்கும் குரங்குகளை கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும் என அப்பிரதேச மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

கிளிநொச்சி, பச்சிலைப்பள்ளிப் பிரதேச செயலர் பிரிவின் கீழ் உள்ள பளை நகரம் மற்றும் அதனை அண்டிய பகுதிகளில் குரங்குகளின் தொல்லை அதிகளவில் காணப்படுகின்றது.

இதனைக் கட்டுப்படுத்த அதிகாரிகள் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என அப்பகுதி மக்கள் அண்மையில் இடம்பெற்ற ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டத்தில் கோரிக்கை விடுத்துள்ளனர்.

அண்மையில் பச்சிலைப்பள்ளி பிரதேச செயலக கட்டடத்திற்குள் புகுந்த குரங்குகள் அலுவலக பொருட்களையும் சேதமாக்கியுள்ளது என பச்சிலைப்பள்ளி பிரதேச செயலர் இதன்போது தெரிவித்துள்ளார்.

இப்பகுதியில் பொதுமக்களின் வீட்டிற்குள் நுழைந்த குரங்குகள் பல பெறுமதியான் பொருட்களை சேதமாக்கி வருவதுடன் பெண்கள் சிறுவர்களையும் அச்சுறுத்தி வருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே, இதனைக் கட்டுப்படுத்த உரிய அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் பல்வேறு தரப்பினரும் கோரிக்கை விடுத்துள்ளனர். இதேவேளை குறித்த கலந்துரையாடலில் வனஜீவராசிகள் திணைக் களத் தரப்பினர் கலந்து கொள்ளவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (2)

# 134 ஆவது நாளாகவும் போராட்டம் தொடர்கின்றது




(பனிக்கன்குளம்)

தமது உறவுகளுக்கு என்ன நடந்தது? அவர்கள் இருக்கிறார்களா? இல்லையா? என்று பதில் கூறும் வரை தமது போராட்டத்தை கைவிடப்போவதில்லை என தொடர் போராட்டத்தில் ஈடுபட்டுவரும் காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் வலியுறுத்தியுள்ளனர்.

வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் நேற்றுடன் 134 ஆவது நாளாக முல்லைத்தீவு மாவட்ட செயலகம் முன்பாக கூடாரம் அமைத்து போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

இறுதிக்கட்ட யுத்தத்தின்போது சரணடைந்த, இராணுவத்திடம் கையளித்த கைது செய்யப்பட்ட மற்றும் யுத்த காலத்தில் கடத்தப்பட்டு காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்கள் தமது உறவுகள் தொடர்பில் உரிய தீர்வை முன்னெடுக்குமாறு வலியுறுத்தி தொடர் கவனயீர்ப்பு போராட்டத்தை முன்னெடுத்துள்ளனர்.

இந்த நிலையில் தொடர் போராட்டத்தில் ஈடுபட்டுவரும் தமக்கு அரசாங்கம் எவ்வாறான பதிலை வழங்கப்போகின்றது என தொடர் போராட்டத்தில் ஈடுபட்டுள்ள உறவுகள் கேள்வி எழுப்பியுள்ளனர்.

இந்நிலையில் உடனடியாக தமது பிள்ளைகள் இருக்கிறார்களா? இல்லையா? அவர்களுக்கு என்ன நடந்தது என்ற பதிலை தர வேண்டுமென கேட்டுக்கொண்டுள்ளனர். (2-281)

# முல்லை.- பரந்தன் வீதியில் மோட்டார் சைக்கிள்கள் விபத்து

## இருவர் படுகாயம்

(மல்லாவி )

தருமபுரம் பொலிஸ் நிலையப் பிரிவில் பரந்தன்-முல்லைத்தீவு வீதியில் உள்ள கண்டாவளை பிரதேச செயலகத்திற்கு முன்பாக இரண்டு மோட்டார் சைக்கிள்கள் ஒன்றுடன் ஒன்று மோதுண்டு விபத்துக்குள்ளானதில் இரண்டு பேர் படுகாயம் அடைந்த நிலையில் மீட்கப்பட்டு தர்மபுரம் பிரதேச வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நிலையில் மேலதிக சிகிச்சைக்காக கிளிநொச்சி மாவட்ட பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக தருமபுரம் பொலிஸ் நிலையத் தகவலில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இச்சம்பவம் நேற்றுக்காலை 8.30 மணியளவில் நடைபெற்றுள்ளது. இது தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது.

பரந்தனில் இருந்து முல்லைத்தீவு நோக்கிய வீதி வழியாக கண்டாவளை பிரதேச செயலகத்திற்கு மோட்டார் சைக்கிளில் பயணித்த புன்னை நீராவி கிராம அலுவலர் கண்டாவளை பிரதேச செயலக பக்கமாக வீதியை ஊடறுத்துச் செல்ல முயன்ற வேளை பின்னால் மோட்டார் சைக்கிளில் பயணித்த பெண் ஒருவர் சடுதியாக வேகத்தை குறைக்க முடியாமல் கிராம அலுவலரின் மோட்டார் சைக்கிளுடன் மோதுண்டு தூக்கி வீசப்பட்டுள்ளார்.

இந்நிலையில், வீதியால் சென்ற பொது மக்களினால் படுகாயமடைந்த இருவரும் மீட்கப்பட்டு தர்மபுரம் பிரதேச வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நிலையில் மேலதிக சிகிச்சைக்காக கிளிநொச்சி மாவட்ட பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இந்த விபத்துச் சம்பவத்தில் புன்னை நீராவி கிராம அலுவலர் எஸ். அம்பிகை பாலன் (வயது 33), இந்துசர்மா வியதாரணி (வயது 19) ஆகிய இருவருமே மோட்டார் சைக்கிள் விபத்துச் சம்பவத்தில் படுகாயமடைந்தவர்களாவர்.

இந்த விபத்துச் சம்பவம் தொடர்பில் தகவல் கிடைத்து சம்பவ இடத்துக்கு சென்ற தருமபுரம் பொலிஸார் சிறிது நேரம் தடைப்பட்டிருந்த போக்குவரத்து சேவைகளை சீர்படுத்தியதுடன் விபத்துக்குள்ளான மோட்டார் சைக்கிள்களை பொலிஸ் நிலையத்திற்கு எடுத்துச் சென்றதுடன் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (2-15)



பூநகரி பிரதேச கலாசாரப் பேரவையின் ஏற்பாட்டில் நடத்தப்பட்ட ஆடிப்பிறப்பு விழா பூநகரி பிரதேச செயலர் சி.ச.கிருஸ்ணேந்திரன் தலைமையில் பூநகரி நல்லூர் மேளாய் அம்மன் ஆலய மண்டபத்தில் நேற்று முன்தினம் நடைபெற்றது. பாரம்பரிய முறைப்படி உரலில் பெண்களால் மாவிடிக்கப்பட்டது. இந்நிகழ்வில் பாடசாலை மாணவர்கள், ஆசிரியர்கள், பெற்றோர்கள் பிரதேச செயலக அனைத்து அலுவலர்கள் ஆகியோர் கலந்து சிறப்பித்தனர். கலை நிகழ்ச்சிகள் நடைபெற்றதுடன் பாடசாலை ரீதியாக ஆடிப்பிறப்பையொட்டி நடத்தப்பட்ட போட்டிகளில் வெற்றி [illegible] பரிசில்கள் வழங்கப்பட்டன. (படங்கள்:-பூநகரி செய்தியாளர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாக்குறுதிகள் வழங்கப்பட்ட போதிலும் இதுவரை நிறைவேற்றவில்லை

## உறவுகள் கவலை





(பரந்தன்)

கிளிநொச்சி கந்தசுவாமி ஆலய முன்றலில் ஆரம்பிக்கப்பட்டு காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்களின் போராட்டம் நேற்றுடன் 150 ஆவது நாளை எட்டியுள்ளது.

150 ஆவது நாளாக தொடர்ச்சியாக இரவு பகலாக காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் கவனயீர்ப்புப் போராட்டத்தை மேற்கொண்டு வருகின்றனர்.

நல்லாட்சி அரசின் ஜனாதிபதி கூட காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்களை சந்தித்து பல வாக்குறுதிகளை வழங்கிய போதும் அது இதுவரை நிறைவேற்றப்படவில்லை இந்த நிலையில் எவ்வித உறுதிப்பாடுகளும் இல்லாது 150 ஆவது நாளாக போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர். (2-312)






வவுனியா தமிழ் மன்றின் ஏற்பாட்டில் விபுலானந்த அடிகளாரின் 70 ஆவது நினைவு தினம் வவுனியா இரண்டாம் குறுக்குத் தெருவில் அமைந்துள்ள திருவுருவச் சிலையடியில் நேற்று காலை 9.30 மணியளவில் நடைபெற்ற போது... (படங்கள்- ஓமந்தை செய்தியாளர்)

# புதுஐயங்குளத்தின் நீர்மட்டம் குறைவு நீர் இறைக்கும் இயந்திரங்கள் மூலம் வயல்களுக்கு நீர் பாய்ச்சல்



(மல்லாவி)

கிளிநொச்சி மாவட்டத்தில் தொடரும் கடும் வரட்சியுடனான காலநிலை காரணமாக குளங்களின் நீர்மட்டம் வெகுவாக குறைவடைந்துள்ளது. இதனால் குளங்களை நம்பி செய்கை பண்ணப்பட்ட பயிர்ச்செய்கைகளும் பாதிக்கப்பட்டுள்ளன. கிளிநொச்சி மலையாளபுரம் பகுதியில் அமைந்துள்ள புதுஐயங்குளத்தின் நீர்மட்டம் வெகுவாக குறைவடைந்துள்ளது. குளத்தில் நீர் வற்றியுள்ளமையால் துருசு ஊடாக நீரை பயிர்செய்கை நிலங்களிற்கு அனுப்புவதற்கு நீர் இறைக்கும் இயந்திரங்களை விவசாயிகள் பயன்படுத்தி வருகின்றனர்.

குளத்தின் நீர்மட்டம் துருசு பகுதிக்கு கீழாக காணப்படுவதால் விவசாயிகள் நீர் இறைக்கும் இயந்திரங்களை பயன்படுத்தி தமது பயிர்களை பாதுகாக்கும் செயற்பாட்டில் ஈடுபட்டுள்ளனர். கடும் வரட்சி காரணமாக குளத்தின் நீர்மட்டம் குறைவடைந்துள்ளது. இதனால் குறித்த குளத்தினை நம்பி செய்கை பண்ணப்பட்ட 40 ஏக்கர் சிறு தானிய செய்கையும், 20 ஏக்கர் நெற்செய்கையும் பாதிக்கப்படும் அபாயம் உள்ளதாக விவசாயிகள் கவலை தெரிவிக்கின்றனர். நீர் இறைக்கும் இயந்திரங்களை பயன்படுத்தி பெரும் செலவுடன் தமது பயிரை முடியுமான வரை பாதுகாக்கும் முயற்சியில் ஈடுபட்டுள்ளதாக தெரிவிக்கும் விவசாயிகள், தமது முயற்சியை அவதானித்த நீர்பாசன திணைக்களம் தமக்கொரு நீர் பம்பியை தந்துள்ளதாக தெரிவிக்கின்றனர்.

இருப்பினும் நீர் இறைக்கும் இயந்திரத்தினை பயன்படுத்தி பயிர்ச்செய்கையை முழுமைப் படுத்த முடியும் என்ற நம்பிக்கை இல்லை எனவும், ஒரு முயற்சியாகவே செய்வதாகவும் விவசாயிகள் குறிப்பிடுகின்றனர். பாதிக்கப்பட்டுள்ள தமக்கு உதவ முன்வர வேண்டும் எனவும் விவசாயிகள் கோரிக்கை விடுக்கின்றனர். (2-15)

# 2 கோடியே 77 இலட்சம் ரூபா நிதியில்

## நீர்ப்பாசனக் குளங்கள், கால்வாய்கள் புனரமைப்பு முன்னாயத்தப்பணிகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன

### பாண்டியன்குளம் கமநல அபிவிருத்தி உத்தியோகத்தர் தெரிவிப்பு

(மல்லாவி)

பாண்டியன் குளம் கமநல சேவை நிலையத்தின் கீழ் உள்ள 9 நீர்பாசனக் குளங்களின் புனரமைப்பு வேலைகளுக்கும் மற்றும் நீர்ப்பாசனக் கால்வாய்கள் புனரமைப்பு ஆகிய வேலைகளுக்காக 2 கோடியே 77 இலட்சம் ரூபா நிதி கிடைக்கப் பெற்று வேலைகள் ஆரம்பிப்பதற்கான முன்னாயத்த பணிகள் நடைபெற்று வருவதாக பாண்டியன் குளம் கமநல சேவை நிலையத்தின் கமநல அபிவிருத்தி உத்தியோகத்தர் நாகராஜா சுஜீபரூபன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

தேசிய மற்றும் ஒருமைப்பாட்டுக்கான நல்லிணக்க அமைச்சின் நிதி ஒதுக்கீடு 65 இலட்சம் ரூபா மாந்தைக் கிழக்கு பிரதேச செயலகம் ஊடாக கிடைக்கப் பெற்றுள்ளது.

இந்த நிதி மூலம், வடகாடு குளம் 50 இலட்சம் ரூபா செலவிலும், கிடாய்பிடித்தகுளம் புனரமைப்பு வேலைகள் 15 இலட்சம் ரூபா செலவிலும் நடைபெறவுள்ளது.

இதேவேளை, அனர்த்த முகாமைத்துவ அமைச்சின் 65 இலட்சம் ரூபா நிதி முல்லைத்தீவு மாவட்ட கமநல அபிவிருத்தித் திணைக்களத்தின் ஊடாகக் கிடைக்கப் பெற்றுள்ளது.

இந்த நிதியுதவியுடன் கல்லிருப்புக் குளம் புனரமைப்பு வேலைகள் நடைபெறவுள்ளது.

மீள் குடியேற்ற அமைச்சின் நடப்பாண்டுக்குரிய நிதியொதுக்கீடான ஒரு கோடியே 50 இலட்சம் ரூபா நிதி மாந்தைக் கிழக்கு பிரதேச செயலகம் ஊடாக பாண்டியன்குளம் கமநல சேவை நிலையத்திற்கு கிடைக்கப் பெற்றுள்ளது.

இந்த நிதி மூலம்வன்னிவிளான்குளம் புனரமைப்பு 24 இலட்சம் ரூபா செலவிலும் கிடாய்பிடித்தகுளம் புனரமைப்பு 27 இலட்சம் ரூபா செல்விலும் புதுக்குளம் புனரமைப்பு 30இலட்சம் ரூபா செலவிலும் சிராட்டி குளம் புனரமைப்பு 16 இலட்சம் ரூபா செலவிலும் இளமருதங்குளம் புனரமைப்பு 25 இலட்சம் ரூபா செலவிலும் தெகிழங்குளம் புனரமைப்பு 30 இலட்சம் ரூபா செலவிலுமாக மொத்தம் ஒரு கோடியே 50 இலட்சம் ரூபா செலவில் புனரமைப்பு பணிகள் நடைபெறவுள்ளது.

மேற்படி குளங்களின் புனரமைப்பு பணிகள் நடைபெறவுள்ள பகுதி கமக்கார அமைப்புக்களின் பிரதிநிதிகள் மற்றும் விவசாயிகள் இணைந்து குள வேலைகள் தொடர்பில் கண்காணிப்பு செய்வதுடன், வேலைகளில் ஏதும் குறைபாடுகள் காணப்படின் நேரடியாகவோ அல்லது தபால் மூலமாகவோ தனக்கு உடனடியாக அறியத் தருமாறு பாண்டியன் குளம் கமநல அபிவிருத்தி உத்தியோகத்தர் தெரிவித்துள்ளார். (2-15)

# பூநகரி ஒருங்கிணைப்புக் குழு கூட்டத்தில் பல்வேறு பிரச்சினைகள் குறித்து ஆராய்வு





பூநகரி பிரதேச செயலக ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் நேற்று முன்தினம் பிற்பகல் 2 மணியளவில் இணைத் தலைவர்களான பாராளுமன்ற உறுப்பினர்களான மாவை சேனாதிராஜா, அங்கஜன் இராமநாதன், இராஜாங்க அமைச்சர் விஜயகலா மகேஸ்வரன் ஆகியோர் தலைமையில் பூநகரி பிரதேச செயலக மகாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் வடமாகாண பாராளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரன் வடக்கு மாகாண சபை உறுப்பினர்களான ப. அரியரத்தினம், சு. பசுபதிப்பிள்ளை புனர்வாழ்வு அமைச்சர் அனந்தி சசிதரன் ஆகியோரும் சமூகமளித்திருந்தனர்.

பூநகரிப் பிரதேச செயலர் சி.ச. கிருஷ்ணேந்திரனின் வரவேற்புரையுடன் நிகழ்வுகள் ஆரம்பமாகியது. இதன் போது மாவட்டத்தின் சகல திணைக்களத் தலைவர்களும் சமூகமளித்திருந்தனர். பொது அமைப்புக்களின் பிரதி நிதிகள், மைப்புக்களின் நிர்வாகிகள் என நூற்றுக் கணக்கானோர் சமூகமளித்து ஒவ்வொருதுறை சார்ந்த பிரச்சினைகள் பற்றி ஆராய்ந்ததுடன் பல தடவைகள் வாக்குவாதங்களும் நடைபெற்றது.

வீட்டுத் திட்டம் வழங்கலில் ஏற்படும் பிரச்சினைகள் கடற்றொழிலாளரின் வாழ்வாதாரப் பிரச்சினைகள், இரணைதீவு மக்கள் தமது சொந்த நிலத்திற்கு சென்று மீளவும் குடியேற முடியாமல் தடை செய்வது எவ்வகையில் நியாயமானது எனவும் இதற்கு அரசியல் வாதிகளோ அதிகாரிகளோ உரிய நடவடிக்கையை தீவிரப்படுத்தாமல் இருப்பது சம்பந்தமாக கடற்றொழிலாளர் சங்க சமாசத் தலைவர் முறையிட்டதுடன் வேண்டிய நடவடிக்கையை எடுக்க வேண்டுமெனவும் கேட்டுக் கொண்டார். பல விடயங்களில் தாக்கம் ஏற்பட்ட நிலையில், நேரங் கடந்த காரணத்தால் இணைத் தலைவர்கள் கூட்டத்தை ஒத்தி வைத்ததுடன் விரைவில் கூட்டத்தை கூட்ட நடவடிக்கை எடுக்கப்படுமெனவும் தெரிவிக்கப்பட்டது. (2-84)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கலைத் தரிசனம்



1973.07.08 ஆம் திகதி நீர்வேலியில் பிறந்தார். கீபோட், ஆர்மோனியம், தபேலா, டோல்கி, தவில், உடுக்கு போன்ற கருவிகளை இசைப்பவராகவும் உள்ளார். இவர் பாரம்பரியக் கலைகளான கோலாட்டம், கும்மி, காவடி, கரகம் போன்ற கலைகளையும் பயிற்றுவித்து மேடையேற்றி வருகின்றார். தற்பொழுது பல இடங்களில் இசை வகுப்புக்களை நடத்தி வருகின்றார். அதிலும் குறிப்பாக வள்ளிபுனம் இனிய வாழ்வு இல்லத்தின் மாற்றுத் திறனாளிகளுக்கு இசை வகுப்புக்களை வழங்கி வருகின்றார். 1993 ஆம் ஆண்டு இவரின் சகோதரி துவிச்சக்கரவண்டியில் உள்ள டைனமோவை சுற்ற அதிலிருந்து கிடைத்த மின்சாரத்தின் மூலம் ஓகனைப் பழகிக்கொண்டார். இவரின் கலைப் பணியைப் பாராட்டி கரைதுறைப்பற்று பிரதேச செயலகமும் வன்னிக்குரோஸ் கலாசார பேரவையும் AVT திரைப்படத் தயாரிப்பு நிறுவனமும் பாராட்டிக் கௌரவித்துள்ளது. இசையமைப்பாளர் ச. பருதி அவர்கள் தன்னைப் பற்றியும் தன் கலைப் பணி பற்றியும் வலம்புரிக்கு வழங்கிய கருத்துக்களை இங்கு தருகிறோம்.

## இசையமைப்பாளர் ச.பருதி அவர்களுடனான சந்திப்பு

## ‘சைக்கிள் டைனமோக் கரண்டில் ஓகன் வாசிக்க கற்றுக் கொண்டேன்’

**❖ கலைத்துறையில் எவ்வாறு கால்பதித்தீர்கள்?**

1990 ஆம் ஆண்டு காலப் பகுதியில் யாழ். ஊரெழுப் பகுதியில் யாழ். மாவட்ட கிராமிய உழைப்பாளர் சங்கம் இயங்கி வந்தது. இதற்குப் பொறுப்பாக முரளி என்பவர் இருந்தார். இவர் நிர்வாகங்களை வழி நடத்தக் கூடியவராகவும் அத்தோடு நாடக நடிகனாகவும் நாடக ஆசிரியராகவும் இருந்தார். இவருடன் இணைந்து பாதிக்கப்பட்ட சிறுவர்களின் பாதுகாப்புக்காக ஏழு பிள்ளை நல்ல தங்காள் என்ற நாடகத்தை பல இடங்களில் நடத்தி வந்தோம். அதில் நடிகனாகவும் தோல் வாத்திய கருவி (டோல்கி) வாசிப்பவராகவும் செயற்பட்டு வந்தேன். தோல் வாத்திய கருவி நான் முறைப்படி பழகவில்லை. எனது உடன் பிறவா சகோதரர்கள் நான்கு பேர். இன்று டோல்கி, தபேலா, மிருதங்கம், றம்ஸ், தவில் போன்ற இசைக் கருவிகளை இன்றும் இயக்கிக் கொண்டிருக்கிறார்கள். எனது உறவினர்களின் இசைப் பயணம் தான் என்னை கலைத்துறைக்கு அழைத்துச் சென்றது.

**❖ தாங்கள் பல்துறை விற்பனராக இருக்கிறீர்கள். இத்துறைகளை எங்கிருந்து கற்றீர்கள்?**

1993 இடம்பெயர்வின் பின்னர் மாங்குளம் பகுதியில் கத்தோலிக்க தேவாலயம் ஒன்றில் ஓகன், கிற்றார், ஆர்மோனியம் போன்ற கருவிகளை இலங்கேஸ் ஆசிரியர் அவர்களால் கற்பிக்கப்பட்டு கொண்டு இருந்தது. அப்போது கிளிபாதர் அவர்களின் உதவியோடு சென்று பழகினேன். 1993 ஆம் ஆண்டு மின்சாரம் இல்லை. என்னிடம் (CASIO) 85 என்ற ஒரு சிறிய ஓகன் இருந்தது. எனது மூத்த சகோதரி துவிச்சக்கரவண்டியில் உள்ள டைனமோவை சுற்ற அதில் இருந்து கிடைக்கிற மின்சாரம் மூலம் ஓகனை பழக கற்றுக் கொண்டேன்.

ஏனைய வாத்திய இசைக் கருவிகளை கேள்விஞானம் மூலம் கற்றுக் கொர்ண்டேன். தொடர்ச்சியாக இவ் இசைக் கருவிகளை பிரதேச நிகழ்வுகளின் போது பயன்படுத்தி வருகின்றேன்.

**❖ தற்போது எங்கெங்கு இசை வகுப்புக்களை நடத்தி வருகிறீர்கள்?**

தற்போது இரண்டு வருடங்களாக செரண்டிப் சிறுவர் இல்ல நுண்கலைக் கல்லூரி, முள்ளியவளை ஊற்றங்கரை ஆலய கல்யாண மண்டபத்தில் நாற்பதுக்கு மேற்பட்ட மாணவர்கள் பயிற்சி பெற்று வருகின்றனர். இன்னும் பலமாணவர்கள் தொடர்ச்சியாக பயிற்சி பெற முடியாத நிலையில் பல்கலைக்கழகம் சென்றிருக்கிறார்கள்.

அத்தோடு முள்ளிவளை பாரதி சிறுவர் இல்லத்தில் பத்துக்கு மேற்பட்ட மாணவர்கட்கு மூன்று மாத காலம், புதுக்குடியிருப்பில் செரண்டிப் சிறுவர் இல்லத்தால் நான்கு மாதம் வரை நடத்தப்பட்ட பயிற்சியின் போது இருபதிற்கும் மேற்பட்ட மாணவ்கள்பயிற்சிபெற்றுவந்தனர்.

தற்போது அங்கு சரியான அடிப்படை வசதிகள் இல்லாத காரணத்தால் இடைநிறுத்தப்பட்டுள்ளது. மேலும் வள்ளிபுனம் இனிய வாழ்வு இல்லத்தில் பார்வை இழந்த பல மாணவர்களுக்கு பயிற்சி வழங்கப்பட்டு வருகிறது. அத்தோடு சிறப்பாகவும் பல மாணவர்களுக்கு இந்த ஓகன் பயிற்சியை வழங்கி வருகின்றேன்.

**❖ தங்களின் பாரம் பரிய கலையைப் பற்றி குறிப்பிடுங்கள்?**

பாரம்பரிய கலைகளான கோலாட்டம், கும்மி, காவடி, கரகம் போன்ற நிகழ்வினை 2005, 2006 ஆண்டு காலப்பகுதியில் ஒலுமடு, அம்பகாமம், புலுமச்சிநாதகுளம், மாங்குளம், புதுக்குடியிருப்பு குமுழமுனை போன்ற பிரதேசங்களில் மாணவர்கள், இளைஞர்கள் போன்றோருக்கு பயிற்சியளித்து அந்தந்த பிரதேசத்தில் நிகழ்வுகளாக வழங்கியிருக்கிறேன். அண்மையில் இனியவாழ்வு சிறார்களுக்கு எமது பாரம்பரிய கலைகள் அழிந்து போகுது என்ற தலைப்பில் வில்லிசை ஒன்றையும் நடத்தி இருக்கிறேன். தற்போது பாரம்பரிய கலையைப் பாதுகாப்போம் என்ற தலைப்பில் வில்லிசை ஒன்றையும் எழுதி முடித்துள்ளேன். அத்தோடு **ஊமையான உண்மைகள்** என்ற சிறுகதை ஒன்றை எழுதி முடித்துள்ளேன். வெகு் விரைவில் வெளியிட இருக்கிறேன். கரைதுறைப் பற்று கலாசார பேரவையில் இணைந்து பிரதேச ரீதியாக மூத்த, இளம் கலைஞர்களையும் கௌரவித்து வருகிறேன். தொடர்ச்சியாக மாவட்ட ரீதியாக மூத்த, இளம், கலைஞர்களும் மதிப்பளிக்கப் பட இருக்கிறார் கள்.

**❖ இன்றைய மாணவர்களிடம் இசையை பயிலுவதற்கான ஆர்வம் எப்படி இருக்கிறது?**

ஆரம்ப காலங்களில் இருந்த ஆர்வம் தற்போது இல்லை, பொறுமையாக இருந்து கற்கக் கூடியமனநிலைதற்போதுஇல்லை. கட்டாயப்படுத்தி கற்பிப்போமாக இருந்தால்நாளைக்கு அவர்களை காண முடியாது. ஓரிரு வாரங்கள் வகுப்பிற்கு வந்து ஒரு சில பாடல்களில்தடங்கல்கள் ஏற்படும் போதுதங்களிற்குவிருப்பம்இல்லை என்ற சொல்லை பாவித்து நின்று விடுகிறார்கள். ஒருசில பெற்றோர் பாடம் முடியும் வரை நின்று கூட்டிச் செல்கிறார்கள். இந்த மாணவர்கள் கேட்கின்ற அவர்களுக்கு விருப்பமான பாடலை சொல் லிக் கொடுத்தால் ஆர்வமாக கற்கிறார்கள் இவ்வாறு கொண்டு சென்றால் மட்டும் தான் தொடர்ந்து முன்னேற முடியும்.

**❖ இறுதியாக நீங்கள் கலையுலகிற்கு மனம் திறந்து கூறுவது?**

இன்று பாரம்பரிய கலை யை பாதுகாத்து வந்த எத்தனையோ கலைஞர்கள் ஒதுங்கியிருக்கிறார்கள். துறைசார்ந்தவர்கள் அவர்களுக்கான கலைஞர் மகாநாடு ஒன்றை நடத்தி அவர்களுக்கான குறைகளை இனங்கண்டுநிவர்த்திசெய்வதன் மூலம் தொடர்ச்சியாக பாரம்பரிய கலைகளை பாதுகாக்க முடியும். எத்தனையோகலைஞர்கள் தங்களது இசைப் பயணத்தை தொடர வாத்தியக் கருவிகள் இல்லாமல் இருக்கிறார்கள். இவ்வாறான கலைஞர்களுக்கு நாளாந்தம் மீனைக் கொடுப்பதைவிட மீன் பிடிக்க கற்றுக் கொடுப்பது சிறந்தது போல் அவர்களுக்கான இசைக் கருவிகளை வழங்கி ஊக்கப்படுத்துவதன் மூல மும் இளம் சமூகத்தினரை பெற்றோர்கள் எவ்வாறு கல்விக்கு முக்கியத்துவம் கொடுக்க உதவு கிறார்களோ அதேபோல் கலைத்துறைக்கு ஊக்கமளிக்கும் போது எமது கலை, கலாசாரம் மேலும் உயர்வடைந்து செல்லும். இன்னும் எத்தனையோ மூத்த கலைஞர்கள் இறந்து விட்டார்கள். இவர்களால் தங்களைப் போன்ற ஒருவரை உருவாக்காமல் விட்டது கவலையளிக்கின்றது. எனவே இருக்கின்ற மூத்த கலைஞர்கள், தங்க ளைப் போன்ற ஒருவரை உருவாக்கி இந்த எதிர்கால சந்ததிக்கு எமது பாரம்பரிய கலை பேணி பாதுகாப்பதுடன் ஒரு எதிர்கால சமூகத்தையும் உருவாக்க முடியும். எனவே போட்டிகள், பொறாமைகள் அனைத்தையும் விட்டு எமது கலை, கலாசாரத்தை வளர்க்க அனைத்து கலைஞர்களும் முன்வர வேண்டும் என கேட்டுக் கொள்கிறேன்.




**நேர்காணல்: ஜெயம் ஜெகன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தென்மராட்சி கல்வி வலயத்தால்கடந்த 15ஆம்திகதி நடத்தப்பட்ட ஆரம்பப்பிரிவுமாணவர்களுக்கான செயற்பட்டு மகிழ்வோம் போட்டி நிகழ்வில் யாழ். மிருசுவில் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையின் தரம்-5 மாணவர் கலப்பு அணி வலய மட்டத்தில் முதலாம்இடத்தைப்பெற்றது. வெற்றி பெற்ற அணியுடன் பாடசாலை முதல்வர் மற்றும் ஆரம்பப்பிரிவு ஆசிரியர்களை படத்தில்காணலாம். (இ-103)

# பல்துறைசார் கற்கைநெறிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன

(யாழ்ப்பாணம்)

வடமாகாண மகளிர் விவகாரம், புனர்வாழ்வளித்தல், சமூக சேவைகள் , கூட்டுறவு, உணவு வழங்கலும் விநியோகமும் மற்றும் தொழில் முனைவோர் மேம்பாட்டு அமைச்சின் ஏற்பாட்டில் இந்திய மத்திய அரசாங்கத்தின் அனுசரணையுடன் நடத்தப்படும் பல் துறைசார் வெளிநாட்டுக் கற்கை நெறிகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இந்திய மத்திய அரசாங்கத்தின் புலமைப் பரிசில் திட்டத்தின் கீழ்வரும் பயிற்சி நெறிகளாக கணக்காய்வு வங்கியில் நிதி தொழில் நுட்பம் தொலைத்தொடர்பு மற்றும் ஆங்கிலம், முகாமைத்துவம், கிராம அபிவிருத்தி விசேட துறை , சுற்றாடல் , மீள் சக்தி, கொழும்புத் திட்ட தொழில் நுட்ப ஒத்துழைப்பு ஆகியவற்றின் பதிவுகளை எதிர்வரும் 23 ஆம் திகதியினுள் பூர்த்தி செய்ய வேண்டும்.

இந்தியாவில் நடைபெறவிருக்கும் இப்பயிற்சி நெறிகளுக்கு பதிவு செய்யப்பட்டோரின் விமான பயணச்சீட்டு, உணவு மற்றும் தங்குமிடம் போன்றவற்றை இந்திய அரசே பொறுப்பேற்கின்றது. பயிற்சிக் காலங்களுக்கான உதவித் தொகையும் வழங்கப்படும்.

மேலதிக தொடர்புகளுக்கு தொலைபேசி இலக்கம் 021- 2211265, 021 - 22 11266, தொலைநகல் 021-2211268 போன்ற இலக்கங்களுடன் தொடர்பு கொள்ள முடியும் என மகளிர் விவகாரம் , புனர்வாழ்வளித்தல், சமூக சேவைகள், கூட்டுறவு , உணவு வழங்கலும் விநியோகமும் மற்றும் தொழிற்துறையும் , தொழில் முனைவோர் மேம்பாட்டு அமைச்சர் திருமதி அனந்தி சசிதரன் அறிவித்துள்ளார். (இ-7)


கல்வி, பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சு, வடமாகாணம்.

## ஏலவிற்பனை

எமது கல்வி அமைச்சின் STEPS நிறுவனத்தினால் பயன்படுத்தப்பட்ட பொருட்கள் STEPS நிறுவனத்தின் வளாகத்தில் 27.07.2017 வியாழக்கிழமை காலை 10.30 மணிக்கு ஏலவிற்பனை செய்யப்படும்.

1.Computer Set 2. Printer
3.OH Projector 4.Television

மற்றும் ஏனைய மின் உபகரணங்கள்

(சி-9113) இ.இரவீந்திரன், செயலாளர்.



# கல்யாணமாலை

## சர்வதேச திருமண சேவை

### இவர்களுக்கு மணமகள் தேவை

பிறப்பு: 1986 இந்து
நட்சத்திரம்: அத்தம்
கி.பா: செவ் 1 இல்
தகைமை/தொழில்:O/L/கடை
தொ.இ: B/7582

பிறப்பு: 1990 இந்து
நட்சத்திரம்: பூராடம்
உயரம்: 5'8"
தகைமை/தொழில்:A/L/வியாபாரம்
தொ.இ: B/7583

பிறப்பு: 1984 இந்து
நட்சத்திரம்: உத்தரட்டாதி
கி.பா: 32
உயரம்: 170cm
தகைமை/தொழில்:B.COM, HNDA/அரசதொழில்
தொ.இ: B/7584

பிறப்பு: 1981 இந்து
நட்சத்திரம்: அனுசம்
கி.பா: 28 செவ் 4 இல்
உயரம்: 165cm
தகைமை/தொழில்:A/L/அரசதொழில்
தொ.இ: B/7587

### இவர்களுக்கு மணமகன் தேவை

பிறப்பு: 1989 இந்து
நட்சத்திரம்: உத்தரம்
கி.பா: செவ் 8 இல்
உயரம்: 5'
தகைமை/தொழில்: A/L/தனியார் தொழில்
தொ.இ: G/6668

பிறப்பு: 1987 இந்து
நட்சத்திரம்: அச்சுவினி
கி.பா: 33 செவ் 2 இல்
தகைமை/தொழில்: A/L
தொ.இ: G/6678

பிறப்பு: 1984 இந்து
நட்சத்திரம்: ஆயிலியம்
கி.பா: 18 உயரம்: 5'
தகைமை/தொழில்: A/L/முன்பள்ளி ஆசிரியர்
தொ.இ: G/6680

பிறப்பு: 1988 இந்து
நட்சத்திரம்: ரேவதி
கி.பா: 20 செவ் இல்
உயரம்: 5'1"
தகைமை/தொழில்: HNDIT/கணக்காளர்
தொ.இ: G/6682

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1000 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 300 அறவிடப்படும்.


# அறிவித்தல்

## கொடிகாமம் பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம் (வ-து)

## கிளைக்குழுத் தெரிவு - 22.07.2017 சனிக்கிழமை

கீழ் குறிப்பிடப்படும் அட்டவணைப்படி கிளைக் குழுத் தெரிவுக்கான கிளைப் பொதுச் சபைக் கூட்டம் நடைபெறுமென சங்கத்தின் எல்லா உறுப்பினர்களுக்கும் இத்தால் அறிவிக்கின்றேன். (உரிய தவிசாளர் ஊடாக ஒவ்வொரு பொதுச்சபைக்கும் சமுகம் கொடுத்து வாக்களிக்கத் தகுதியுடைய உறுப்பினருக்கும் தனிப்பட்ட அழைப்பு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.)

**01. கிளைப் பொதுச் சபைக் கூட்டம் ஆரம்பம் - 22.07.2017 சனிக்கிழமை மு.ப-10.30**
**02. கூட்டம் நடைபெறும் இடங்களின் விபரங்கள் பின்வருமாறு -**

| தொ.இல | கிளை இல | கிளைப் பெயர் | கூட்டம் நடைபெறும் இடம் | தவிசாளர் பெயர் |
|---|---|---|---|---|
| 01. | 207 219 | மந்துவில், இயற்றாலை | மந்துவில் பாலர் பகல் பராமரிப்பு நிலையம் | திரு.பரமசிவம் தவப்பிரியன் |
| 02. | 208 209 | கச்சாய், அல்லாரை | வெள்ளாம் போக்கட்டி பாலர் பாடசாலை | திரு. கந்தசாமி சசிதரன் |
| 03. | 210B 210C | கொடிகாமம் - பி, கொடிகாமம்-சி | தலைமைக் காரியாலயம் கொடிகாமம் | திரு. தாமோதரம்பிள்ளை தவமன்னன் |
| 04. | 211A 211B | தவசிகுளம், பாலாவி | கொடிகாமம் தெற்கு பாலர் பகல் பராமரிப்பு நிலையம் | திரு. நாகமுத்து ஜெயவதனன் |
| 05. | 212 | உசன் | கொடிகாமம் தெற்கு பாலர் பகல் பராமரிப்பு நிலையம் | திரு.சிங்கராசா சியாந்தன் |
| 06. | 213 215 216 | மிருசுவில், எழுதுதரவை, எழுதுமட்டுவாள் | வடமிருசுவில் வன்னியர் பாலர் பாடசாலை | திரு.இராஜரட்ணம் வேல்குமார் |
| 07. | 214 | வடக்கு மிருசுவில் | வடமிருசுவில் வன்னியர் பாலர் பாடசாலை | திரு.ஜெயபாலன் சதீஸ் |
| 08. | 217 221 | நாவற்காடு, தனிவளை | நாவற்காடு பாலர் பாடசாலை | திரு.பாலரட்ணம் சிவபாலன் |
| 09. | 218 223 | இடைக்குறிச்சி, முத்தட்டு | கரம்பைக் குறிச்சி பாலர் பாடசாலை | திரு.தங்கராசா கண்ணதாசன் |
| 10. | 220 222 | வடவரணி, கறுக்காய் | வடவரணி முன்பள்ளி | திரு.இராமசாமி ரஜீவரதன் |
| 11. | 224 | குமுக்களை | வரணி மத்திய சனசமூக நிலையம் | திரு.இராமச்சந்திரா தயாகரன் |

செயலாளர்,
கொடிகாமம் ப.தெ.வ.அ.கூ.சங்கம், கொடிகாமம்.

(சி-9112)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாரதம்

# எரிவாயுவுக்கு எதிரான நெடுவாசல் போராட்டம் இன்று நூறாவது நாள்

(புதுக்கோட்டை)

இன்று நெடுவாசல் போராட்டம் 100ஆவது நாளாகும். மத்திய, மாநில அரசுகள் நெடுவாசல் மக்களின் கோரிக்கைகளை நிறைவேற்ற வேண்டும் என்பது அனைத்து மக்களின் ஒருமித்த கருத்தாக உள்ளது.

தமிழகம் முழுவதும் 110 இடங்களில் இயற்கை எரிவாயு எடுக்க மத்திய அரசு அனுமதி வழங்கியது.

தமிழகத்தில் புதுக்கோட்டை, தஞ்சை உள்ளிட்ட டெல்டா பகுதியில் எரிவாயு எடுக்க ஓ.என்.ஜி.சி. நிறுவனத்திற்கு மத்திய அரசு அனுமதி வழங்கியது. ஆலங்குடி அருகே உள்ள நெடுவாசல், நல்லாண்டார் கொல்லை, வாணக்கன் காடு, கோட்டைக்காடு உள்ளிட்ட கிராமங்களில் ஐதரோ காபன் எனும் இயற்கை எரிவாயுவை தமது பகுதியில் எடுக்கக்கூடாது எனவும், அதனால் தமது குடிநீர் மற்றும் விவசாயம் பாதிப்படையும் என கூறி அப்பகுதி பொதுமக்கள் முதற்கட்டமாக போராட்டம் நடத்தினர்.

மத்திய அமைச்சர்கள் மற்றும் மாவட்ட நிர்வாகம் சார்பில் போராட்டம் நடத்திய பொது மக்களிடம் பேச்சு வார்த்தை நடத்தியதை தொடர்ந்து போராட்டம் கைவிடப்பட்டது.




இந்த நிலையில் மத்திய பெற்றோலியத்துறை அமைச்சர் தர்மேந்திர பிரதான் புதுக்கோட்டை உட்பட தமிழகத்தில் உள்ள பல்வேறு பகுதியில் எரிவாயு எடுக்க அனுமதி அளித்து ஓ.என்.ஜி.சி. நிறுவனத்துடன் ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டார். இதனை அறிந்த நெடுவாசல் மக்கள் மீண்டும் 2-ம் கட்டமாக போராட்டத்தை நடத்த முடிவு செய்தனர்.

அதன்படி சுற்றுவட்டார பகுதி மக்களுக்கு இங்கு ஐதரோகாபன் எனும் எரிவாயு எடுத்தால் ஏற்படும் அபாயம் குறித்து பிரசாரம் செய்தனர். அதன்பின் ஏப்ரல் 12 ஆம் திகதி முதல் போராட்டம் தொடங்கியது.

மண்சோறு சாப்பிடுதல், எரிவாயு சாப்பிடுதல், எரிவாயு குழாய் நெஞ்சில் பாய்ந்து விவசாயிகள் தற்கொலை செய்வது என பல்வேறு வகையான நூதன போராட்டங்களை நடத்தி வந்தனர்.

மத்திய, மாநில அரசுகள் ஐதரோகாபன் திட்டத்தில் மக்கள் அனுமதியளித்தால் மட்டுமே அப்பகுதியில் எரிவாயு எடுக்கப்படும் எனத் தெரிவிக்கப்படுகிறது. நேற்றைய தினமும் பொது மக்கள் நாடியம்மன் கோவில் திடலில் கூடி அரசுக்கு எதிராகவும், ஐதரோ காபன் திட்டம் மூலம் எரிவாயு எடுப்பதை ரத்து செய்ய வேண்டும் என கோரிக்கைகளை எழுப்பி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

நேற்றுமுன்தினம் 98 ஆவது நாளாக நடைபெற்ற போராட்டத்தில் நெடுவாசல் மக்களுக்கு ஆதரவாக போராடிய சேலத்தை சேர்ந்த கல்லூரி மாணவி வளர்மதியை குண்டர் சட்டத்தில் கைது செய்ததை கண்டித்தும், மாணவியை உடனடியாக விடுதலை செய்ய வேண்டும் என்று மெழுகுவர்த்தியேந்தி போராட்டத்தில் ஈடுபட்டனர். இன்று நெடுவாசல் போராட்டம் 100 ஆவது நாளாகும்.

கடந்த வாரம் மதுரை உயர்நீதிமன்ற அனுமதியுடன் புதுக்கோட்டையில் ஐதரோ காபனுக்கு எதிராக பெருந்திரள் ஆர்ப்பாட்டமும் நடைபெற்றமை குறிப்பிடத்தக்கது. (3)

# இந்தியாவுக்கு சீனா மீண்டும் எச்சரிக்கை

## படையை உடனே வாபஸ் பெறவும்

(பீஜிங்)

சிக்கிம் எல்லையில் பூடானில் உள்ள டோல்காம் பகுதி தொடர்பாக இந்தியாவுக்கும் சீனாவுக்கும் இடையே பிரச்சினை ஏற்பட்டுள்ளது. இதனால் அங்கு இந்தியா ராணுவத்தை குவித்துள்ளது.

டோல்காம் தங்களுக்கு சொந்தம் என உரிமை கொண்டாடுகிறது. எனவே, அங்கிருந்து இந்தியா தனது படைகளை வாபஸ் பெறுமாறு எச்சரிக்கை விடுத்தது. ஆனால் அதை இந்தியா காதில் வாங்கி கொள்ளாமல் மறுத்து விட்டது.

இந்த நிலையில் சீனா இந்தியாவுக்கு மீண்டும் எச்சரிக்கை விடுத்துள்ளது. சீன எல்லைக்குள் இந்தியா அத்து மீறி நுழைந்துள்ளது. எனவே அங்கிருந்து படைகளை உடனே வாபஸ் பெற வேண்டும் என தெரிவித்துள்ளது.

இந்தியா-சீனாவுக்கு இடையே தற்போது நிலவும் எல்லைப்பிரச்சினை குறித்து சீனாவில் உள்ள வெளி நாடுகளின் தூதர்களுக்கு விளக்கப்பட்டுள்ளது. டோல்காம் பகுதியில் சட்ட விரோதமாக இந்திய படைகள் நிறுத்தப்பட்டுள்ளன என அவர்களிடம் தெரிவிக்கப்பட்டுள்ளது. அது உண்மையென்றால் தங்களுக்கு அது அதிர்ச்சி அளிக்கும் விடஷயம் என அவர்கள் தெரிவித்ததாகவும் சீன வெளியுறவு துறை செய்தி தொடர்பாளர் லு காங் தெரிவித்துள்ளார்.

ஆனால் தங்கள் கருத்துக்கு ஆதரவு தெரிவித்த நாடுகள் குறித்து தகவல் வெளியிடவில்லை.

இதற்கிடையே ஐ.நா. பாதுகாப்பு சபையில் நிரந்தர உறுப்பினராக உள்ள அமெரிக்கா, இங்கிலாந்து, பிரான்ஸ் ஆகிய நாடுகள் இது குறித்து சீனா அளித்த விளக்க நிகழ்ச்சியில் தாங்கள் பங்கேற்கவில்லை என மறுப்பு தெரிவித்துள்ளன. ஆனால் ரஷ்ய தூதரிடம் சீனா தனியாக விளக்கம் அளித்துள்ளமை தெரியவந்துள்ளது. (இ-3)

# புடினுடனான சந்திப்பு குறித்த செய்தியில் உண்மையில்லை

## ட்ரம்ப் நிராகரிப்பு



(வோஷிங்டன்)

ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடினுடன் இரகசிய சந்திப்பு நடத்தப்பட்டதாகக் கூறப்படுவது போலியான செய்தி என தெரிவித்து அந்த தகவலை அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் நிராகரித்துள்ளார்.

ஜேர்மனியில் இடம்பெற்ற ஜி-20 மாநாட்டின் போது அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்பிற்கும், ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடினுக்கும் இடையே இரகசிய சந்திப்பொன்று இடம்பெற்றதாக தகவல்கள் வெளியாகியுள்ள நிலையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

ஜி-20 மாநாட்டின்போது இரு தலைவர்களுக்குமிடையே உத்தியோகபூர்வ சந்திப்பொன்று இடம்பெற்றிருந்த அதேவேளை, இதற்கு மேலதிகமாக இவ் இரகசிய சந்திப்பு இடம்பெற்றதாகக் கூறப்படுகிறது. எனினும், இதன்போது விவாதிக்கப்பட்ட விடயங்கள் தொடர்பில் வெளிப்படுத்தப்படவில்லை.

ஆனால், இரகசிய சந்திப்பு நடத்தப்பட்டதாகக் கூறப்படுவது போலியான செய்தி என தெரிவித்து அந்த தகவலை ஜனாதிபதி ட்ரம்ப் நிராகரித்துள்ளார்.

கடந்த வருடம் அமெரிக்காவில் நடைபெற்ற ஜனாதிபதி தேர்தலின் போது, ரஷ்யாவின் தலையீட்டின் ஊடாகவே டொனால்ட் ட்ரம்ப் வெற்றி பெற்றதாகக் குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டு வந்த நிலையில், இந்த இரகசிய சந்திப்பு தொடர்பிலும் தகவல்கள் வெளியாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (3)

# வெனிசுல... தேர்தலை...

## வெளியுற...

(வோஷிங்டன்)

வெனிசுலாவில் நடைபெற வுள்ள அரசியலமைப்பு தொடர்பான தேர்தலை யாராலும் தடுக்க முடியாது என வெனிசுலா வெளியுறவுத்துறை அமைச்சர் சாமுவேல் மொன்காடா தெரிவித்துள்ளார்.

புதிய அரசியலமைப்பை இயற்றும் வகையில் இத்தேர்தல் நடத்தப்படுமாயின், வெனிசுலா கடும் விளைவுகளை சந்திக்க நேரிடும் என அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் எச்சரித்துள்ளார்.

ஆனால் ட்ரம்பின் அச்சுறுத்தல்களையும் மீறி எதிர்வரும் 30ஆம் திகதி தேர்தல் நடத்தப்படும் என வெனிசுலா அரசாங்கம் அறிவித்துள்ளது.

ஜனாதிபதி நிக்கலோஸ் மதுரோவுக்கு எதிராக வெனிசுலாவில் கடந்த பல மாதங்களாக ஆர்ப்பாட்டங்க[...] தீவிரமடைந்துள்ளன. நாடு முழுவ...

# 160 இந்திய ... பாகிஸ்தான் ஊ...

## பொய் செய்தி...

(பீஜிங்)

சீனாவின் ஏவுகணை தாக்குதலில் 160 இந்திய வீரர்கள் பலியானதாக பொய்யான செய்தி வெளியிட்ட பாகிஸ்தான் ஊடகங்களுக்கு சீனா கண்டனம் தெரிவித்துள்ளது.

இந்திய - சீனா இடையே உள்ள[...] எல்லைப் பிரச்சினையால் தற்போ[...] பதற்ற நிலை நீடித்து வருகிறது. இத[...]னைப் பயன்படுத்தி பாகிஸ்தானைச் சேர்ந்த டான் ஊடகம், சீனாவின் ஏவுகணை தாக்குதலில் 160 இந்திய வீரர்கள் பலியானதாக போலிச் செய்திகளை வெளியிட்டது.

இதே செய்தியை துனியா மற்றும் டிரிப் நியூஸ் என்ற ஊடகங்களும்

# அறுவைச் சிறுவனின் ...

(நியூயோர்க்)

அமெரிக்காவில் மாற்று அறுவை சிகிச்சை மூலம் 10 வயது சிறுவனுக்கு 2 கைகள் பொருத்தப்பட்டது. இந்த அறுவைச் சிகிச்சையை பிலடெல்பி பாலன் குழந்தைகள் நல வைத்திய சாலையின் வைத்தியர் சான்ட்ரா அமரால் தலைமையிலான குழுவினர் மேற்கொண்டனர்.

அமெரிக்காவில் பில டெல்பியாவை சேர்ந்த 10 வயது சிறுவன் ஷியோன் ஹார்வி. 2 வயது ஆக இருக்கும் போது நோய்வாய்ப்பட்டான் எனவே அவனது 2 கைக்ள் மணிக்கட்டுக்கு கீழும் 2 கால்கள் முழங்காலுக்கு கீழும் அகற்றப்பட்டன.

கடந்த 4 ஆண்டுகளுக்கு முன்பு பால்டிமோரின் இறந்தவரிடம் இருந்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெளிநாடு

## ...ாவின் அரசியலமைப்பு ...த் தடுக்க முடியாது

### ...வு அமைச்சர் தெரிவிப்பு




நடைபெற்றுவரும் வன்முறை ...ப்பாட்டங்களில் 90இற்கும் ...ற்பட்டோர் உயிரிழந்தனர்.

இந்நிலையில், மக்கள் ஆதரவை ...ந்துள்ள ஜனாதிபதி, உடனடியாக ...வி விலகி புதிய ஜனாதிபதிக்கான ...தலை நடத்த வேண்டும் என்று ...ர்க்கட்சியினர் கோரி வருகின்றனர்.

ஆனால், எதிர்க்கட்சியினரின் கோரிக்கைக்கு மாறாக ஜனாதிபதிக்கு கூடுதல் அதிகாரங்களை வழங்கும் விதத்தில் புதிய அரசியலமைப்பை இயற்ற ஜனாதிபதி நிக்கலோஸ் மதுரோ திட்டமிட்டு அதற்கான தேர்தலை நடத்த நடவடிக்கை எடுத்துள்ளார். இதற்கு எதிர்க்கட்சியினரிடையேயும், பொது மக்களிடையேயும் கடும் எதிர்ப்பு எழுந்துள்ளது.

இதேவேளை, வெனிசுலாவில் நியாயமான முறையில் பொதுத்தேர்தல் நடத்தப்பட வேண்டும் என்று அமெரிக்கா வலியுறுத்திவரும் அதேவேளை, புதிய அரசியலமைப்பை இயற்றுவதற்கான தேர்தலை நடத்தும் திட்டத்தை அமெரிக்கா கைவிடாவிட்டால் கடும் விளைவுகளை சந்திக்க நேரிடும் என அமெரிக்க ஜனாதிபதி எச்சரிக்கை விடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-3)

## 75 ஆண்டுகளுக்கு முன்னர் காணாமல் போன தம்பதியின்

### சடலங்கள் கண்டெடுப்பு



(ஜெனிவா)

சுவிட்சர்லாந்து நாட்டில் உள்ள ஆல்ப்ஸ் மலையில் 75 ஆண்டுகளுக்கு முன் காணாமல் போன தம்பதியின் சடலம் பனியில் புதைந்த நிலையில் கண்டெடுக்கப்பட்டுள்ளது.

கடல்மட்டத்தில் இருந்து இரண்டாயிரம் மீற்றருக்கு மேல் உள்ள ஆல்ப்ஸ் மலைத் தொடர் முற்றிலும் பனியினால் ஆன பிரதேசமாகும். சுவிட்சர்லாந்தில் உள்ள இம் மலைத்தொடரில் இருந்த பனியாறுகள் தற்போது வற்றியுள்ள நிலையில், அங்குள்ள சுற்றுலா விடுதியின் ஊழியர்கள் பனி ஆற்றுப் பகுதியில் கண்ணாடி குடுவைகள் மற்றும் ஷூக்கள் கிடப்பதை பார்த்துள்ளனர்.

உடனே, அங்கு தோண்டிப் பார்த்த போது, இரண்டு சடலங்கள் அருகருகே கிடந்துள்ளன.

இது குறித்த தகவல்கள் வெளியானதும், சடலமாக கிடந்த தம்பதியினரின் பிள்ளைகள், அது தங்களது பெற்றோர்கள் மர்செலின் மற்றும் ப்ரான்சின் டுமௌலின் என்பதை உறுதிப்படுத்தியுள்ளனர்.

1942ஆம் ஆண்டு, ஆல்ப்ஸ் மலைத்தொடரில் உள்ள வாலைஸ் கண்டோ என்ற பகுதியில் மர்செலின் மற்றும் ப்ரான்சின் டுமௌலின் மாடுகளை மேய்க்க அழைத்துச் சென்றுள்ளனர்.

அவர்கள் அதன் பின்னர் காணாமல் போய்விட்டனர். இப்போது, அவர்களின் சடலங்கள் பதப்படுத்தப்பட்ட நிலையிலேயே கிடைத்துள்ளதால், பனிப்புயலில் சிக்கி அவர்கள் பலியாகியிருக்கலாம் என தெரிய வந்துள்ளது.

ஏழு குழந்தைகளுக்கு பெற்றோரான இவர்களின் சடலங்கள் சிதைந்து போகாமல், நல்ல நிலையில் பாதுகாப்பாக இருப்பதாக அதிகாரிகள் தெரிவிக்கின்றனர். இதனால், அவர்களுக்கு இறுதிச் சடங்குகள் உரிய முறையில் செய்யப்படும் என குடும்பத்தினர் தெரிவித்துள்ளனர். (இ-3)

## ...ீரர்கள் பலியானதாக ...டகங்கள் வெளியிட்ட

### ...க்கு சீனா கண்டனம்

...ளியிட்டன.

...போலிக் காட்சிகள் அடங்கிய ...யோவை மேற்கண்ட ஊடகங்கள் ...பரப்பியது. தாக்குதலில் பலியான ...திய வீரர்களின் உடல்களைக் ...ண்டுசெல்வது போலவும் காய...டைந்தவர்களைத் தூக்கிச் செல்வது ...ன்ற போலியான புகைப்படங்...ளையும் வெளியிட்டன.

இதனையடுத்து, அடிப்படை ஆதார...ற செய்திகளைப் பாகிஸ்தான் ...டகங்கள் பரவவிட்டு வருகின்றன" ...மத்திய வெளியுறவு அதிகாரிகள் ...த்து தெரிவித்தனர்.

இந்நிலையில், பாகிஸ்தான் ஊட...களின் ஆதாரமற்ற இத்தகைய செய்திகளுக்கு சீனா ஊடகங்கள் கண்டனம் தெரிவித்துள்ளன.

பாகிஸ்தான் ஊடகங்கள், வெளியிட்டு உள்ள செய்திகள் அடிப்படை ஆதாரமற்றதென சீனாவின் அதிகார பூர்வ ஊடகம் வெளியிட்டுள்ள தகவலில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சீனாவின் தேசிய பத்திரிகையான குளோபல் டைம்ஸ், பாகிஸ்தானிய ஊடக செய்திகள் நியாயமற்றது மற்றும் போலியானது என்று கூறியுள்ளது. (இ-3)

## ‘ஒபாமா கேர்’ திட்டத்தை இரத்துச் செய்யும் ட்ரம்பின் முயற்சி மீண்டும் தோல்வி!



(வோஷிங்டன்)

அமெரிக்க பாராளுமன்றத்தில் ‘ஒபாமா கேர்’ காப்பீட்டுத் திட்டத்தை இரத்து செய்யும் முயற்சி மீண்டும் தோல்வி அடைந்தது. இது டிரம்புக்கு பின்னடைவை ஏற்படுத்தி உள்ளது.

அமெரிக்காவில் ஒபாமா ஜனாதிபதியாக இருந்தபோது தனது கனவு திட்டமாக ‘ஒபாமா கேர்’ என்ற குறைந்த கட்டணக் காப்பீட்டு திட்டத்தை கொண்டு வந்தார்.

ஆனால் கடந்த ஆண்டு நடந்த ஜனாதிபதி தேர்தலில் குடியரசு கட்சி வேட்பாளராக போட்டியிட்ட டொனால்ட் ட்ரம்ப், இந்த காப்பீட்டு திட்டத்துக்கு எதிராக பிரசாரம் செய்தார்.

அவர் தேர்தலில் வெற்றி பெற்று, கடந்த ஜனவரி மாதம் 20ஆம் திகதி ஜனாதிபதியாக பதவி ஏற்று பிறப்பித்த முதல் நிர்வாக உத்தரவே, ‘ஒபாமா கேர்’ காப்பீட்டு திட்டத்தை ஒழித்துக்கட்டிவிட்டு, அதற்கு மாற்றாக வேறு ஒரு திட்டத்தைக் கொண்டு வருவதாகத்தான் அமைந்தது.

கடந்த மார்ச் மாதம் இதற்கான மசோதாவை அமெரிக்க பாராளுமன்றத்தின் பிரதிநிதிகள் சபையில் கொண்டு வந்து நிறைவேற்ற டிரம்ப் திட்டமிட்டார். அதற்கான நடவடிக்கைகளை அவர் மேற்கொண்டார்.

இந்த சபையில் ட்ரம்பின் குடியரசு கட்சிக்கு பெரும்பான்மை உள்ளதால் மசோதா எளிதில் நிறைவேறிவிடும் என எதிர்பார்க்கப்பட்டது.

ஆனால் குடியரசு கட்சி எம்.பிக்களே கடும் எதிர்ப்பு தெரிவித்ததால் மசோதா வாபஸ் பெறப்பட்டது. இது ட்ரம்புக்கு கிடைத்த முதல் தோல்வியாக அமைந்தது.

இந்த நிலையில் தற்போது செனட் சபையில் இந்த மசோதாவை கொண்டு வந்து நிறைவேற்ற ட்ரம்ப் நடவடிக்கை எடுத்தார். இந்த மசோதா நேற்று முன்தினம் அங்கு வந்தபோது, குடியரசு கட்சி உறுப்பினர்களிடையே கடும் எதிர்ப்பு ஏற்பட்டது. சபையில் பெரும் அமளி நிலவியது. இதனால் இந்த மசோதாவை நிறைவேற்ற முடியாத நிலை ஏற்பட்டது.

அப்போது செனட் தலைவர் மிட்ச் மெக்கன்னல் கூறும்போது, ஒபாமா கேர் காப்பீட்டு திட்டத்தை இரத்து செய்துவிட்டு, அதற்கு பதிலாக மாற்று திட்டத்தை உடனடியாக கொண்டுவர மேற்கொண்ட முயற்சி வெற்றி பெறவில்லை என்பது வெளிப்படையாகி விட்டது என்பதை வருத்தத்துடன் தெரிவிக்கிறேனென கூறினார்.

‘ஒபாமா கேர்’ காப்பீட்டு திட்டத்தை ரத்து செய்து விட்டு மாற்று மசோதா கொண்டு வந்து நிறைவேற்றுவதற்கு குடியரசு கட்சி உறுப்பினர்களான மைக்லி, ஜெர்ரி மோரன் ஆகியோர் தங்கள் சக உறுப்பினர்களான சூசன் காலின்ஸ், ராண்ட் பால் ஆகியோருடன் சேர்ந்து கொண்டு போர்க்கொடி தூக்கினர்.

இதனால் 100 உறுப்பினர்களைக் கொண்ட செனட் சபையில், குடியரசு கட்சியால் மசோதாவை நிறைவேற்ற முடியாத சூழல் ஏற்பட்டது.

‘ஒபாமா கேர்’ காப்பீட்டு திட்டத்தை இரத்து செய்துவிட்டு, மாற்று திட்டத்தை கொண்டுவருவதில் உடும்புப் பிடி பிடித்து வருகிற ட்ரம்புக்கு இது பெருத்த பின்னடைவை ஏற்படுத்தி உள்ளது.

இது தொடர்பாக ட்ரம்ப் டுவிட்டரில் வெளியிட்டுள்ள செய்தியில், "ஒபாமா கேர் காப்பீட்டு திட்டத்தை அமெரிக்க பாராளுமன்றம் உடனடியாக இரத்து செய்ய வேண்டும். புதிய காப்பீட்டு திட்டத்தை ஏற்றுக்கொள்ள வேண்டும் என கூறியுள்ளார்.

இதற்கிடையே அறுவைச் சிகிச்சை செய்துகொண்டு தனது சொந்த மாநிலமான அரிசோனாவில் ஓய்வில் உள்ள குடியரசு கட்சியின் மூத்த எம்.பி. ஜான்மெக்கைன், ‘இந்த விடயத்தில் குடியரசு மற்றும் ஜனநாயக கட்சி எம்.பி.க்களின் கருத்துகளையும் பெற்றுத்தான் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று வலியுறுத்தியிருப்பது குறிப்பிடத்தக்கது. (இ-3)

## ...சிகிச்சை மூலம் ...கைகள் இணைப்பு

...னம் பெற்று மாற்று அறுவைச் ...ிச்சை மூலம் அவனுக்கு 2 கைக...ம் பொருத்தப்பட்டன. இந்த அறு...வச் சிகிச்சையை பிலடெல்பியாலன் ...ழந்தைகள் நல வைத்திய சாலையின் ...வத்தியர் சான்ட்ரா அமரால் தலை...மயிலான குழுவினர் மேற்கொ...ண்டனர்.

அதைத்தொடர்ந்து தீவிர சிகிச்...சக்கு பின் அவனுக்கு வைத்தியர்...ா பயிற்சி அளித்தனர். தற்போது ...வன் மற்றவர்களை போல சாதார...ணமாக செயற்பட தொடங்கி விட்...ான்.

தற்போது அவன் தானம் பெற்று ...ொருத்தப்பட்ட கைகளால் நன்றாக ...ழுதுகிறான், விளையாடுகிறான். தானா...வே கைகளால் சாப்பிடுகி றான்.

இதனால் பெற்றோரும், வைத்தியரும் மகிழ்ச்சி அடைந்துள்ளனர். மாற்று அறுவை சிகிச்சை மூலம் பொருத்தப்பட்ட அவனது கைகளை மூளை ஏற்றுக் கொண்டு விட்டது. அதனால் தான் அவனால் சகஜமாக செயற்பட முடிகிறது என சிறுவன் தெரிவித்தார். இச்சிறுவனுக்கு 4 வயதில் சிறுநீரக கோளாறு ஏற்பட்டது. 2 வருடம் டாயாலிசிஸ் செய்த அவன் பின்னர் தனது தாயார் பட்டி ரேயிடம் இருந்து சிறுநீரகம் தானமாக பெற்றமை குறிப்பிடத்தக்கது. (3)

## ஈரான் மீது புதிய தடை; அமெரிக்கா அறிவிப்பு

(வோஷிங்டன்)

ஐக்கிய நாடுகள் சபையின் ஒப்பந்தத்தை மீறி ஏவுகணை சோதனைகளை நடத்திவரும் ஈரானுக்கு எதிராக அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்பின் நிர்வாகத்தினால் புதிய தடைகள் விதிக்கப்பட்டுள்ளன.

சர்வதேச குற்றவியல் நடவடிக்கைகளுக்கு ஆதரவாக செயற்பட்ட 16 தனிநபர்கள் மற்றும் நிறுவனங்கள் மீதே இந்த பொருளாதார தடைகள் விதிக்கப்பட்டுள்ளன.

ஈரான், அணுசக்தி ஒப்பந்தத்தின் விதிமுறைகளை மீறி செயற்படுவதாக ட்ரம்ப் நிர்வாகம் கடந்த திங்கட்கிழமை எச்சரித்திருந்த நிலையில் நேற்று முன்தினம் குறித்த தடைகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

மேலும், ஈரானின் செயற்பாடுகள் மத்திய கிழக்கில் ஸ்திரத்தன்மை, பாதுகாப்பு மற்றும் பிராந்தியத்தின் சுபீட்சம் என்பவற்றை பாதிக்கும் வகையில் அமைந்துள்ளதாகவும் அமெரிக்கா குற்றம் சாட்டியுள்ளது. (இ-3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உத்தேச அரசமைப்பு வரைபு விரைவில் நாடாளுமன்றத்தில்

## பிரதமர் ரணில் தெரிவிப்பு

(கொழும்பு)

அரசமைப்பு யோசனை தொடர்பான அறிக்கை தயார் படுத்தப்பட்டுக் கொண்டிருப்பதாகவும், அதன் இறுதி அறிக்கையைத் தயாரிக்குமாறு அரசமைப்புப் பேரவைக்கு அறிவுறுத்தியுள்ளதாகவும் விரைவில் உத்தேச அரசமைப்பு 'வரைபு நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும் எனவும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.



கொழும்பு சிறிமாவோ பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில், People of Sri Lanka (இலங்கையின் மக்கள்) எனும் மானுடவியல் ஆய்வு நூல் வெளியீட்டு விழா ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையில் நேற்று முன்தினம் நடைபெற்றது.

இந்நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே பிரதமர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் உரையாற்றுகையில்,

இந்த நாட்டில் 30 வருட காலம் யுத்தம் நடைபெற்றது. அதன் பின்னர் நாட்டை கட்டியெழுப்புவதென்பது சிரமமான காரியமாகும். முதல் தடவையாக, ஜனாதிபதி தலைமையில் ஒன்றிணைந்து, நாட்டை முன்னேற்றத்தின் பாதையில் கொண்டு செல்ல முயல்கிறோம்.

இரண்டு ஆண்டுகளில் இந்தளவு அபிவிருத்தியை யாராலும் அடைய முடியாது. யுத்தத்தின் பின்னர் நாட்டில் ஒற்றுமையை பறைசாற்ற வேண்டிய தேவை எமக்கு ஏற்பட்டது.

இன்று, இனவாதத்திலிருந்து நாம் விலகி யிருக்கிறோம். இன்று வாழ்க் கைச் செலவு பற்றி மக்கள் கேள்வி கேட்கிறார்கள். டெங்கு நோயைப்பற்றி கேட்கிறார்கள்.

அரசமைப்பு யோசனை தொடர்பில் மக்கள் பேச வேண்டும். அது விவாதப்பொருளாக மாற வேண்டும். அவ்வாறு மக்களின் யோசனையைப் பெற்றுத்தான், நாம் அடுத்த கட்டத்துக்கு நகர முடியும்.

அரசமைப்புத் தொடர்பில் கலந்துரையாட அடித்தளம் அமைத்திருக்கிறோம். உள்ளூராட்சித் தேர்தல் தொடர்பில், ஜனாதிபதி அண்மையில் அறிவித்திருந்தார். அனைத்துக் கட்சிகளும் ஒன்றிணைந்து, அனைவரும் ஏற்றுக்கொள்ளக் கூடிய முறையில் தான் தேர்தல் நடைபெறும். இனவாதத்தை, மதவாதத்தை வைத்துக் கொண்டு, எப்போதும் முன்னேற முடியாது. நாம் ஒற்றுமையாக இருக்கும் பட்சத்திலேயே, அபிவிருத்தியைக் காண முடியும். அதிகாரத்தில் இருந்தாலும் இல்லாவிட்டாலும், தேசிய ஒற்றுமை, சகவாழ்வுக்காகவும் அனைத்து இனங்களுக் காகவும், அமைச்சர் மனோ கணேசன் போராடி வருவதாகத் தெரிவித்தார் "அமைச்சர்மனோகணேசன், ஜனநாயகத்துக்காகப்போராடுகிறார். இந்த நாட்டில் அனைத்து இனங்களின் பிரதிநிதியாக, முன்னின்று செயற்படுகிறார்" என, பிரதமர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# சமூக ஊடக வலையமைப்புக்களினால் ஆட்சி அமைக்கவும் கவிழ்க்கவும் முடியும்

## பிரதியமைச்சர் ஹர்ச டி சில்வா தெரிவிப்பு



சமூக ஊடக வலையமைப்புக்களினால் ஆட்சியை அமைக்கவும் முடியும் எனவும் ஆட்சியை கவிழ்க்கவும் முடியும் என பிரதி அமைச்சர் ஹர்ச டி சில்வா தெரிவித்துள்ளார்.

எனினும் சமூக ஊடக வலையமைப்புக்களுக்குத் தடைகளை விதிக்க முடியாது என அவர் சுட்டிக் காட்டியுள்ளார். சமூக ஊடக வலையமைப்புக்களின் ஊடாக பேசப் படும் விடயங்கள் பற்றி புரிந்து கொள்ளக்கூடிய பக்குவம் அதிகாரிகளுக்கு இருக்க வேண்டுமெனவும் தெரிவித்துள்ளார்.

இளைஞர்.யுவதிகள் தங்களது கோரிக்கைகளை வென்றெடுப்பதற்கு சமூக ஊடக வலையமைப்புக்களை மட்டும் பயன்படுத்த முடியாது எனவும் அவர் தெரிவித்தார். (இ-7)

# வெளிநாட்டு வேலைவாய்ப்புக்கு தகுதியானவர்கள் இங்கு இல்லை

## அமைச்சர் தலதா சுட்டிக்காட்டு

(கொழும்பு)

வெளிநாட்டு வேலைவாய்ப்பைக் பெற்றுக் கொள்வதற்கு தகுதியானவர்கள் இல்லை என வெளிநாட்டு வேலைவாய்ப்பு ஊக்குவிப்பு அமைச்சர் தலதா அதுகோரள தெரிவித்துள்ளார்.

வெளிநாட்டு வேலைவாய்ப்பைக் பெற்றுக் கொள்வதனை விடவும் அதற்கு தகுதியானவர்களை தேடிப்பிடிப்பதில் சவால்களை எதிர்நோக்கி வருவதாகத் தெரிவித்துள்ளார்.

அண்மையில் அமெரிக்காவில் 5000 தாதியர்களுக்கு வேலைவாய்ப்பு கிடைக்கப் பெற்றது எனவும் இந்த தொழில் வாய்ப்பிற்கு தகுதியானவர்கள் என மூன்று பேர் மட்டுமே தெரிவாகியிருந்தனர் என அவர் தெரிவித்தார்.



80 பேர் நேர்முகத் தேர்விற்கு தெரிவான போதிலும் எழுத்துப் பரீட்சையில் 3 பேர் மட்டுமே தேர்வாகினர் என அவர் தெரிவித்தார். (இ-7)

# அம்பாந்தோட்டையில் துப்பாக்கிச் சூடு!

(கொழும்பு)

சூரியவெவ - மிரிஜ்ஜவில வீதி, அம்பாந்தோட்டை மேம்பாலத்துக்கு அருகில் நேற்றுக் காலை இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டில், ஒருவர் காயமடைந்துள்ளார்.

நேற்றுக் காலை 8.30 மணியளவில், இந்தத் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

மோட்டார் சைக்கிளில் பயணித்த இருவர் மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டில் காயமடைந்த சூரியவெவ பிரதேசத்தைச் சேர்ந்த 41 வயதுடைய நபர், அம்பாந்தோட்டை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை, அம்பாந்தோட்டைப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (இ-7)

## இன்று ஒரு தகவல்

### எது கேட்டாலும் தெரியாதா?

இங்கே சீப்பு இருந்திச்சே, எங்கே காணோம்! தெரியாது!என்னோட அலுமாரிச் சாவியைப் பார்த்தீங்களா? தெரியாது. ரேஷன்கார்டை அலுமாரி மேலே வச்சிருந்தேன். யாராவது பார்த்தீங்களா? தெரியாது. ஏங்க என் மகன் இங்கே நின்னானே பார்த்தீங்களா? தெரியாது. ஏம்பா இங்கே வவுச்சர் கட்டும் பைலும் இருந் துச்சே. பார்த்தியா?தெரியாது.

இவற்றில் தேடுபவர்களின் பொறுப்பில்லாத் தனத்தை விட, தெரியாது தெரியாது என்று சொல்கிறவர்களின் பொறுப்பில்லாத் தனம் தான் எனக்கு மோசமான தாகப் படுகின்றது.

ஒன்றைத் தேடும்போது, அதுவும் அவசரமாகத் தேடும் போது மனம் பரபரப்பு அடைகிறது. மனம் இயல்பாகச் செயற்படுவது இல்லை. இவர்கள் செயலில் பொருளே இருக்காது.

இதை எப்படித் தெரிந்து கொள்ளலாம் என்றால், தேடிய இடத்தையே திரும்பத் திரும்பத் தேடுவார்கள். உதாரணமாக, சாவியைத் தேடும் ஆண்கள் தங்கள் நான்கு பொக்கெட்டுகளையும் குறைந்தது நான்கைந்துமுறை தொட்டுப் பார்த்துக்கொள்வார்கள்.

இந்த நேரத்தில் தெரியாது என்று பதில் சொல்லுகிறவர்கள், பதற்றப்படாமல் தேடுங்க. இங்கதான் இருக்கும் என்று ஆறுதலாகச் சொல்லலாம். அடுத்த கட்டமாக, தலையணைக்கடியிலோ அலுமாரியில் கதவிலேயே இருக்கும் பாருங்க என்றோ சாத்தியக் கூறுகள் உள்ள இரண்டு மூன்று இடங்களைக் குறிப்பிடலாம்.

இதைவிட ஒரு படி மேலே போய், அவர்களுடன் சேர்ந்து நாமும் தேடலாம். இச்செயல் ஒன்றைத் தேட ஆரம்பித்தவர்களுக்கு மிகப் பெரிய மன ஆறுதலைத் தரும்.

மாறாக, எடுத்த இடத்தில் வச்சாத் தானே? கண்ட இடத்தில் வீசி எறிய வேண்டியது. அப்புறம் தேட வேண்டியது. வீட்டில் இருக்கிறவுங்க உயிரையும் சேர்த்து எடுக்க வேண்டியது என்று வசவுப் புராணத்தை ஆரம்பிக்கிறவர்களும் உண்டு. இத்தகைய பேச்சு தேடுகிறவர்களுக்குப் படு எரிச்சலைத் தரும். மனத்தில் கோபத் தீயை வளர்க்கும். அது அப்போதில்லா விட்டாலும் எப்போதாவது வெளிப்படும்.

குடும்ப உறுப்பினராகட்டும் அலுவலகத்தில் தொழில் செய்யும் இடத்தில் சக ஊழியராகட்டும் ஒருவர் தேடல் பணியில் இருக்கும் போது நாமும் அவர்களுக்கு உதவ எண்ண வேண்டும். நாம் ஒரு முக்கிய வேலையில் இருந்தால்கூட பாவ்லா வாவது அவசியம். உண்மையாகத் தேடிக் கிடைக்காமல் போனால் கூட நம் மீது நல்ல எண்ணம் வரும்.

சொந்தக் கவலைகள் சோகங்களை மனத்தில் அடுக்கிக் கொண்டும் மற்றவர் பிரச்சினையில் ஈடுபாடு இல்லாமலும் பிடிப்பில்லாமலும் நடந்து கொள்ளும் தன்மையின் மற்றும் பொறுப்பில்லாத் தனத்தின் உச்சம்தான் தெரியாது என்கிற பதில்.

மற்றவர்களின் இதயங்களில் சிறு சம்பவத்தின் துணையுடன் கூட மிகப் பெரிய இடத்தைப் பிடித்துவிட முடியும். இத்த கைய சந்தர்ப்பங்களை நழுவ விடுவது நமக்கு நன்மை செய்யாது.

**லேனா தமிழ்வாணன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி கணித, விஞ்ஞான முகிழ் நிலை ஆசிரியர்களால் அச்சுவேலி மத்திய கல்லூரியின் தரம் 10, 11மாணவருக்கான விஞ்ஞான செயன் முறைசார் செய்றிட்டம் அண்மையில் யாழ்ப்பாணம் தேசிய கல்வியற் கல்லூரி விஞ்ஞான ஆய்வு கூடத்தில் யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி பீடாதிபதி ச.அமிர்தலிங்கம் தலைமையில் இடம் பெற்ற போது... (படங்கள்:-சோபிகா)

# அமைச்சரின் கோரிக்கையை ஏற்றே சைட்டம் கல்லூரியை நிறுவினேன்

## நெவில் பெர்னாண்டோ தெரிவிப்பு

முன்னாள் அமைச்சர் விஸ்வ வர்ணபாலவின் கோரிக்கையை ஏற்றே சைட்டம் நிறுவனத்தை நான் நிறுவினேன். எனவே இது இலாப நோக்கத்தில் உருவாக்கப்பட்ட கற்கை நிறுவனம் அல்லவென சைட்டம் நிறுவனத்தின் உரிமையாளர் வைத்தியர் நெவில் பெர்னாண்டோ தெரிவித்தார். நெவில் பெர்னாண்டோ தனியார் வைத்தியசாலையை அரச உடைமையாக்கும் நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற் கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், இலாபமீட்ட வேண்டும் என்ற நோக்கத்தினால் மாத்திரம் நாம் சைட்டம் தனியார் மருத்துவ கல்லூரியை ஆரம்பிக்கவில்லை. 2007 ஆம் ஆண்டில் சுகாதார அமைச்சராகவிருந்த விஸ்வ வர்ணபால விடுத்த கோரிக்கையின் நிமித்தமே இந்த தனியார் வைத்திய கல்லூரியை ஆரம்பித்தேன்.

18 ஆயிரம் பேர் மாத்திரமே பல்கலைக்கழக அனுமதியை பெறுகின்றார்கள். ஏனைய மாணவர்களுக்கான வாய்ப்புக்களை உருவாக்கிக்கொடுக்க பணம் இருக்கின்றவர்கள் உதவுங்கள் என்றார். அந்த நேரத்தில் என்னிடத்தில் பணம் இருந்தது. எனவே சைட்டம் தனியார் வைத்திய கல்லூரியை நிறுவினேன்.

மூன்று ஏ சித்திகளை பெற்ற மாணவர்களும் கூட இன்று பல்கலைக்கழக அனுமதி கிடைக்காமல் இருக்கின்றனர். எனவே அவர்களுக்கான களமாகவே சைட்டம் கற்கை நிறுவனம் அமைக்கப்பட்டுள்ளது. இந்த நிறுவனத்தை அமைப்பதற்கு அமைச்சர் எஸ்.பி.திஸாநாயக்க உள்ளிட்டோர் பெரிதும் உதவினார்கள்.

இந்நிலையில் தற்போது ஜனாதிபதியும் பிரதமரும் தனியார் பல்கலைக்கழகங்களுக்கு அனுமதி வழங்கி அவற்றை மேம்படுத்த வேண்டும் என்ற நிலைப்பாட்டில் உள்ளனர். எனவே அவர்களுக்கு நன்றி கூற வேண்டும். வேலை நிறுத்தத்தினால் பொதுமக்கள் பாதிக்கப்படக் கூடாது என்பதாலேயே இதனை அரசாங்கத்திற்கு கையளிக்கின்றேன்.

இந்த நிறுவனத்தை அமைப்பதற்கு எந்த ஒரு நிறுவனமும் எனக்கு கடன் வழங்கவில்லை. பின்னர் நான் நண்பர் ஒருவரின் உதவியுடன் இலங்கை வங்கியில் கடன் பெற்று நெவில் பெர்னாண்டோ வைத்தியசாலையினையும் நிறுவினேன்.

35 ஆயிரத்து 550 மில்லியன் ரூபா செலவில் நிறுவப்பட்ட இந்த வைத்தியசாலையை வருகின்ற காலத்திலும் தூய்மையாக பராமரிக்க வேண்டும் என அவர் கோரிக்கை விடுத்தார். (இ-7)

# புத்தரின் உருவம் பொறித்த உடை இந்தியப் பெண்ணுக்கு பொலிஸார் எச்சரிக்கை

(கொழும்பு)

புத்தருடைய உருவம் பொறிக்கப்பட்ட உடையணிந்த நிலையில் இருந்த இந்தியப் பெண் ஒருவர் பொலிஸாரினால் தடுத்து வைக்கப்பட்டு விசாரணைக்கு உட்படுத்தப் பட்டுள்ளார்.

புத்த பெருமானுடைய உருவங்கள் பொறிக்கப்பட்ட ஆடைகளை அணிவது மற்றும் அலங்கார பொருட்களைத் தயாரிப்பது பொருத்தமற்ற இடங்களில் புத்தர் சிலையை வைப்பது உள்ளிட்டவை இலங்கையில் தண்டனைக்குறிய குற்றமாகும்.

கடந்த 2014ஆம் ஆண்டு இதுபோன்று புத்தருடைய உருவத்தை உடலில் வரைந்திருந்த பிரித்தானிய சுற்றுலாப் பயணி ஒருவர் நாடு கடத்தப்பட்டிருந்தார்.

இந் நிலையில் 26 வயதுடைய குறித்த இந்தியப் பெண் விடுமுறைக்காக இலங்கை வந்து பெந்தொட்ட பிரதேசத்தில் உள்ள விடுதி ஒன்றில் தங்கியிருந்துள்ளதுடன், கொழும்பில் உள்ள வர்த்தக கட்டடத் தொகுதி ஒன்றில் வைத்து பொலிஸாரால் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7)

# கூட்டு எதிர்க்கட்சியிலிருந்து ரொஷான் ரணசிங்க விலகல்

(கொழும்பு)

கூட்டு எதிர்க்கட்சியின் அரசியல் செயற்பாடுகளில் இருந்து, தான் தற்காலிகமாக விலகிக்கொண்டுள்ளதாக ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் பொலநறுவை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ரொஷான் ரணசிங்க தெரிவித்துள்ளார்.

இந்த நிலையில், கூட்டு எதிர்க்கட்சிக்காக ஏற்பாடு செய்திருந்த கூட்டங்கள் மற்றும் நிகழ்ச்சிகளை இரத்துச் செய்துள்ளதாகவும் அவர் கூறியுள்ளார்.

மேலும், கூட்டு எதிர்க் கட்சியில் இருந்து விலகினாலும் அரசியல் கொள்கையில் எந்த மாற்றமும் இல்லை என ரொஷான் ரணசிங்க தெரிவித்தார். (இ-7)

# டெங்குத் தொற்றைக் கட்டுப்படுத்த துறைமுகங்கள் தூய்மையாகின்றன

(கொழும்பு)

டெங்குத் தொற்றைக் கட்டுப்படுத்தும் நோக்கில், நாட்டின் சகல மீன்பிடித் துறைமுகங்களிலும் ஒன்று சேர்ந்துள்ள பிளாஸ்டிக் கழிவுகளை அகற்றித் தூய்மைப்படுத்தும் திட்டமொன்றை முன்னெடுப்பதற்கு, சமுத்திரச் சூழல் பாதுகாப்பு அதிகார சபை நடவடிக்கை எடுத்துள்ளது.

கடந்த சில வருடங்களாக, துறைமுகங்களில் ஒன்று சேர்ந்துள்ள பிளாஸ்டிக் கழிவுகள் காரணமாக, நுளம்புகள் பெருகும் அபாயம் அதிகரித்துள்ளதாக, அதிகார சபையின் பொது முகாமையாளர் கலாநிதி டர்னி பிரதீப் குமார தெரிவித்தார்.

இதற்கமைவாக, பாவனையிலிருந்து கைவிடப்பட்ட 4 ஆயிரத்துக்கும் அதிகமான படகுகளை அழிக்கும் வேலைத்திட்டமொன்றும் நடைமுறைப்படுத்தப்பட்டு உள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

இத்தகைய படகுகளை அழிப்பதற்காக, தனியார் நிறுவனங்கள் சிலவற்றுடன் இணைந்து செயற்பட்டு வருவதாகவும், அவர் தெரிவித்தார்.

இதேவேளை, டெங்கு நுளம்புகளை ஒழிப்பதற்கான செயற்பாடுகளைக் கண்காணிப்பதற்காக, முன்னாள் சுகாதாரச் சேவைகள் பணிப்பாளர் நாயகம் டாக்டர் அஜித் மெண்டிஸ், விசேட அதிகாரியாக நியமிக்கப்பட்டுள்ளார். (இ-7)

# தமிழ்க்கூட்டமைப்பின் ஆதரவுடன் புதிய அரசாங்கம் உருவாகலாம்

## மகிந்த அமரவீர தெரிவிப்பு




தமிழ்த் தேசிய கூட்டமைப்புடன் இணைந்து ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சியமைக்கும் நிலை ஏற்படலாம் என கடற்றொழிற்றுறை அமைச்சர் மகிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைமையகத்தில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற ஊடக சந்திப்பில் கருத்து தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில், 'வேறு மாற்றுவழி இல்லாததால் நல்லாட்சி அரசாங்கத்தில் இணைந்து கொண்டோம். ஒவ்வொரு நாடாளுமன்ற உறுப்பினர்களிடமும் தனித்தனியாக விருப்பம் கேட்டே அரசாங்கத்தில் இணைத்துக் கொள்ளப்பட்டனர். நல்லாட்சி அரசாங்கத்தில் நாம் இணைந்திருக்காவிடில் தமிழ்த் தேசிய கூட்டமைப்புடன் புதிய அரசாங்கம் உருவாக்கப்பட்டிருக்கும்.

இதுபோன்ற ஒரு நிலையே டிசெம்பரில் உருவாகும். ஐக்கிய தேசிய கட்சிக்கும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்கும் இடையிலான இணக்கப்பாட்டு உடன்படிக்கை இந்த வருடம் டிசெம்பர் மாதத்துடன் நிறைவடையவுள்ளது. அதன் பின்னர் ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியின் மத்திய செயற்குழு ஒன்று கூடி தீர்மானம் மேற்கொண்டு அதன் அடிப்படையில் செயற்படும்.

டிசெம்பரில் நாம் வெளியேறினால் 106 நாடாளுமன்ற உறுப்பினர்கள் உள்ள ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சியமைக்க 7 நாடாளுமன்ற உறுப்பினர்கள் தேவை. அதனடிப்படையில் தமிழ்த் தேசிய கூட்டமைப்புடன் புதிய அரசாங்கம் உருவாகலாம்.

அவ்வாறு, தமிழ்த் தேசிய கூட்டமைப்புடன் புதிய அரசாங்கம் உருவாகுமாயின் அவர்கள் நிபந்தனைகளை முன்வைப்பார்கள். எனவே அவர்களுடன் இணைந்து ஆட்சியமைப்பது நாட்டில் ஸ்திரமற்ற நிலைமையை உருவாக்கும். பிரதமர் ரணில் விக்கிரமசிங்க அவ்வாறான முடிவை எடுப்பார் என்று கருதவில்லை" என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-7)

# ஒஸ்டின் பெர்னாண்டோவுக்கு மற்றுமொரு பதவி வழங்கல்



(கொழும்பு)

இலங்கைத் தொலைத் தொடர்புகள் ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழுவின் தலைவராக ஜனாதிபதி செயலாளர் ஒஸ்டின் பெர்னாண்டோ நியமிக்கப்பட்டுள்ளார்.

குறித்த கடமைகளை பொறுப்பேற்கும் நிகழ்வு நேற்று இடம்பெற்றது.

இதன்போது இலங்கை தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தும் ஆணைக் குழுவின் பணிப்பாளர், பிரதிப்பணிப்பாளர் உள்ளிட்ட ஊழியர்கள் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாற்றுத் தலைமை ஏன்? ஈ.பி.ஆர்.எல்.எவ். விளக்கம்

(நேற்றைய தொடர்ச்சி)

இந்த இக்கட்டான சூழலில்கூட இந்த விடயங்களை மீளாய்வு செய்யாமல் தமிழர்களுக்கு ஒரு கருத்தும் சிங்கள மக்களுக்கு ஒரு கருத்துமாக இரு முகங்களைக் காட்டி நிற்கும் போக்கானது தமிழ் மக்கள் தமது தலைமையின் மீது வைத்திருந்த நம்பிக்கையை சிதறடிக்கும் ஒரு போக்காகவே நாம் பார்க்கிறோம்.

இறுதியாக அண்மையில் வடக்கு மாகாண சபையில் ஏற்படுத்தப்பட்ட குழப்பங்களும் தமிழரசுக் கட்சியின் தான்தோன்றித்தனமான நடவடிக்கைகளால் முதலமைச்சருக்கு எதிராகக் கொண்டுவரப்பட்ட நம்பிக்கையில்லா தீர்மானமும் அந்த நம்பிக்கையில்லா தீர்மானத்தைக் கொண்டுவருவதற்கு அதன் தலைவர்கள் எடுத்த முயற்சிகளும் கொடுத்த வழிகாட்டுதல்களும் தமிழரசுக் கட்சியின் நடவடிக்கைகள்மீது தமிழ் மக்கள் மத்தியில் பாரிய வெறுப்பை ஏற்படுத்தியுள்ளது.

மாகாணசபையை திறம்பட நடத்துவதற்கு வழிகாட்ட வேண்டியவர்கள் அதனைச் சீர்குலைப்பதற்கு முன்னின்று உழைத்தார்கள். மக்கள் அணிதிரண்டு வந்து இந்த சீர்குலைப்பு நடவடிக்கைக்கு எதிராக நடத்திய பெரும் போராட்டங்களிலிருந்து தமிழரசுக் கட்சி நிறையவே பாடங்கள் கற்றுக்கொள்ள வேண்டியிருக்கின்றது.

யுத்தத்திற்கு பின்னர் எமக்குக் கிடைத்த பல சந்தர்ப்பங்கள் கைநழுவ விடப்பட்டன. ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்பாக மைத்திரிபால சிறிசேன. ரணில் விக்கிரமசிங்கவுடன் எமது பிரச்சினை தொடர்பில் ஒரு உடன்பாட்டிற்கு வருமாறு கோரினோம். அது கைவிடப்பட்டது.

ஆட்சி மாற்றம் என்பது அமெரிக்கா, இந்தியா போன்ற நாடுகளுக்கும் தேவைப்பட்டது. அவர்களுடன் பேசி சில முக்கிய விடயங்களைக் கையாண்டிருக்கலாம். அதுவும் கைவிடப்பட்டது.

ஐ.நா. சபையில் சர்வதேச விசாரணையை வலியுறுத்தியிருக்கலாம். அதுவும் கைவிடப்பட்டது.

எமது முக்கிய கோரிக்கைகள் தொடர்பாக அரசாங்கத்துடன் ஒரு வெளிப்படையான பேச்சுவார்த்தையை நடத்தி தீர்வுகளை எட்ட முயற்சித்திருக்கலாம். அதற்கான சர்வதேச சூழல்களும் கனிந்திருந்தது. அதனை நாங்கள் வலியுறுத்தியபோது அதுவும் ஏற்றுக்கொள்ளப்படவில்லை.



பாராளுமன்றம், மாகாண சபைகளில் இருக்கக்கூடிய எமது பிரதிநிதித்துவ பலத்தைப் பிரயோகித்து எமது அன்றாட பிரச்சினைகளான மீள்குடியேற்றம், காணிவிடுவிப்பு, அரசியல் கைதிகளின் விடுதலை மற்றும் காணாமல் ஆக்கப்பட்டோர் விவகாரம் உள்ளிட்ட பல்வேறு விடயங்களில் திட்டவட்ட முடிவுகளை எடுத்திருக்கலாம். ஆனால் அவற்றின்மீது உரிய அக்கறை செலுத்தப்படவில்லை.

வெளிப்படைத் தன்மையுடன் நடத்தப்பட வேண்டிய பல விடயங்கள் இரகசியம்பேணுதல் என்ற அடிப்படையில் நடந்ததாலும் பங்காளிக் கட்சிகளுடன் கூட பேச்சுவார்த்தை மற்றும் கலந்துரையாடல்களை நடத்தத் தயங்கியதாலும் அரசியல் சாசன விவகாரத்தில் உள்ளார்ந்த நடவடிக்கைகளை எம்மால் அறிய முடியவில்லை.

இந்த இரகசிய நடவடிக்கைகள் என்பது தமிழ்ச் சமூகத்தை இன்று நட்டாற்றில் தள்ளிவிட்டிருக்கிறது. தமிழரசுக் கட்சியின் தன்னிச்சையான செயற்பாட்டால் ஏற்பட்டுள்ள இந்த அவல நிலைக்கு ஒட்டுமொத்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பையும் பங்காளிகளாக்க அந்த கட்சி எத்தணிக்கிறது.

தமிழரசுக் கட்சியின் தான்தோன்றித்தனமான செயற்பாடுகளும், அந்த கட்சி உள்நாட்டிலும் சர்வதேச அரங்கிலும் இராஜதந்திர ரீதியில் அடைந்து வரும் தோல்விகளாலும் சம்பந்தன் மற்றும் சுமந்திரன் ஆகியோரின் சர்வாதிகாரத்தனமான நடவடிக்கைகளாலும் வெளிப்படைத் தன்மையற்ற அரசுடன் இணைந்த இரகசிய வேலைத் திட்டங்களாலும் ஐக்கியம் என்று சொல்லிக் கொண்டே ஐக்கியத்தை சீர்குலைப்பதாலும் இன்றைய இக்கட்டான காலகட்டத்தில் தமிழ் மக்களுக்கு ஓர் கூட்டான மாற்றுத் தலைமை தேவை என ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி கருதுகின்றது.

(முற்றும்)

**சுரேஷ் க.பிரேமச்சந்திரன்**
தலைவர், ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி

## மூத்த சகோதரன் படுகொலை மூவர் பொலிஸாரால் கைது

(கொழும்பு)

எகலியகொட பகுதியில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த சகோதரர்களுக்கு இடையில் நேற்று முன்தினம் இரவு 9.15 அளவில் இடம்பெற்ற மோதலில், ஒருவர் உயிரிழந்துள்ளதாக எகலியகொட பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவத்தில், 34 வயதுடைய மொஹமட் சஷிம் என்ற நபர் எகலியகொட வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் உயிரிழந்துள்ளார் என்று பொலிஸாரின் விசாரணையிலிருந்து தெரியவந்துள்ளது.

சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது.

ஒரே குடும்பத்தைச் சேர்ந்த 4 சகோதரர்களுக்கு இடையில் மோதல் இடம்பெற்றுள்ளது. இதன்போது ஏனைய மூன்று சகோதரர்களும் ஒன்றிணைந்து மூத்த சகோதரரைப் பொல்லால் தாக்கி, பின்னர் கத்தியால் குத்தியுள்ளதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

மூன்று சந்தேக நபர்களையும் எகலியகொட பொலிஸார் கைது செய்துள்ளதுடன், சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணையை முன்னெடுத்துள்ளனர். (இ-3)

## அரச அலுவலகங்களில் தகுதியான அதிகாரிகள் நியமிக்கப்பட வேண்டும்

### சுமனரத்ன தேரர் வலியுறுத்து

(கொழும்பு)

கிழக்கு மாகாணத்தில் உள்ள மாவட்ட செயலகங்களிலும் பிரதேச செயலகங்களிலும் பொலிஸிலும் பெரும்பான்மையோர் முஸ்லிம் அலுவலர்களாகவே இருக்கின்றனர்.



இதனால் தமிழ் மக்களினதும் சிங்கள மக்களினதும் தேவைகளை நிறைவேற்றிக்கொள்ள முடியாத நிலைமை தோன்றியுள்ளதாக மட்டக்களப்பு மங்களராமய விகாராதிபதி அம்பிட்டியே சுமனரத்ன தேரர் தெரிவித்தார்.

மட்டக்களப்பு கோறளைப்பற்று பிரதேச செயலகத்திற்குட்பட்ட மீறாவோடை சக்தி வித்தியாலய விளையாட்டு மைதானத்தின் காணி அத்துமீறி அபகரிக்கப்பட்டுள்ளதாக தெரிவித்து நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொண்டு ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இதனை தெரிவித்தார்.

தமிழ் மக்களினதும் சிங்கள மக்களினதும் தேவைகளை நிறைவேற்றிக்கொள்ள முடியாத நிலைமை தோன்றியுள்ளது. இதனால் நாங்கள் அரசாங்கத்திடம் வேண்டுகோள் ஒன்றை விடுக்கின்றோம்.

மாவட்ட செயலகங்களிலும் பிரதேச செயலகங்களிலும் பொலிஸிலும் தேவையான தகுதியான அலுவலர்களை சரியாக பிரித்து பணியமர்த்துமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

ஏறாவூர் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி, அவருக்கு வேண்டிய விதத்தில் செயற்பட்டு வருகின்றார்.

ஒவ்வொரு நாளும் பாடசாலை மாணவர்களை வீதிகளில் கொண்டு வந்து ஆர்ப்பாட்டம் செய்வது தவறு.

மாணவர்கள் கல்வி கற்பதற்கு இடங்கொடுக்க வேண்டும். நான் ஒரு மதகுரு என்ற அடிப்படையில் தமிழ், முஸ்லிம் மக்களுடன் பழகும் ஒருவனாக இருக்கின்றேன்.

அதுஎல்லோருக்கும்தெரியும் தமிழ் மக்களோடு எமக்கு இருக்கும் அந்நியோன்யம் சமய சூழலோடு சேர்த்து இதிகாசத்திலும் வேண்டு மான அளவு சம்பந்தம் இருக்கின்றது என்பதை சுட்டிக்காட்ட விரும்புகின்றேன் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

## மனிதப்படுகொலையுடன் தொடர்புடைய மூவர் கைது

(கொழும்பு)

மனிதப் படுகொலையுடன் சம்பந்தப்பட்ட சந்தேக நபர்கள் மூன்று பேர் தலங்கம பிரதேசத்தில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளனர்.

மிரிஹான விஷேட குற்ற செயற்பாட்டுப் பிரிவிற்கு கிடைத்த தகவலின் பிரகாரம் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில் இவர்கள் கைது செய்யப்பட்டதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அலுவலகம் கூறியுள்ளது.

கடந்த ஏப்ரல் மாதம் 28ஆம் திகதி தலங்கம பிரதேசத்தில் கூரிய ஆயுதத்தால் தாக்கப்பட்டு ஒருவர் கொலை செய்யப்பட்டிருந்ததுடன், மிரிஹான விஷேட குற்ற செயற்பாட்டுப் பிரிவினால் இது தொடர்பான நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டிருந்தன.

கைது செய்யப்பட்டவர்கள் தலவத்துகொட பிரதேசத்தைச் சேர்ந்தவர்கள் என்று பொலிஸார் தெரிவித்தனர். (இ-7)

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603
021 567 1532

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



யாழ். புற்றளை மகா வித்தியாலயத்தின் வருடாந்த பரிசளிப்பு விழா அண்மையில் வித்தியாலய அதிபர் ஆ.சிவநாதன் தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக கலந்து கொண்ட யாழ். பல்கலைக்கழக கணிதத்துறைப் பேராசிரியர் சி.சிறிசற்குணராசா பாடசாலை சமூகத்தினரால் அழைத்து வரப்படுவதையும் மாணவர் ஒருவருக்கு பரிசில் வழங்குவதையும் மாணவர்களையும் படங்களில் காணலாம்.

# பன்மைத்துவத்தைப் பேணி 'இலங்கையர் என்ற அடையாளம் வேண்டும்'-மனோ



(கொழும்பு)

பழைய பிழைகளை திருத்திக் கொண்டு முன்னோக்கிச் செல்ல வேண்டிய காலம் நல்லாட்சியில் உருவாகியுள்ளது. இந்தச் சூழலில், பன்மைத்துவத்தைப் பேணி, இலங்கையர் என்ற அடையாளத்துடன் முன்னோக்கிச் செல்ல வேண்டும்" என, தேசிய சகவாழ்வு, கலந்துரையாடல் மற்றும் அரச கரும மொழிகள் அமைச்சர் மனோ கணேசன் தெரிவித்தார்.

கொழும்பு சிறிமாவோ பண்டாரநாயக்க ஞாபகார்த்த கண்காட்சி மண்டபத்தில் People of Sri Lanka (இலங்கையின் மக்கள்) எனும் மானுடவியல் ஆய்வு நூல் வெளியீட்டு விழா, நேற்று முன்தினம் நடைபெற்றது.

இந்நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் உரை நிகழ்த்துகையில்,

"இன்று எமது நாட்டுக்கு மட்டுமல்ல, முழு உலகத்துக்குமே முக்கியமானதொரு நாளாகும். எமது நாட்டின் பல்லின கலாசாரத்தையும் மக்களின் வாழ்வியலையும், இன்று நாம் வெளிக்கொண்டு வந்திருக்கிறோம்.

"எனக்கு இனம், மொழி, மதம் உண்டு. அதேபோல் எனது சகோதரர்களுக்கும் உண்டு. எனது சகோதரர்களுக்கு, அவை தொடர்பில் உள்ள அக்கறையை நான் உணர்ந்து கொண்டுள்ளேன். இந்த நாட்டில் வாழ்ந்துகொண்டிருக்கும் ஏனைய சமூகங்கள், அவற்றின் கலை, கலாசாரங்கள் குறித்து நாம் அறிந்துகொள்ள வேண்டும்.

"இது ஜனநாயக நாடு. இங்கே ஏராளமான அரசியல் கட்சிகள் இருக்கின்றன. அவை ஒவ்வொன்றும் ஏராளமான நிறங்களைக் கொண்டிருக்கின்றன. ஆனால், நாம் எல்லோரும் இலங்கையர்கள் தான். எமது பொது நோக்கு, அதுவாகவே இருக்க வேண்டும்.

எனக்கு முதல் இந்த அமைச்சுக்குப் பொறுப்பாகவிருந்தவர்கள் சிறப்பாகச் செயற்பட்டிருக்கிறார்கள். அதனைப் பன்மடங்காக்கி சேவையாற்ற வேண்டிய கடப்பாடு எனக்கு இருக்கிறது" எனத் தெரிவித்தார். (இ-7)

# சோபித தேரருக்காக ரூ.300 மில்.செலவில் இந்தியாவால் கிராமம்



கோட்டே ஸ்ரீநாக விஹாரையின் பீடாதிபதி அமரர் மாதுலுவாவே சோபித தேரருக்காக கிராமம் ஒன்று அமைக்க உள்ளது. அநுராதபுரம் மாவட்டத்தில் இந்த கிராமம் அமைக்கப்படவுள்ளது.

எல்பாத்தகம என்னும் கிராமமே சோபித தேரர் கிராமமாக அபிவிருத்தி செய் யப்படவுள்ளது. சபாநாயகர் கரு ஜயசூரிய முன்னிலையில் இது தொடர்பான உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டுள்ளது.

இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர் தரன்ஜித் சிங் சந்துவும், வீடமைப்பு அமைச்சின் செயலாளர் டபிள்யு. கே.கே. அதுகோரளவும் இந்த உடன்படிக்கையில் கைச்சாத்திடவுள்ளனர்.

இந்த கிராமத்தை அபிவிருத்தி செய்ய இந்திய அரசாங்கம் 300 மில்லியன் ரூபாவினை வழங்கவுள்ளது. இந்த கிராமத்தில் சுமார் 153 புதிய வீடுகள் அமைக்கப்பட உள்ளன. (இ-7)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 1137

Search for people, places and things Nagendram Home

**லதா**




**குவேனி**




**ராதிகா**





**றொகான்**




**மீரா**




**வரதன்**



நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஞானசாரரின் நடவடிக்கைகள் ஏற்றுக்கொள்ளக்கூடியதல்ல

## நீதவான் திசாநாயக்க சாட்சியம்



பொதுபல சேனா அமைப்பின் பொதுச் செயலாளர் ஞானசார தேரரின் நடவடிக்கைகள் ஏற்றுக் கொள்ளக் கூடியதல்ல என கொழும்பு மேலதிக நீதவான் ரங்க திசாநாயக்க தெரிவித்துள்ளார்.

ஞானசார தேரர் ஹோமாகம நீதிமன்றில் குழப்பம் விளைவித்த சம்பவம் குறித்து நேற்று முன்தினம் மேன்முறையீட்டு நீதிமன்றில் வழக்கு விசாரணை நடத்தப்பட்டது. இந்த விசாரணைகளில் சாட்சியமளித்த நீதவான் ரங்க திசாநாயக்க இவ்வாறு சாட்சியமளித்தார்.

நீதிமன்றிற்குள் தொலைபேசி ஒலித்தாலோ, கொட்டாவி விட்டாலோ விளக்க மறியலில் வைப்பதற்கு அதிகாரம் உண்டு.

இவ்வாறான ஓர் பின்னணியில் ஞானசார தேரரின் நடவடிக்கைகள் ஏற்றுக் கொள்ளக் கூடியதல்ல. ஊடகவியலாளர் பிரகீத் எக்னெலிகொட காணாமல் போன சம்பவம் தொடர்பிலான சந்தேக நபர்களை விளக்க மறியலில் வைக்குமாறு உத்தரவிட்ட போது ஹோமாகம நீதிமன்றில் ஞானசார தேரர் கலகத்தில் ஈடுபட்டார்.

நீதிமன்றின் மீது கட்டளையிடும் தொனியில் கருத்துக்களை வெளியிட்டார். ஏற்கனவே திட்டமிட்ட வகையில் ஞானசார தேரர் இவ்வாறு நடந்து கொண்டது தெளிவாகியது.

நீதிமன்றில் கலகத்தில் ஈடுபட்டமை ஏற்றுக்கொள்ளக் கூடிய விடயமல்ல என நீதவான் சாட்சியமளித்துள்ளார். (இ-7)

## ஐ.நா.நிபுணருக்கு அனுமதி

# அமைச்சரவையில் சீறிய மைத்திரி



(கொழும்பு)

ஐ.நா. சிறப்பு அறிக்கையாளர் பென் எமர்ஷனை, சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள விடுதலைப் புலிகள் இயக்க சந்தேக நபர்களைச் சந்திக்க அனுமதி கொடுத்தது யார் என்று ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன கேள்வி எழுப்பியுள்ளார்.

நேற்று முன்தினம் நடந்த அமைச்சரவைக் கூட்டத்திலேயே ஜனாதிபதி இந்தக் கேள்வியை எழுப்பியிருந்தார்.

இலங்கையில் ஐந்து நாட்கள் பயணம் மேற்கொண்டிருந்த ஐ.நா. சிறப்பு அறிக்கையாளர் பென் எமர்ஷன், தனது பயணத்தின் முடிவில் நடத்திய செய்தியாளர் சந்திப்பில் பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்கள் மீது திட்டமிட்ட சித்திரவதைகள் இடம்பெறுவதாக குற்றம் சாட்டியிருந்தார்.

அத்துடன் நீதித்துறை, சுதந்திரம் உள்ளிட்ட விடயங்கள் குறித்தும் அவர் விமர்சித்திருந்தார்.

இதற்கு நீதி அமைச்சர் விஜேதாச ராஜபக்ஷ கடும் எதிர்ப்பை வெளியிட்டார்.

இந்த நிலையிலேயே நேற்று முன்தினம் அமைச்சரவைக் கூட்டத்தில் விடுதலைப் புலிகள் இயக்க சந்தேக நபர்களைச் சந்திப்பதற்கு ஐ.நா. அறிக்கையாளருக்கு அனுமதி கொடுத்தது யார் என்று ஜனாதிபதி கேள்வி எழுப்பியுள்ளார்.

இலங்கை வெளிவிவகார அமைச்சே இதற்கான அனுமதியை வழங்கியதாக தெரிவிக்கப்படுகிறது. (இ-7)

# ‘அன்னம்’ சின்னத்திலே களமிறங்க வேண்டும்

எதிர்காலத்தில் நடைபெறவிருக்கின்ற உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தல்களின் போது, புதிய ஜனநாயகக் கட்சியின் சின்னமான அன்னம் சின்னத்தில் களமிறங்குமாறு ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்களடங்கிய குழுவொன்று வலியுறுத்தியுள்ளதாக அறிய முடிகின்றது.

அன்னம் சின்னத்தில் களமிறங்கும் போது, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியும் ஐக்கிய தேசியக் கட்சியும் இணைந்தே போட்டியிட வேண்டுமென்று அக்குழு வலியுறுத்தியுள்ளது.

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவரான பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவை அந்தக்குழு அண்மையில் சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தியுள்ளது.

இதன்போதே மேற்கண்ட கோரிக்கை முன்வைக்கப்பட்டதாக அந்தத் தகவல் தெரிவிக்கின்றது.

எனினும் இந்த யோசனைக்கு ஐக்கிய தேசியக் கட்சியைச் சேர்ந்த மற்றுமொரு குழு கடும் எதிர்ப்பை வெளிக்காட்டியுள்ளது என்றும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியுடன் மீண்டுமொரு தடவை கைகோர்த்துக் கொண்டு பயணிப்பதற்கு தாம் தயாரில்லை என்றும் அக்குழு தெரிவித்துள்ளதாக அறியமுடிகின்றது.

தேசிய அரசாங்கம் தொடர்பில் ஐக்கிய தேசியக் கட்சியின் கீழ்மட்ட உறுப்பினர்கள் கூட, பெரும் விரக்தியடைந்த நிலையிலேயே உள்ளனர் என்றும் அந்த மாற்றுக்குழு இந்த சந்திப்பின் போது சுட்டிக்காட்டியுள்ளதாகவும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியுடன் கூட்டணியமைப்பது என்ற எண்ணத்தை கைவிடுமாறும் அந்தக் குழு வலியுறுத்தியுள்ளதாகவும் அந்தத் தகவல் தெரிவித்துள்ளது. (இ-7)

# தென்கொரிய மாணவி மீது பாலியல் துஷ்பிரயோகம் குற்றச்சாட்டிலிருந்து இலங்கையர் விடுதலை

தென்கொரியாவில் பாலியல் துஷ்பிரயோக குற்றச்சாட்டுக்குள்ளான இலங்கையர் ஒருவரை அந்த நாட்டு நீதிமன்றம் விடுதலை செய்துள்ளது.

குறித்த சம்பவத்தில், குற்றம் சுமத்தப்பட்ட இலங்கையருக்கு எதிராக போதிய ஆதாரங்கள் இல்லை என்று தெரிவித்து அவர் நீதிமன்றத்தினால் விடுவிக்கப்பட்டுள்ளார்.

கடந்த 1998ஆம் ஆண்டு 18 வயதான மாணவி ஒருவரை குறித்த இலங்கையர் பாலியல் துஷ்பிரயோகத்துக்கு உள்ளாக்கியதாக 2013 ஆம் ஆண்டு குற்றம் சுமத்தப்பட்டிருந்தது.

51 வயதான குறித்த இலங்கையர் மீதே இவ்வாறு குற்றம் சுமத்தப்பட்டிருந்ததாக ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

மேலும், இந்த சம்பவத்தில் பாதிக்கப்பட்ட குறித்த மாணவி பாரவூர்தி ஒன்றில் மோதுண்டு உயிரிழந்துள்ளார் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்நிலையில் குற்றம்சாட்டப்பட்டவர் நேற்று விடுதலை செய்யப்பட்டார். (இ-7)

# எந்தவொரு எம்.பி.யின் தகைமை குறித்த தகவல் பாராளுமன்றில் இல்லை

(கொழும்பு)

எந்தவொரு பாராளுமன்ற உறுப்பினருடையதும் கல்வித் தகைமைகள் குறித்த தகவல்கள் பாராளுமன்றத்தில் இல்லை என பாராளுமன்ற பிரதிச் செயலாளர் நீல் தெரிவித்துள்ளார்.

மக்கள் பிரதிநிதியாக ஒருவர் தெரிவு செய்யப்பட்டு பாராளுமன்றத்துக்குள் பிரவேசித்த பிறகு, அவர்களது கல்வித் தகைமைகள் குறித்து கண்டறிவதற்கான பொறிமுறையொன்று காணப்படாதுள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

பூட்டான் போன்ற நாடுகளில் ஒருவர் பாராளுமன்ற உறுப்பினராக வேண்டுமாகவிருந்தால், அவர் பட்டதாரியாகவிருக்க வேண்டும் என்ற நிபந்தனை காணப்படுவதாகவும் 60 அல்லது 65 வயதைத் தாண்டியிருப்பவருக்கு அந்நாட்டில் பொதுமக்களிடம் வாக்குக் கேட்க முடியாது எனவும் நிபந்தனைகள் உள்ளதாகவும் அவர் கூறியுள்ளார். (இ-7)

# இலங்கை இராணுவத் தளபதி மகேஸுடன் இந். தூதரக பாதுகாப்பு ஆலோசகர் சந்திப்பு

இருதரப்பு முக்கியத்துவம் வாய்ந்த ஒத்துழைப்பு மற்றும் பரஸ்பர பயிற்சித் திட்டங்கள் தொடர்பாக, இலங்கை இராணுவத் தளபதியுடன் இந்தியத் தூதரக பாதுகாப்பு ஆலோசகர் கலந்துரையாடியுள்ளார்.



இலங்கையின் புதிய இராணுவத் தளபதி லெப்.ஜெனரல் மகேஸ் சேனநாயக்கவை இந்திய தூதரக பாதுகாப்பு ஆலோசகர் கப்டன் அசோக் ராவ் மற்றும் துணை பாதுகாப்பு ஆலோசகர் லெப். கேணல் ஜி.எஸ்.கிளயர் ஆகியோர் நேற்று முன்தினம் சந்தித்துக் கலந்துரையாடினர்.

இந்தச் சந்திப்பின் போது, இருதரப்பு முக்கியத்துவம் வாய்ந்த ஒத்துழைப்பு மற்றும் பரஸ்பர பயிற்சித் திட்டங்கள் தொடர்பாக பேச்சுக்கள் நடத்தப்பட்டுள்ளன.

இரண்டு நாடுகளின் இராணுவக் கட்டமைப்புகளுக்கு இடையிலும் மேலும் உறவுகளை வலுப்படுத்திக் கொள்வதன் அவசியம் குறித்தும் இதன்போது வலியுறுத்தப்பட்டுள்ளது. (இ-7)

# மதுபோதையில் வாகனம் செலுத்திய இருவருக்கு தலா 12,000 அபராதம்

## மல்லாகம் நீதிமன்று உத்தரவு

(யாழ்ப்பாணம்)

மதுபோதையில் வாகனம் செலுத்திய இருவருக்கு தலா 12 ஆயிரம் ரூபாய் தண்டப் பணம் விதிக்கப்பட்டுள்ளது. பண்டத்தரிப்பு பகுதியில் கடந்த 16ஆம் திகதி ரோந்துப் பணியில் ஈடுபட்டிருந்த இளவாலைப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு கடந்த 17 ஆம் திகதி திங்கட்கிழமை மல்லாகம் நீதவான் நீதிமன்றில் மேற்படி இருவரையும் ஆஜர்படுத்திய போது சாரதி அனுமதிப்பத்திரம் இன்றி வாகனம் செலுத்தியமை, மது அருந்தி விட்டு வாகனம் செலுத்தியமை மற்றும் அபாயகரமாக வாகனம் செலுத்தியமை போன்ற குற்றச்சாட்டுக்களின் அடிப்படையில் குறித்த இருவருக்கும் தலா 12 ஆயிரம் ரூபாவை தண்டப்பணமாக செலுத்துமாறு மல்லாகம் நீதவான் உத்தரவிட்டார். (இ-10-104)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆடி மாத இராசி பலன்கள்

## 17.07.2017-16.08.2017

## விலகிச் சென்ற சொந்தங்கள் விரும்பி வந்து சேரும்



பிரியமானவர்களிடம் விட்டுக் கொடுத்துச் செல்லும் துலாம் இராசி அன்பர்களே!

ஆடி மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது, உங்கள் இராசிநாதன் சுக்ரன் அஷ்டமத்தில் பலம்பெற்றுச் சஞ்சரிக்கிறார். குருவின் பார்வை அவர் மீது பதிகிறது. எனவே பொருளாதாரத்தில் நிறைவு ஏற்படும். புதிய ஒப்பந்தங்கள் வந்து சேரும். அருளாளர்களின் ஆலோசனை அப்போதைக்கப்போது கைகொடுக்கும். அதிகாரப் பதவியில் உள்ளவர்களின் ஒத்துழைப்போடு தொழில் முன்னேற்றம் காண்பீர்கள். பெண்வழிப் பிரச்சினைகள் அகலும்.

உங்கள் இராசிக்கு 2ஆம் இடத்தில் சனி பகவான் வக்ர இயக்கத்தில் இருக்கிறார். குடும்பச் சனியாக தற்சமயம் நடைபெறுவதால் குடும்பத்தில் சுபச் செலவுகள் அதிகரிக்கும். வீடு கட்ட வேண்டும் அல்லது வீடு வாங்க வேண்டுமென்று நினைத்தவர்களுக்கு அது கைகூடும். ஏழரைச் சனி முழுமையாக விலகும் வரை பெரிய முதலீடு செய்வதைத் தவிர்ப்பது நல்லது.

6இற்கு அதிபதியான குருபகவான் 12ஆம் இடத்தில் சஞ்சரிப்பதால் விபரீத இராஜ யோகம் செயற்படுகிறது. அந்த அடிப்படையில் பார்க்கும் பொழுது, சில காரியங்களை செய்ய இயலவில்லையே என்று நீங்கள் நினைத்திருக்கலாம். அந்த வகையான காரியங்கள் இப்பொழுது நண்பர்களின் ஒத்துழைப்போடும், திறமை மிக்கவர்களின் பழக்கத்தினாலும் நிறைவேறி ஆச்சரியத்தில் ஆழ்த்தும்.

இந்த மாதம் ராகுகேதுக்களின் பெயர்ச்சியும் நிகழவிருக்கிறது. இதுவரை இலாப ஸ்தானத்தில் சஞ்சரித்து வந்த ராகு இப்பொழுது தொழில் ஸ்தானத்தில் சஞ்சரிக்கப் போகிறார். 5ஆம் இடத்தில் சஞ்சரித்து வந்த கேது, இப்பொழுது சுக ஸ்தானத்தில் சஞ்சரிக்கப் போகிறார். எனவே ஆரோக்கியத் தொல்லையால் அவதிப்படாமல் இருக்கவும், தொழிலில் எதிர்பார்த்த இலாபம் கிடைக்கவும் ராகு-கேது பெயர்ச்சிக்குப் பிறகு அனுகூலமான நாளில் சர்ப்ப சாந்திப் பரிகாரம் செய்வது நல்லது.

உங்கள் இராசிநாதன் சுக்ரன் வெள்ளிக்கிழமைக்கு அதிபதியானவர். எனவே வெள்ளிக்கிழமை தோறும் விரதமிருந்து அம்பிகையை வழிபடுவதோடு, ஆடிப்பூரம் அன்று அம்பிகையின் திருக் கல்யாணக் காட்சியை காண்பது நல்லது.

**சிம்ம புதனும், வக்ர புதனும்!**

உங்கள் இராசிக்கு 9 ஆம் இடம் மற்றும் 12 ஆம் இடம் ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர் புதன். விரயாதிபதியாக விளங்கும் புதன் இப்பொழுது ஜுலை 22 ஆம் திகதி இலாப ஸ்தானத்திற்கு வருகிறார். இதன் விளை வாக

ஒருசிலர் திடீர் விரயங்களை சந்திக்க நேரிடும். வீண் விரயங்கள் ஆகாமல் இருக்க வீட்டிற்குத் தேவையான விலையுயர்ந்த பொருட் களை வாங்கி மகிழ்வது நல்லது. குறிப்பாக பிள்ளைகளின் கல்யாண சீர்வரிசை பொருட்களை வாங்கி மகிழலாம்.

ஜுலை 30 ஆம் திகதி சிம்மத்திலும், ஒகஸ்ட் 6 ஆம் திகதி கடகத்திலும் புதன் வக்ரம் பெறுகிறார். இந்த வக்ர இயக்கம் உங்களுக்கு நன்மையையே வழங்கும். விலகிச்




சென்றவர்கள் விரும்பி வந்திணைவர்.

**ராகு-கேதுக்களின் பெயர்ச்சி காலம்!**

ஜுலை 27 ஆம் திகதி கடகத்திற்கு ராகுவும், மகரத்திற்கு கேதுவும் செல்கிறார். இந்த ராகு மாற்றம் உங்களுக்கு ஓரளவு நன்மையையே கொடுக்கும். புதிய ஒப்பந்தங்கள் வந்து சேரும். நண்பர்கள் இல்லத்தில் நல்ல காரியம் நடைபெற வழிவகுத்துக் கொடுப்பர். கேது சுக ஸ்தானத்தில் சஞ்சரிக்கப் போவதால் ஆரோக்கியத் தொல்லை ஏற்படும். மாற்று மருத்துவத்தை மேற் கொண்டு உடல்நலத்தை

சீராக்கிக் கொள்வது நல்லது. அதேநேரத்தில் ராகு தொழில் ஸ்தானத்திற்கு செல்வது யோகம்தான். மூடிக்கிடந்த தொழிலுக்கு திறப்புவிழா நடத்திப் பார்ப்பீர்கள். வருமானம் திருப்திகரமாக இருக்கும்.

**சனியின் வக்ர இயக்க காலம்!**

ஒகஸ்ட் 4 ஆம் திகதி சனி வக்ர நிவர்த்தியாகிறார். எனவே குடும்பத்தில் குதூகலம் தரும் சம்பவங்கள் நிறைய நடைபெறும். மங்கள ஓசை மனையில் கேட்க வழிபிறக்கும். சொத்துகளால் ஆதாயம் உண்டு. விலகிச் சென்ற சொந்தங்கள் விரும்பி வந்து சேரும்.

**பெண்களுக்கான சிறப்பு பலன்கள்**

குடும்பச்சுமை கூடும் மாதம் இது. கொடுக்கல்-வாங்கல்கள் ஒழுங்காகும். கணவன்-மனைவிக்குள் அன்பும் பாசமும் அதிகரிக்கும். ஒற்றுமை பலப்படும். உங்கள் பெயரிலேயே சொத்துகள் வாங்க குடும்ப உறுப்பினர்கள் சம்மதிப்பார்கள். குழந்தைகளின் கல்வி முன்னேற்றம் கண்டு பெருமைப்படுவீர்கள். உடன்பிறப்புகளால் சில சமயங்களில் பிரச்சினைகள் உருவாகலாம். கடன் சுமை குறையும். தாய்வழி ஆதரவு தக்க விதத்தில் கிடைக்கும். ராகு-கேது பெயர்ச்சிக்கு பின் உத்தியோகத்தில் எதிர்பார்த்த மாற்றங்கள் வந்து சேரும். வெள்ளிக்கிழமை தோறும் அம்பிகை வழிபாட்டை மேற்கொள்வதோடு, நாக சாந்திப் பரிகாரங்களைச் செய்து கொள்வது நல்லது.

ஜோதிடக் கலாமணி
சிவல்புரி சிங்காரம்

## பணத்தேவைகள் உடனுக்குடன் பூர்த்தியாகும்



பிரச்சினைகளை எளிய முறையில் தீர்க்க உதவும் விருச்சிக இராசி அன்பர்களே!

ஆடி மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது, மாதத் தொடக்கத்தில் உங்கள் இராசிநாதன் செவ்வாய் 9ஆம் இடத்தில் சூரியன் மற்றும் புதனுடன் இணைந்து சஞ்சரிக்கிறார். சூரியன் உங்கள் இராசி அடிப்படையில் தொழில் ஸ்தானாதிபதியாக விளங்குபவர். புதன் அஷ்டமாதிபதியாக விளங்கினாலும், லாபாதிபதியாக திகழ்பவர். எனவே தொழில் வளர்ச்சி கூடுதலாக இருக்கும். உங்களின் முன்னேற்றம் மற்றவர்களை ஆச்சரியப்பட வைக்கும்.

கடந்த சில மாதங்களாக மனக்குழப்பத்துடன் வாழ்ந்த உங்களுக்கு, இப்பொழுது பணப்புழக்கம் அதிகரிக்கும். நண்பர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும். ஏழரைச் சனி, வக்ர இயக்கத்தில் இருப்பதால் ஆரோக்கியத் தொல்லை அகலும். உற்சாகத்துடன் பணி புரிந்து உன்னத நிலையை அடைவீர்கள். சுபவிரயங்கள் அதிகரிக்கும். கூட்டு முயற்சியில் அனுகூலம் உண்டு. அரசுவழி சலுகை உண்டு.

புத ஆதித்ய யோகம் இருப்பதால் புகழும் பாராட்டும் கிடைக்கும். நல்ல காரியமொன்றைச் செய்து முடிப்பீர்கள். கல்வி முயற்சியில் வெற்றி கிடைக்கும். கலைத் துறையில் ஈடுபட்டு வெற்றி பெற நினைப்பவர்களுக்கு, பிரபலஸ்தர்களின் சந்திப்பு கிடைக்கும். அதன் மூலம் எதிர்பார்ப்பு நிறைவேறும்.


இம்மாதம் ராகு-கேதுக்களின் பெயர்ச்சி நிகழவிருக்கிறது. இந்த பாம்புக் கிரகங்களின் பெயர்ச்சிதான் உங்கள் வாழ்க்கையில் மிகுந்த முன்னேற்றத்தைக் கொடுக்கும். இதுவரை 10 இல் சஞ்சரித்து வந்த ராகு, இனி 9 இல் சஞ்சரிக்கப் போகிறார். 9இல் சஞ்சரிக்கும் ராகுவால் ஒளிமயமான எதிர்காலம் உருவாகப் போகிறது. பூர்வ புண்ணியத்தின் பலனாக உங்களுக்கு கிடைக்க வேண்டிய யோகங்கள் அனைத்தும் வந்து சேரும்.

ஞானகாரகன் கேது இப்பொழுது 3 ஆம் இடத்திற்கு வரப்போகிறார். வழக்குகள் சாதகமாகும். வசதிகள் பெருகும். உடன்பிறப்புகள் உங்கள் குணமறிந்து நடந்து கொள்வர். திருப்பணிகள் செய்யும் வாய்ப்பு கைகூடும்.

ராகு-கேதுக்களால் தொழில் வளம் கூடவும், பொருள் வளம் பெருகவும், குடும்ப முன்னேற்றம் அதிகரிக்கவும் நாகசாந்திப் பரிகாரங்களை யோகம் தரும் ஸ்தலங்களைத் தேர்ந்தெடுத்துச் செய்வது நல்லது. வெள்ளிக்கிழமை தோறும் அம்பிகை வழிபாட்டை மேற்கொள்ளுங்கள்.

**சிம்ம புதனும், வக்ர புதனும்!**

ஜுலை 22 ஆம் திகதி சிம்ம இராசிக்கு புதன் வருகிறார். லாபாதிபதி தொழில் ஸ்தானத்தில் சஞ்சரிக்கும் பொழுது, தொழில் சிறப்பாக நடைபெறும். துணையாக இருப்பவர்கள் தோள் கொடுத்து உதவுவர். உத்தியோகத்தில் உள்ளவர்களுக்கு உயர் பதவியும், ஊதிய உயர்வும் கிடைக்கும். ஜுலை 30 ஆம் திகதி சிம்மத்திலும், ஒகஸ்ட் 6 ஆம் திகதி கடகத்திலும் புதன் வக்ரம் பெறுகிறார். அஷ்டமாதிபதியாகவும் புதன்




விளங்குவதால், இந்த வக்ர காலத்திலும் உங்களுக்கு ஒருசில நன்மைகள் நடைபெறும். தொழிலில் புதிய பங்குதாரர்கள் வந்திணைந்து பொருளாதார நிலையை பெருக்கிக் கொடுப்பர்.

**ராகு-கேது பெயர்ச்சிக் காலம்!**

ஜுலை 27 ஆம் திகதி கடகத்திற்கு ராகுவும், மகரத்திற்கு கேதுவும் வருகிறார்கள். இந்த மாற்றம் ஒரு நல்ல மாற்றம்தான். 9 ஆம் இடத்திற்கு ராகு சஞ்சரிக்கும் பொழுது, பொன், பொருள் சேர்க்கை ஏற்படும். புகழ் கூடும். பண்புள்ள மனிதர்களின் பழக்கத்தால் பணத்தேவைகள் உடனுக்குடன் பூர்த்தியாகும். புதிய ஒப்பந்தங்கள் வந்து சேரும். பூமி வாங்கும் யோகமும் உண்டு. கேது பலத்தால் சகோதர சச்சரவுகள் அகலும். வழக்குகள் சாதகமாகும்.

கொடுக்கல்-வாங்கல்கள் திருப்திகரமாக இருக்கும். அருளாளர்களின் ஆலோசனைகளோடு தொடங்கிய காரியம் வெற்றிகரமாக முடியும்.

**சனியின் வக்ர நிவர்த்திக் காலம்!**

உங்கள் இராசியை பொறுத்தவரை சனி பகவான், சகாய ஸ்தானம் மற்றும் சுக ஸ்தானத்திற்கு அதிபதியானவர். அவர் இதுவரை வக்ர இயக்கத்தில் இருந்தார். ஒகஸ்ட் 4 ஆம் திகதி வக்ர நிவர்த்தியாகிறார். எனவே, ஆரோக்கியத் தொல்லை அகலும். அதிகார வர்க்கத்தினரின் ஆதரவு கிடைக்கும். குடும்பத்தில் சுபகாரியப் பேச்சுகள் நல்ல முடிவிற்கு வரும். உத்தியோகத்தர்களில் ஒரு சிலருக்கு உத்தியோக உயர்வும் ஊதிய உயர்வும் வந்து சேரும்.

**பெண்களுக்கான சிறப்பு பலன்கள்**

மகிழ்ச்சி அதிகரிக்கும் மாதம் இது. மாங்கள நிகழ்ச்சி அதிகம் நடைபெறும். கணவன்-மனைவி ஒற்றுமை பலப்படும். உங்கள் பெயரிலேயே தொழில் தொடங்க குடும்ப உறுப்பினர்கள் சம்மதிப்பர். பிள்ளைகளால் பெருமை சேரும். குரு புத்திர ஸ்தானத்தை பார்ப்பதால் பிள்ளைகளின் விவாகம் பற்றியோ, வேலைவாய்ப்பு கருதியோ ஏதேனும் முயற்சி செய்திருந்தால் அதில் அனுகூலம் கிடைக்கும். சகோதரர்கள் உங்களிடம் சகாயமாக நடந்து கொள்வர். ஆரோக்கியத் தொல்லை அகலும். தாய்வழி ஆதரவு திருப்தி தரும். தனவரவு திருப்தி தர, ராகு-கேதுக்களுக்கு முறையாக பிரீதி செய்வது நல்லது. மேலும் வெள்ளி தோறும் அம்பிகை வழிபாட்டை மேற்கொண்டால் நல்ல வாய்ப்புகள் உங்களை நாடி வரும்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org




# இந்தாப்பா உன் சந்தோசம்

ஓர் ஊரில் பெரிய கோடீஸ்வரன் இருந்தான். அவனிடம் இல்லாத விடயங்களே இல்லை. அத்தனையும் அளவுக்கு அதிகமாக கொட்டிக் கிடந்தன. ஆனால் சந்தோசமும் நிம்மதியும்தான் இல்ல.

சரி, உள்ளூரிலதான் சந்தோசம் கிடைக்கலை. வெளியூர், விதவிதமான நாடுகளுக்குப் போனா கிடைக்குமான்னு தேடித் தேடிப் போனான். ம்ஹூம் நிம்மதி கிடைச்ச பாடில்ல. மனசுக்குள்ள எப்பவும் பரபரப்பு எந்த ஊருக்குப் போனாலும் அடுத்த நாளே, வீட்டில என்ன ஆச்சோங்கிற கவலை. தண்டவாளப் பெட்டி பத்திரமா இருக்குமாங்கிற பயம். சொந்தக்காரங்களே அமுக்கிடு வாங்களோங்கிற சந்தேகம்!

சரி, இதை மறந்தாவது தொலைக்கலாம்னு சரக்கு, போதைப் பொருள்னு சகலதிலும் இறங்கிட்டான். ஆனா அதிலும் நிம்மதி கிடைக்கலை.

சீ போதும் இந்த வாழ்க்கை. இனி துறவறத்தில் இறங்கி சந்நியாசியா போயிடலாம். அமைதி கிடைக்கும்னு யாரோ சொல்ல, அவனும் துறவறத்தில் இறங்கினான்.

உடனே அவன் தன் வீட்டில இருந்த தங்கம், வைரம், வைடூரியம், எக்கச்சக்க பணம் எல்லாத்தையும் ஒரு மூட்டையா கட்டி எடுத்துக்கிட்டு ஒரு துறவியைப் பார்க்கப் போனான்.

அப்போது துறவி ஒருத்தர் மரத்தடியில உட்கார்ந்திட்டிருந்தார். அதைப் பார்த்த அந்த கோடீஸ்வரன், அந்த மூட்டையை துறவியின் காலடியில வச்சிட்டு, "குருவே! இதோ என்னோட மொத்தச் சொத்தும் இதில இருக்கு. இனி இவை எதுவும் எனக்கு வேணாம். எனக்கு அமைதியும் சந்தோசமும் தான் வேணும். அடுத்து என்ன செய்யணும் சொல்லுங்க" சொல்லி கும்பிட்டான்.

எல்லாத்தையும் கேட்டுக்கிட்ட துறவி, உடனே அந்த மூட்டையை வேகமா பிரித்துப் பாத்தார்.

அதில் கண்ணை தங்கமும் வைர வைடூரியங்களும் கட்டுக்கட்டா பணமும் துறவி சடார்னு அந்த மூட்டையை கட்டி தலையில் வைத்துக் கொண்டு ஒரே ஓட்டமா ஓட ஆரம்பிச்சார்.

அதைப் பாத்ததும் கோடீஸ்வரனுக்கு இன்னும் பேரதிர்ச்சி. 'அடடா... இவன் பஞ்சத்துக்காக காவி கட்டிய போலி சாமியார் போலயிருக்கே'ன்னு பதறிட்டான். கோபம் கோபமாக வந்தது. உடனே துறவியை துரத்த ஆரம்பிச்சிட்டான் நம்மாளு!

துறவியின் ஓட்டத்துக்கு செல்வந்தனால் ஈடுகொடுக்க முடியல. துறவி சந்து பொந்தெல்லால் சர்வ சாதாரணமா ஓடுறார். தாவிக் குதிக்கிறார் ம்ஹூம்... பணக்காரனால ஒண்ணுமே பண்ண முடியல.



ஆனா துறவி எல்லாத் தெருக்களையும் ஓடி முடித்து கடைசியில் அதே மரத்தடிக்கு வந்து நின்றிட்டார்!

அந்த கோடீஸ்வரனைப் பாத்தார். "என்ன கண்ணா பயந்திட்டியா? "இந்தா உன் சொத்து மூட்டையை நீயே வைச்சுக்கோ" என்று திருப்பிக் கொடுத்தார்.

சொத்து மூட்டை கையில் வந்ததும் கோடீஸ்வரன் அடைஞ்ச சந்தோசத்துக்கு அளவே இல்ல. ஒரே குதூகலமாயிட்டான். முகமெல்லாம் சிரிப்பு தாண்டவமாடுது.

இப்போது அந்தத் துறவி கேட்டார்...

"என்னப்பா புதுசா சிரிக்கிறாய்? இதுக்கு முன்னாடி இந்த செல்வமெல்லாம் எங்கே இருந்துச்சு உங்கிட்டதானே. ஆனால் அப்ப உன்கிட்ட மகிழ்ச்சி இல்ல. இப்பவும் நீ வைச்சிருக்கிறது அதே சொத்து தான். ஆனா சந்தோசமும் நிம்மதியும் உன் முகத்தில் தெரியுது!" என்று கூறிவிட்டு, சட்டென்று திரும்பிப் பார்க்காமல் நடந்தார்!எல்லாம் புரிந்த தெளிவோடு வீடு திரும்பினான் செல்வந்தன்!

## 07.2017 20 இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

- 1618 - புளூட்டோ பூமிக்கு மிக அண்மைக்கு வந்தது. இதன் அடுத்த நிகழ்வு 1866 இல் நிகழ்ந்தது. மீண்டும் இது 2113 இல் நிகழும்.
- 1935 - இந்தியாவில் லாகூரில் முஸ்லீம்களுக்கும் சீக்கியர்களுக்கும் இடையில் இடம்பெற்ற கலகத்தில் பலர் கொல்லப்பட்டனர்.
- 1953 - யூனிசெப் அமைப்பை நிரந்தரமாக்கும் முடிவு ஐநாவில் எட்டப்பட்டது.
- 1960 -இலங்கையின் பிரதமராக சிறிமாவோ பண்டாரநாயக்கா தெரிவானார். இவரே நாடொன்றின் தலைவராகத் தெரிவான முதற் பெண் ஆவார்.
- 1969 - அப்பல்லோ 11 சந்திரனில் இறங்கியது. நீல் ஆம்ஸ்ட்றோங், எட்வின் ஆல்ட்றின் ஆகியோர் சந்திரனில் காலடி வைத்தனர்.
- 1979 - இலங்கையில் பயங்கரவாதத் தடைச்சட்டம் கொண்டுவரப்பட்டது.1976 - வியட்நாம் போர்: அமெரிக்கப் படைகள் தாய்லாந்தில் இருந்து முற்றாக வெளியேறினர்.
- 1976 - வைக்கிங் 1 சந்திரனில் இறங்கியது.

பிறப்புகள்

- கிமு 356- பேரரசர் அலெக்சாந்தர், மக்கெதோனியப் பேரரசர் (இ. கிமு 323)
- 647-முதலாம் யசீத், அரேபியக் காலிபு (இ. 683)
- 1804-இரிச்சர்டு ஓவன், ஆங்கிலேய உயிரியலாளர் (இ. 1892)
- 1822-கிரிகோர் மெண்டல், செக் நாட்டு உயிரியலாளர் (இ. 1884)
- 1901-ஜெரோம் எமிலியானுஸ்பிள்ளை, ரோமன்-கத்தோலிக்க யாழ்ப்பாண ஆயர் (பி. 1962)
- 1919-எட்மண்ட் இல்லரி, நியூசிலாந்து மலையேறி (இ. 2008)
- 1923-மு. சிவசிதம்பரம், ஈழத் தமிழ் அரசியல்வாதி (இ. 2002)
- 1925 - பிரன்சு ஃபனோன், பிரெஞ்சு-அல்சீரிய மெய்யியலாளர் (இ. 1961)
- 1938 - ப. வேலு, மலேசியாவில் எழுத்தாளர்
- 1955 - ஆர். பானுமதி, தமிழக நீதிபதி
- 1963 - சிறீதர் பிச்சையப்பா, இலங்கை நாடகக் கலைஞர் (இ. 2010)
- 1976- தெபாசிஷ் மொகாந்தி, இந்தியத் துடுப்பாளர்

இறப்புகள்

- 1866 -பேர்னாட் ரீமன், செருமன் கணிதவியலாளர் (பி. 1826)
- 1903-பதின்மூன்றாம் லியோ (திருத்தந்தை) (பி. 1810)
- 1920-சாரதா தேவி, ஆன்மிகவாதியும், இராமகிருஷ்ணரின் மனைவி (பி. 1853)
- 1937 - மார்க்கோனி, நோபல் பரிசு பெற்ற இத்தாலிய இயற்பியலாளர் (பி. 1874)
- 1951 - ஜோர்தானின் முதலாம் அப்துல்லா (பி. 1882)
- 1965 - பதுகேஷ்வர் தத்பீந்திய செயற்பாட்டாளர் (பி. 1910)
- 1973-புரூசு லீ, அமெரிக்க நடிகர் (பி. 1940)
- 1997 -எம். ஈ. எச். மகரூப், இலங்கை அரசியலாவதி (பி. 1939)
- 2014 - தண்டபாணி, தென்னிந்தியத் திரைப்பட நடிகர்
- 2014 - பன்னா ரிட்டிக்ரை, தாய் நடிகர் (பி. 1361)

சிறப்பு நாள்

- பன்னாட்டு நட்பு நாள் (அர்கெந்தீனா)
- மர நாள் (மத்திய ஆப்பிரிக்கக் குடியரசு)
- அனைத்துலக சதுரங்க நாள்
- கொலம்பியா - விடுதலை நாள் (1810)
- வடக்கு சைப்பிரஸ் - அமைதி மற்றும் விடுதலை நாள் (1979)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | நெல்லியடி | கொடிகாமம் | சாவகச்சேரி | கிளிநொச்சி | சுன்னாகம் |
|---|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 120 | 100 | 80 | 100 | 120 | 100 |
| உருளைக்கிழங்கு | 90 | 100 | 80 | 120 | 120 | 100 |
| பச்சைமிளகாய் | 250 | 300 | 250 | 300 | 300 | 250 |
| தக்காளி | 140 | 200 | 120 | 150 | 160 | 150 |
| மரவள்ளிக்கிழங்கு | 80 | 100 | 60 | 80 | 80 | 60 |
| கோவா | 150 | 150 | 80 | 150 | 120 | 150 |
| கரட் | 200 | 300 | 200 | 200 | 240 | 250 |
| பூசணி | 100 | 120 | 110 | 120 | 120 | 80 |
| புடோல் | 100 | 100 | 50 | 80 | 100 | 80 |
| வாழைக்காய் | 80 | 110 | 60 | 80 | 80 | 80 |
| சின்ன வெங்காயம் | 120 | 250 | 180 | 200 | 200 | 250 |
| பெரிய வெங்காயம் | 80 | 100 | 90 | 100 | 100 | 100 |
| பாகற்காய் | 150 | 100 | 140 | 200 | 160 | 120 |
| வெண்டிக்காய் | 40 | 100 | 100 | 120 | 120 | 80 |
| கருணைக் கிழங்கு | 120 | 100 | 50 | 130 | 160 | 140 |
| பயற்றங்காய் | 70 | 100 | 50 | 100 | 80 | 100 |
| லீக்ஸ் | 100 | 100 | 80 | 120 | 120 | 120 |
| பீற்றூட் | 50 | 100 | 50 | 80 | 80 | 80 |
| கறிமிளகாய் | 200 | 200 | 150 | 240 | 240 | 180 |
| முருங்கைக்காய் | 200 | 100 | 150 | 160 | 200 | 200 |
| போஞ்சி | 180 | 200 | 120 | 160 | 160 | 160 |
| கத்தரிதம்புள்ள | 100 | 100 | 100 | 100 | 120 | 100 |
| கீரை - 1பிடி | 30 | 20 | 20 | 30 | 30 | 30 |
| தேசிக்காய் | 40 | 30 | 50 | 60 | 100 | 70 |
| தேங்காய் (ஒன்று) | 70 | 50 | 60 | 55 | 40-60 | 70 |
| இராசவள்ளி | 250 | 300 | — | 250 | 300 | — |
| வெங்காயப்பூ | 150 | 200 | 150 | 240 | 200 | 200 |
| முள்ளங்கி | 60 | 100 | 30 | 80 | 100 | 60 |
| பொன்னாங்காணி | 40 | 40 | 10 | 40 | 40 | 20 |
| வல்லாரை | 20 | 20 | 10 | 20 | 20 | 20 |
| ஈரப்பலா | 80 | 60 | — | — | 100 | — |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மை ஊடுருவும் சூரிய ஒளி போன்றது.
அதை யாராலும் மூடி மறைக்க முடியாது.
~ மில்டன்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## தமிழினத்துக்கு நல்ல அரசியல் தலைமை இல்லாத போது...

தேசிய அரசு இருந்தால்தான் புதிய அரசியல் அமைப்பை நிறைவேற்ற முடியும் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும் எதிர்கட்சித் தலைவருமான இரா.சம்பந்தர் தெரிவித்துள்ளார்.

இதோ! தீர்வு வருகிறது என்று மார்தட்டிய சம்பந்தர் ஐயா இப்போது தேசிய அரசு இருந்தால்தான் அரசியலமைப்பை நிறைவேற்றலாம் என்கிறார்.

தேசிய அரசு எதுவரை இருந்தால் அரசியலமைப்பு நிறைவேறும் என்பதை அவர் நிறுதிட்டமாகக் கூறியிருந்தால், ஓரளவுக்கு மன ஆறுதல் கிடைத்திருக்கும்.

அரசியல் அமைப்புச் சீர்திருத்தத்தை அமுலாக்குவதில் காலதாமதம் செய்யப்படுவது பற்றி எந்தச் சிந்தனையும் இன்றி அப்பாவித்தனமாக; தேசிய அரசு இருக்க வேண்டும். அது இருந்தால்தான் அரசியலமைப்புச் சீர்திருத்தம் அமுலாகும் என சிங்கப்பூரின் வெளிவிவகார அமைச்சருடன் இரா.சம்பந்தர் கவலை கொண்டதை நினைக்கும் போது மிகுந்த வேதனையாக இருக்கிறது.

இந்த நாட்டு ஆட்சியாளர்கள் எமக்கு எதுவும் தரமாட்டார்கள் என்பது தமிழ் மக்களுக்கு நன்கு தெரியும். தவிர, ஜனாதிபதி மைத்திரியைக் கூட ஏமாற்றவல்லவர்கள் அரசாங்கத்தில் இருக்கும் போது நம்மை ஏமாற்றமாட்டார்களா என்ன? என்ற விடயங்கள் எல்லாம் சாமானிய தமிழ் மக்களும் நன்கு அறிவர்.

இருந்தும் மிக நீண்ட அரசியல் அனுபவம்; தந்தை செல்வநாயகம், தளபதி அமிர்தலிங்கம் ஆகியோருடனான அரசியல் பாசறையில் கற்றறிந்த பாடங்கள் என அரசியல் விற்பன்னம் இருக்கும் என்று நாம் நினைத்திருந்த சம்பந்தர் ஐயா தேசிய அரசின் ஒற்றுமைக்காகக் கண்ணீர் விடுகிறார்.

தனது காலத்திலாவது இனப்பிரச்சினைக்குத் தீர்வு கண்டு விடலாம் என்ற நம்பிக்கை ஒன்றுதான் அவரின் கவலைக்குக் காரணம்.

என்ன செய்வது தமிழர்களின் தவக்குறைவு, விடுதலைப் புலிகளுக்குப் பின்னர் தமிழ் மக்களுக்கு ஒரு நல்ல அரசியல் தலைமை கிடைக்கவில்லை.

ஒரு நல்ல தலைவர் என்று தமிழ் மக்கள் நம்புபவரும் பிதாமகர் எனும் வீஷ்மாச்சாரியராகவே இருப்பேன். ஆட்சியும் மாட்சியும் எனக்கு வேண்டாம் என்பதாக இருக்கும் போது தமிழ் மக்கள் என்ன செய்ய முடியும்.

எதுவாயினும் எங்கள் அன்புக்குரிய சம்பந்தர் ஐயா அவர்களே! உங்களை நாம் மதிக்கின்றோம். போற்றுகின்றோம். ஆனால் சிங்கள ஆட்சியாளர்கள் நமக்கு எதுவும் தரமாட்டார்கள் ஐயா!

தேசிய அரசை ஒருக்கால் திரும்பிப் பாருங்கள். ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி உடைந்து விட்டது. தமிழரசுக் கட்சியை கந்தறுத்தாச்சு, சர்வதேச போர்க்குற்ற விசாரணை இல்லை, ஐ.நா தீர்மானத்தை அமுலாக்குவதில் காலம் கடத்தல்.

இப்போது அரசியல் அமைப்பை அமுலாக்காமல் செய்வதற்காக தேசிய அரசை முடிவுறுத்தும் வேலை ஆயத்தமாயிற்று. எப்படி! காய் நகர்த்தல். இது ஒன்றும் உங்களுக்குத் தெரியாமல் போயிற்று.

பரவாயில்லை. ஒரு நல்ல ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அவர்கள் இந்த டிசம்பர் 31 வரையாவது என்னோடு இருங்கள் என்று கெஞ்சுகிறார்.

அவருக்கே அப்படியொரு நிலை என்றால் உங்களுக்கு தூ...

# மைத்திரியை சந்தித்த நண்பர்; நெகிழ்ச்சியாக அமைந்த தருணம்



(கொழும்பு)

ஜனாதிபதி மைத்திரியை சந்தித்த அவரது நீண்டகால நண்பரின் நெகிழ்ச்சியான தருணம் தொடர்பில் பலரது கவனமும் அதன்பால் ஈர்க்கப்பட்ட சம்பவம் ஒன்று நேற்று இடம்பெற்றுள்ளது.

கொழும்பு பாணந்துறை நகர சபை விளையாட்டு மைதானத்தில் நேற்று முற்பகல் "மதுவில் இருந்து விடுதலையான நாடு" தேசிய வேலைத்திட்டத்தின் களுத்துறை மாவட்ட மாநாடு முடிவடைந்ததும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மக்களுக்கு மத்தியில் நடந்து சென்றார்.

அப்போது ஜனாதிபதியை சந்திக்க தலைமுடி நரைத்து போன ஒருவர் வந்துள்ளார்.

கடந்த காலத்தில் இருந்து தொடர்ந்து வரும் ஆழமான நட்பை நினைவூட்டும் கோப்புடன் வந்த அந்த நபர் ஓய்வு பெற்ற ஆசிரியரும் சமூக சேவையாளருமான பாணந்துறை மாலமுல்ல பிர தேசத்தை சேர்ந்த ஜீ.ஜய சேன பீரிஸ் என்ற நபராவார்.

1960ம் ஆண்டுகளில் ஆசிரியராக நியமனம் பெற்ற இவர் பொலநறுவை அத்துமல்பிட்டிய பாடசாலையில் ஆசிரியராக பணியாற்றியுள்ளார்.

அந்தக் காலத்தில் பொலநறுவை றோயல் கல்லூரியில் உயர்தர வகுப்பில் கல்வி கற்று வந்த தற்போதைய ஜனாதிபதியே ஜயசேன பீரிஸின் நெருங்கிய நண்பராக இருந்துள்ளார்.

ஜயசேன பீரிஸின் திருமணத்தின் போது அவரது மாப்பிள்ளை தோழனாகவும் ஜனாதிபதி மைத்திரி இருக்கும் அளவுக்கு அவர்களிடையே நெருங்கிய நட்பு இருந்துள்ளது.

கஷ்டமான பிரதேசத்தில் ஆசிரியர் சேவையின் கஷ்டத்தை போக்கிக் கொள்ள துணையாக இருந்த தனது கிராமத்து நண்பன் தற்போது நாட்டின் ஜனாதிபதியாக இருந்தாலும் ஜயசேன பீரிஸ், தற்போதும் தனது நண்பனிடம் அதே நெருக்கத்தையே உணர்ந்து நட்புடன் பழகிய காட்சி நெகிழ்ச்சியான தருணமாக அமைந்திருந்தது. (செ-11)

சட்டவிரோத செயற்பாடுகள்

## பிரதேச செயலர்கள் நீதிபதியுடன் சந்திப்பு

(கரணவாய்)

வடமராட்சியில் உள்ள மூன்று பிரதேச செயலாளர்களும் பருத்தித்துறை நீதிவான் நீதிமன்ற நீதிபதியினை சந்தித்து வடமராட்சியின் தற்போதைய நிலை குறித்து கலந்துரையாடியுள்ளனர்.

சட்டவிரோதமான முறையில் மணல் ஏற்றி வந்த ஹண்டர் வாகனம் மீது பொலிஸார் மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் இளைஞர் ஒருவர் பலியானார்.

இதனைத் தொடர்ந்து பொலிஸார் தமது செயற்பாட்டினை பொலிஸ் நிலையத்துக்குள்ளேயே மேற்கொண்டிருந்தனர்.

இதனால் சட்டவிரோத நடவடிக்கைகள் அப் பகுதிகளில் பரவலாக அதிகரித்திருந்தன.

இந்நிலையிலேயே இது தொடர்பில் கரவெட்டி, பருத்தித்துறை, மருதங்கேணி பிரதேச செயலாளர்கள் நேற்று புதன்கிழமை பருத்தித்துறை நீதிமன்றுக்கு சென்று நீதிபதியுடன் கலந்துரையாடியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (செ-60)

## அன்றாட வாழ்வில் ஐஸ்வர்யம் அதிகரிப்பதற்கான ஆசாரங்கள்




**பெண்ணை தாரை வார்த்து கொடுக்கும் நிகழ்ச்சி சரிதானா?**

தமிழ்த்திருமணங்களில்பெண்ணை தாரை வார்த்துக் கொடுக்கும் நிகழ்ச்சி செய்யப்படுவதில்லை. அந்தக் காலத்தில் ஒரு பொருளை மற்றவர்களுக்கு கொடுக்கும் போது பஞ்ச பூதங்களை சாட்சியாக வைத்து திரவப்பொருளான நீரால்தாரை வார்த்துக் கொடுப்பார். பத்திர எழுத்துக்கள்.

அரசு பதிவுகள் செய்வதில்லை. மனதுதான் இதற்கு சாட்சி. தாரை வார்த்துக் கொடுத்தவருக்கு எந்தக் கஷ்டம் வந்தாலும் தாரை வார்த்துக் கொடுத்த பொருளை திரும்பப் பெறமாட்டார். தாரை வார்த்தல் நிகழ்ச்சி பொருளுக்குத் தான் பொருந்தும். பெண்ணுக்குப் பொருந்தாது. மணமகள் வீட்டார் தன் பெண்ணை மணமகன் வீட்டாருக்கு தாரை வார்த்துக் கொடுத்துவிட்டால் மணமகன் வீட்டாரிடம் இருந்தும் மகளிடம் இருந்தும் எவ்வித உதவியும் பெறுதல் கூடாது. அரசர்கள் காட்டிற்கு வேட்டைக்குப் போகும்போது காட்டில் உள்ள பெண்களை தாரைவார்ப்பு முறையிலேயே திருமணம் செய்து கொண்டனர். (தொடரும்)

## மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை வெள்ளிக்கிழமை காலை 8 மணியிலிருந்து மாலை 5.30 மணி வரை யாழ். பிரதேசத்தில மாசேரி பிரதேசத்திலும் வவுனியா பிரதேசத்தில மலையா பருத்திக்குளம் பிரதேசம் ஆகிய பிரதேசங்களிலும் மின் தடைப்படும். (இ-9)

## சத்திய தரிசனம்



### கவலைகள் கிடக்கட்டும் மறந்துவிடு

❖ தொடக்கத்தில் கறையான் சிறியதாகவே தோன்றும். சிறுகச் சிறுக அவை பெருகி, நாளடைவில் மரக்கட்டை முழுவதுமே செல்லரித்துப் போகச் செய்துவிடும். அதுபோல, தீயகுணங்கள் சிறிதாகத் தான் ஆரம்பத்தில் இருக்கும். முடிவில் ஒருவனை முழுவதுமாக அழித்துவிடும்.

❖ வாழ்வில் கஷ்ட நஷ்டங்கள் வருவது இயற்கையே. அதையே சிந்திக்காமல், கவலையை வீசி எறிந்துவிட்டு ஆக்கப்பூர்வமான முயற்சிகளில் ஈடுபடுங்கள்.

❖ சின்னஞ்சிறிய எறும்பு கூட சர்க்கரை இருக்கும் இடத்திற்கு கூட்டமாக வந்து உண்ணுகிறது. ஆனால், மனிதனுக்கு அந்த பெருந்தன்மையோ, ஒற்றுமை உணர்வோ இருப்பதில்லை. தாராள மனப்பான்மையை எறும்பிடம் கற்றுக் கொள்ள வேண்டும்.

❖ சந்தனக் கட்டையை எரித்துக் கரியாக்குபவன் முட்டாள். மணமும்,குளிர்ச்சியும் சந்தனம் தருவதுபோல, சத்தியத்தை அறிவதற்காக கொடுக்கப்பட்ட உடல் இது. அதை அற்பசெயல்களுக்கு பயன்படுத்தக்கூடாது.

❖ கடவுள் எங்கும் நிறைந்திருக்கிறார் என்றாலும், எல்லோரும் இறைவனைக் காண வேண்டிய இடம் ஒன்று உண்டு. அது தான் நம்முடைய உள்ளம்.




## திருப்பதி மலை வாழும் வெங்கடேசா

வராஹமூர்த்தி ஆசிரமத்தின் உட்புறம் திரும்பி அம்மா வகுளாதேவி வாசலுக்கு வா... வந்திருக்கும் விருந்தாளியைப் பார்...? என்று அழைத்தார்.

இதோ வந்தேன்.... என்ற குரலோடு உள்ளிருந்து ஒரு பெண்மணி வெளியே வந்தாள்.

ஆவலுடன் அவள் முகம் நோக்கினான் அச்சுதன்.

வகுளாதேவியும் வந்து நின்றிருந்த வடமதுரை மைந்தனைக் கண்டாள்.

ஆவென்ற ஒலிக்குறிப்பு ஒன்று அவளிடமிருந்து வெளிப்பட்டது.

அடுத்த கணமே அவள் மயங்கிச் சரிந்தாள். (தொடரும்)

## ஆரோக்கியமான வாழ்க்கைக்கு

காலை உணவை கட்டாயம் எடுத்தல் நன்று
சரியான அளவுகளில் உட்கொள்ளல்
சரியான நேரத்தில் உட்கொள்ளல்
ஆரோக்கியமான உணவுகளை தேர்வு செய்து உட்கொள்ளல்
போசணைக்கூறு இழப்பற்ற சமையல் முறை
சீனி, உப்பு, கொழுப்பு உணவுகளில் கட்டுப்பாடு
தினமும் உடற்பயிற்சி
உற்சாகமாக மனநிலை

தகவல்: சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை,
யாழ். மாநகர சபை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடத்தல், வன்புணர்வு...

எனது விடுதியில் 3 நண்பர்களுடன் தங்கியிருந்தார். அவர்கள் அறையில் நிற்பார்கள். போவார்கள். மீண்டும் வருவார்கள். என்ன செய்கிறார்கள் என்று எனக்கு தெரியாது என கொழும்பில் உள்ள விடுதி உரிமையாளர் நேற்றைய தினம் மன்றில் சாட்சியமளித்துள்ளார்.

அத்துடன் வித்தியா கொலையுண்ட நேரத்தில் குறித்த 4 எதிரிகளும் கொழும்பில் இல்லை என்பதை நிரூபிப்பதற்கு மேலும் இரு சாட்சிகள் அரச தரப்பால் நேற்றைய தினம் முன்வைக்கப்பட்டுள்ளன.

புங்குடுதீவு மாணவி வித்தியா கூட்டு வன்புணர்வுக்கு உட்படுத்தப்பட்ட பின் படுகொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பான விசாரணையினை நீதாய விளக்கத்தின் (ரயல அட்பார்) 8ஆவது அமர்வு நேற்றைய தினம் யாழ்.நீதிமன்றக் கட்டடத் தொகுதியின் 3ஆம் மாடியில் ஆரம்பமாகியது.

நீதாய விளக்கத்தினை மேற்கொள்ள நியமிக்கப்பட்ட வவுனியா மேல் நீதிமன்ற நீதிபதி பாலேந்திரன் சசிமகேந்திரன், திருகோணமலை மேல் நீதிமன்ற நீதிபதி அன்னலிங்கம் பிரேமசங்கர், யாழ்.மேல் நீதிமன்ற நீதிபதி மாணிக்கவாசகர் இளஞ்செழியன் ஆகிய 3 நீதிபதிகள் முன்னிலையில் ஆரம்பமாகிய இந்த விசாரணையை பிரதி மன்றாதிபதி பி.குமார்ரட்ணம் அரச சட்டவாதிகளான நாகரட்ணம் நிஷாந், மாலினி விக்னேஸ்வரன், ஜெயலக்சி டிசில்வா உள்ளிட்ட குழுவினர் நெறிப்படுத்தியிருந்தனர். 9 எதிரிகளும் மன்றில் முற்படுத்தப்பட்டிருந்தனர்.

நேற்றைய வழக்கின் போது பிரதி மன்றாதிபதி குமார்ரட்ணம் மன்றில் விண்ணப்பம் ஒன்றினை செய்திருந்தார். வழக்கின் 49 ஆவது மற்றும் 52ஆவது சாட்சியத்தினை எதிர்வரும் 24ஆம் திகதி மன்றுக்கு அழைப்பதற்கான அழைப்பாணை பிறப்பிக்கப்பட வேண்டும். மேலும் 26ஆம் திகதி வழக்கின் 53ஆவது சாட்சியினை ஆஜராகுமாறும் மன்று அழைப்பாணை விடுக்கப்பட வேண்டும். இதுமட்டுமல்லாமல் வழக்கில் இருந்து பிணையில் விடுவிக்கப்பட்ட 11ஆவது சாட்சிக்காக அழைப்பாணையினையும் பிறப்பிக்க வேண்டும் என்று விண்ணப்பித்திருந்தார். அவ்விண்ணப்பத்தினை ஏற்ற மன்று குறிதத சாட்சிகளுக்கான அழைப்பாணையினை அனுப்புமாறு கட்டளை பிறப்பித்திருந்தது.

இதனைத் தொடர்ந்து வழக்கின் 41ஆவது சாட்சியான முன்னாள் கொடிகாம பொலிஸ் நிலையப் பொலிஸ் பரிசோதகர் சிந்தக்க பண்டார சாட்சியப் பதிவுகளுக்காக அழைக்கப்பட்டார். பிரதி மன்றாதிபதி குமாரரட்ணத்தின் பிரதான விசாரணையில் கேட்கப்பட்ட கேள்விகளுக்கு பதிலளிக்கும் வகையில் அவர் தனது சாட்சியப் பதிவினை மேற்கொண்டிருந்தார்.

அவர் தொடர்ந்து சாட்சியமளிக்கையில்,

கடந்த 2015ஆம் ஆண்டு 5ஆம் மாதம் 20 ஆம் திகதி நான் கொடிகாமம் பொலிஸ் நிலையத்தின் பொலிஸ் பரிசோதகராக இருந்தேன். அன்று யாழ்.பிராந்திய சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகரினால் எனக்கு அழைப்பு ஏற்படுத்தப்பட்டு, யாழ்.பிரதேசத்தில் கலவரம் நடைபெறுகின்றது என்றும், நீர் பொலிஸ குழுவுடன் வந்து கலகத்தை அடக்கமாறும் கட்டளை பிறப்பிக்கப்பட்டது.

யாழ்.பிராந்திய சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் காரியாலயத்திற்கு வருமாறு பொலிஸ் அதிகாரி லக்சம் வீரசேகர கட்டளை பிறப்பித்தார். பகல் 1.15 மணியளவில் அங்கு சென்றேன்.. புங்குடுதீவில் மாணவி கூட்டு வன்புணர்வுக்கு உட்படுத்தப்பட்ட பின்னர் படுகொலை செய்யப்பட்ட சம்பவத்தினால் ஏற்பட்ட கலவரத்தில் யாழில் கூடிய கலகக்காரர்களினால் சிறைச்சாலையும், சிறைச்சாலை வாகனமும் தாக்கப்பட்டது அதனை தடுத்து நிறுத்துமாறு என்னிடம் கட்டளை பிறப்பிக்கப்பட்டது.

எனவே அங்கு சென்று கலகக்காரர்களை விரட்டி, அமைதியான நிலைமையினை ஏற்படுத்தினேன். மாலை 4.30 மணிவரைக்கும் அங்கு கலகம் அடக்கும் நடவடிக்கையில ஈடுபட்டேன். இதன்போது எனது வலது கையில் நடுவிரலில் பிளவுக் காயம் ஒன்று ஏற்பட்டது. எனக்கு காயம் ஏற்பட்ட விடயத்தினை சிரேஷ்ட பொலிஸ் அதிகாரிக்குத் தெரிவித்து விட்டு, யாழ்.போதனா வைத்தியசாலையில் தங்கியிருந்து சிகிச்சை பெற்றிருந்தேன். அடுத்த நாள் சட்டவைத்திய அதிகாரியிடம் முற்பட்ட பின்னர் நான் வைத்தியசாலையினை விட்டு வெளியே வந்தேன்.

நான் வைத்தியசாலையினை விட்டு வெளியில் வந்த பின்னர், சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகரின் அலுவலகத்தில் பணியாற்றும் பொலிஸ் உத்தியோகஸ்தரான ஏக்கநாயக்க என்பவர் என்னிடம் வந்து யாழ்.பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ள மகாலிங்கம் சசிக்குமார் என்பவரை விசாரணை செய்யுமாறு பணித்திருந்தார். அக் கட்டளையினை சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் பிறப்பித்துள்ளதாகவும் எனக்கு தெரிவித்திருந்தார்.

சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் கூறியதற்கு அமைய வித்தியா கொலை வழக்கின் சந்தேக நபரான மகாலிங்கம் சசிகுமாரை விசாரணைக்கு பாரம் எடுத்துக் கொண்டேன். என்னிடத்தில் விசாரணை ஒப்படைக்கப்படும் போது, இங்குள்ள பொலிஸ் உத்தியோகஸ்தர்கள் எவரும் இவரை விசாரணை செய்ய முன்வருகின்றார்கள் இல்லை. இதனால் நீர் அவரை விசாரணை செய்யுமாறு உத்தரவிடப்பட்டது.

சநதேக நபரிடம் அவர் கைது செய்யப்பட்ட குற்றம் தொடர்பிலும், அவர் சந்தேக நபர் என்ற வகையிலும் எனது விசாரணையினை முன்னெடுத்திருந்தேன். சந்தேக நபர் இதற்கு முன்னர் வேறேதும் நீதிமன்றத்தில் முற்படுத்தப்படவில்லை. பாடசாலை மாணவியினை கூட்டு வன்புணர்வுக்கு உட்படுத்திய பின்னர், கொலை செய்யப்பட்டமை தொடர்பில். விசாரணை மேற்கொண்டு விசாரணையில் முடிவில் அவரை நீதிமன்றத்தில் முற்படுத்துவதற்கான நடவடிக்கையினை மேற்கொண்டேன்.

சட்ட விதிமுறைகளுக்கு ஏற்ப அவர் மீது சாட்டப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்களை கொண்ட சட்ட ஏற்பாடுகளை சுட்டிக்காட்டியும், குற்றவியல தண்டனைக் கோவை மற்றும் பிணை கட்டளைச் சட்டக் கோவை என்பவற்றில் உள்ள சட்ட ஏற்பாடுகளையும் எடுத்துக் காட்டி பி அறிக்கை தயாரித்து, அதன் படி ஊர்காவற்றுறை நீதவான் நீதிமன்ற நீதவான் முன்னிலையில் சந்தேக நபரை முற்படுத்தியிருந்தேன்..

கடத்தல், வன்புணர்வு, கொலை போன்ற குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் எனக்கு அவர் மீது சந்தேகம் இருந்தது. எனவே பிணை கட்டளைச்சட்டத்தின் 14இன் கீழ் அவருக்கு எதிரான பி அறிக்கையினை நீர் தயாரிக்கும் போது, குறித்த சந்தேக நபரை பிணையில் விடுவித்தால், யாழ்ப்பாணத்தில் பாரிய கலவரங்கள் ஏற்படும், அவருடைய உயிருக்கும் அச்சுறுத்தல் ஏற்படும், மேலும் சந்தேக நபரின் குடும்பத்தினருக்கும் ஆபத்து ஏற்படும், மேலதிக விசாரணைகளுக்கு தடையாக அமையும், பிரதேச மக்கள் கலவரங்களில் ஈடுபடுவார்கள், ஆர்ப்பாட்டங்கள் நடத்தப்படும் குறித்த சந்தேக நபர் நீதிமன்றத்திடம் இருந்தும், பொலிஸாரிடம் இருந்தும் தப்பிச் செல்வதற்கான வாய்ப்பாக அமையும் என்ற காரணங்களை குறிப்பிட்டு பி அறிக்கை தயாரித்தேன்.

மகாலிங்கம் சசிகுமாரை யாழ்.பொலிஸ நிலையத்தில் வைத்து, காலை 9 மணியளவில் பொறுப்பேற்று பகல் 12 மணியளவில் யாழ்ப்பாணத்தில் இருந்து புறப்பட்டு 1.30 இல் இருந்து 2 மணிக்குள் அவரை ஊர்காவற்றுறை நீதவான் நீதிமன்ற நீதவான முன்னிலையில் பாரபடுத்தினேன். அத்துடன் குற்றப் புலனாய்வு பிரிவினர் அவ்விசாரணைகளை பொறுப்பேற்றுக் கொண்டதன் பின்னர் மேலதிக விசாரணைகளை மேற்கொள்வதற்கான சந்தர்ப்பம் எனக்கு வழங்கப்படவில்லை என தனது சாட்சியத்தில் தெரிவித்தார். இதனைத் தொடர்ந்து எதிரி தரப்பு சட்டத்தரணி சி.கேதீஸ்வரன் சாட்சியினை குறுக்கு விசாரணைக்கு உட்படுத்தினார்.

தொடரந்து வழக்கின் 44ஆவது சாட்சியான அருண பிரியந்த பஸ்சநாயக்க என்னும் கசினோ சூதாட்ட விளையாட்டு நிறுவனத்தில் முகாமையாளர் சாட்சியத்திற்காக அழைக்கப்பட்டார்.

அவர் தனது சாட்சியத்தில் ராகவை என்னும் இடத்தில் உள்ள கசினோ சூதாட்ட விளையாட்டு நிறுவனத்தில் 2008ஆம் ஆண்டில் இருந்து 9 வருடங்கள் கடமையாற்றியிருந்தேன். அங்கு நுழைவு கட்டணம் 3 ஆயிரம் தொடக்கும் 5 ஆயிரம் வரை அறவிடப்படும். அங்கு வி.ஐ.பி பிரிவு உள்ளது. அங்கு வருபவர்கள் பணம் செலுத்த தேவையில்லை. அவர்களுக்கான அங்கத்துவ அட்டை இருந்தால் உள்நுழையலாம். அப்பிரிவுக்கு வருபவர்கள் தினம் வருகைதரும் வாடிக்கையாளர்,

சந்தேக நபர் ஒருவர் தொடர்பாக விசாரணை செய்வதற்கு குற்றப் புலனாய்வு பிரிவினர் வந்தார்கள். அவர்களின் கேள்விகளுக்கு பதிலளித்துக் கொண்டு வாக்குமூலத்தினை வழங்கினேன்.

2015ஆம் ஆண்டு 5ஆம் மாதம் 13ஆம் திகதி அங்கு வந்து சென்றவர்கள் தொடர்பாக கேட்டார்கள். பின்னர் கண்காணிப்பு கமெரா பதிவுகளை பார்வையிடவும் கேட்டார்கள். நான் அவர்களுக்கு அந்த வீடியோ பதிவினை காண்பித்தேன். அந்த வீடியோ பதிவில் சந்தேக, நபரை அடையாளம் கண்டு கொண்டார்கள். குற்றப் புலனாய்வு பிரிவினர் அடையாளம் [illegible]யாளம் கண்டு கொண்டேன்.

13ஆம் திகதி பகல்வேளை அங்கு வந்திருந்தார் என தெரிவித்து எதிரி கூண்டில் 4 ஆவதாக நிற்பவர் என்று தனது அறிவுக்கு எட்டியவாறு அடையாளம் காட்டியிருந்தார். அவர் நீல நிற காற்சட்டை அணிந்திருந்தாக எனக்கு ஞாபகம் உள்ளது என்று சாட்சியத்தினை பதிவு செய்தார். பிரதான விசாரணையினை தொடர்ந்து சாட்சி குறுக்கு விசாரணைக்கு உட்படுத்தப்பட்டார்.

அப்போது உங்களுடைய நிறுவனத்திற்கு வருபவர்களுடைய பெயர்கள் பதிவு செய்யப்படுகின்றனவா? என கேட்கப்பட்டது ஆம். உள்நுழைவுக்கான பணத்தினை கொடுத்து பற்றுச்சீட்டினை பெற்றுக் கொள்வதன் ஊடாக பதிவுகள் மேற்கொள்ளப்படும்.

உங்களிடத்தில் விசாரணையினை மேற்கொள்ள வந்த குற்றப் புலனாய்வு பிரிவினர் மன்றில் எதிரி கூண்டில் நிற்கும் 4 ஆவது எதிரியின் புகைப்படத்தினை கொண்டுவந்தார்களா? என கேட்டதற்கு இல்லை. குறித்த சந்தேக நபருடன் ஆட்டோவில் வந்திறங்கிய நபருடன் தான் குற்றப் புலனாய்வு பிரிவினர் வந்து விசாரணைகளை மேற்கொண்டார்கள் என தெரிவித்தார்.

தொடர்ந்து வழக்கின் 45ஆவது சாட்சியான கொழும்பில் உள்ள ரெஸ்ரொரன்ஸ்சின் பணியாளர் ஆறுமுகம் செல்வகுமார் சாட்சியப் பதிவுக்காக அழைக்கப்பட்டார் அவர் தனது சாட்சியத்தில்.

நான் குற்றப் புலனாய்வு பிரிவினருக்கு வாக்குமூலம் ஒன்றினை வழங்கியிருந்தேன் அது என்ன சம்பவம் என்று சரியாக ஞாபகம் இல்லை. ஆனால் வீடியோ பதிவு ஒன்றினை காட்டி அதில் உள்ளவரை தெரியுமா என்று கேட்டு விசாரணை செய்தார்கள். அது 13ஆம் திகதி என்பது ஞாபகம் உள்ளது. ஆனால் ஆண்டு, மாதம் ஞாபகம் இல்லை.

பத்திரிகைகளில் இவ்வழக்கு தொடர்பாக வெளியிடப்படும் செய்திகளை பார்த்த படியால் திகதி நினைவில் உள்ளது, அன்று ஒரு கூட்டமாக வந்தார்கள். இதனால் அவர்கள் அனைவரும் ஒன்றாக இருக்கக் கூடியவாறு மேசை, கதிரைகளை ஒழுங்குபடுத்திக் கொடுத்தேன். அன்று மாலை தான் அவர்கள் வந்தார்கள்.

அவர்களுக்கு மதுபானம் கொடுத்தேன், குளிர்பானம் கொடுத்தேன். சாப்பாடும் எது கொடுத்தேன் அது என்ன வகையான சாப்பாடு என்று எனக்கு ஞாபகம் இல்லை. அந்த கூட்டத்தில் இருந்தவர்கள் வழமையாக அங்கு வருபவர்கள் அல்ல இரண்டு பேர் அதிகமாக அங்கு வருபவர்கள்.

அவர்களை கண்டால் அடையாளம் காட்ட முடியும் எதிரி கூண்டில் நிற்கும் 4,7ஆவது எதிரிகளே அங்கு அதிகமாக வருபவர்கள், மேலும் எதிரி கூண்டில் நிற்கும் 9ஆவது எதிரியும் அன்று வந்திருந்தார். அவர் தொப்பியை கழற்றி மேசையில் வைத்திருந்தார். அவருடைய முகத்தில் எரிகாயங்கள் காணப்பட்டன என்று எதிரிக் கூட்டில் நின்றவர்களை அவர் அடையாளம் காட்டி தனது சாட்சியத்தினை பதிவு செய்தார். அத்துடன் சாட்சி எதிரி தரப்பு சட்டத்தரணிகளால் குறுக்கு விசாரணைக்கு உட்படுத்தப்பட்டது.

தொர்டர்ந்து வழக்கின் 46ஆவது சாட்சியான இராமையா கனகேஸ்வரன் என்னும் கொழும்பு வெள்ளவத்தை ஸ்ரேசன் வீதியில் உள்ள விடுதி ஒன்றின் உரிமையாளர் சாட்சியப் பதிவுக்காக அழைக்கப்பட்டார்.

அவர் தனது சாட்சியத்தில்,

கொழும்பில் முதலில் வெள்ளவத்தையில் ஏஞ்சலின் விடுதியின் பங்குதாரராக இருந்து வந்தேன். அதனை மேற்பார்வையும் செய்து வந்தேன். விடுதியில் 14 அறைகள் உள்ளன. 2 அறைதான் குளிரூட்டப்பட்ட அறைகள். அங்கு பலர் வருவார்கள். குடும்பமாகவும், தனியாகவும் வருவார்கள். ஒரு நாள் தங்குபவர்களும் வருவார்கள். நீண்ட நாட்கள் தங்குபவர்களும் வருவார்கள். தங்க வருபவர்களின் பெயர் விபரங்கள் பதிவு செய்வோம். அவ்வாறு பதிவு செய்யும் பெயர் விபரங்களை ஒவ்வொரு நாளும் வெள்ளவத்தை பொலிஸாருக்கு அறிக்கையிடுவோம்.

2015ஆம் ஆண்டு மே மாதம் 19ஆம் திகதி நான் எனது மகனை பாடசாலையில் இறக்கி விடுவதற்காக காலையில் சென்று கொண்டிருந்தேன். அப்போது என்னுடைய விடுதியில் பணியாற்றிய நபர் ஒருவர் எனக்கு தொலைபேசி அழைப்பினை ஏற்படுத்தியிருந்தார். வெள்ளவத்தை பொலிஸார் விடுதிக்கு வந்துள்ளார்கள் என்று அவர் கூறினார். மகனை பாடசாலையில் இறக்கி விட்டுவிட்டு, உடனே விடுதிக்குச் சென்றேன். விடுதியில் கதவுகள் மூடப்பட்டிருந்தன. உள்ளே பொலிஸார் நின்றார்கள்.

அங்கு சென்ற போது தின பதிவேடுகளை காண்பிக்குமாறு பொலிஸார் கேட்டார்கள். நான் அவர்களுக்கு காண்பித்தேன். அபபோது பாஸ்போட் (கடவுச் சீட்டினை) காட்டி அதன் உரிமையாளர் உள்ளாரா என்று கேட்டார்கள்.

அப்போது அங்கு பணிபுரிந்த நபர் சொனனார். ஆம், அவர் இரண்டாம் அறையில் இருக்கின்றார் என்று. அங்கே சென்ற பொலிஸார் கதவினை தட்டி உள்ளே இருந்து மகாலிங்கம் சசிகுமாரை கைது செய்து அழைத்துச் சென்றார்கள். அப்போது மகாலிங்கம் சசிக்குமார் தனது மனைவி பிள்ளையுடன் அங்கிருந்தார். பொலிஸார் மனைவியையும் பிள்ளையையும் அங்கேயே இருக்குமாறு கூறி மகாலிங்கம் சசிகுமாரை பொலிஸ் வாகனத்தில் ஏற்றி கொண்டு சென்றுவிட்டார்கள்.

பின்னர் சசிகுமாரின் மனைவி என்னிடம் கேட்டார் தனக்கு சிங்கள மொழி தெரியாது. கணவரை பொலிஸ் நிலையம் சென்று பார்க்க வேண்டும். உதவி செய்யுமாறு கேட்டார். நானும் அவரை பொலிஸ் நிலையத்திற்கு அழைத்துச் சென்றேன். பொலிஸார் சசிகுமாரின் மனைவியை விடுதியில் வைத்திருக்கமாறு என்னிடம் கூறினார்கள். ஆனால் அவரின் மனைவி தான் தனியாக பிள்ளையுடன் நிற்க முடியாது என்று கூறினார். மீண்டும் விடுதிக்கே வந்துவிட்டோம்.

மாலை 5.30 மணியளவில் அங்கு சசிகுமாரின் தாயார் வந்துவிட்டார். மீண்டும் பொலிஸ் நிலையத்திற்குச் சென்றோம். அங்கு சசிகுமாரின் தாய் மற்றும் மனைவியின் வாக்குமூலங்கள் பொலிஸாரினால் பெறப்பட்டது.

இதற்கு முதலும் மகாலிங்கம் சசிகுமார் உங்களுடைய விடுதிக்கு வந்திருந்தார். ஆனால் அவர் தனியாக வரவில்லை. 2015. 5.8ஆம் திகதி வேறு சிலருடன் வந்தார். அவர்கள் அறையில் நிற்பார்கள். போவார்கள். மீண்டும் வருவார்கள். என்ன செய்கிறார்கள் என்று எனக்கு தெரியாது. பெரும்பாலும் ஆட்டோவிலே அவர்கள் செல்வார்கள்.

5 நாட்களுக்கு மேல் அங்கு நின்றார்கள். 4 பேர் நின்றார்கள் 14ஆம் திகதி மரணச் சடங்கு ஒன்றுக்காக போகப் போவதாக செ[illegible]னார்கள். போகும் போது எனக்கு 12 ஆயிரம் ரூபா அவர்கள் தரவேண்டியிருந்தது. அப்போது அவர்கள் சொன்னார்கள் விடுதியில் பணியாற்றும் நபர் ஒருவரை தங்களுடன் அனுப்பி வைக்குமாறும், மோதரையில் பணத்தினை எடுத்து அவரிடம் கொடுத்து விடுவதாக கூறினார்கள். நானும் பணியாளர் ஒருவரை அவர்களுடன் அனுப்பிவைத்தேன்.

ஆனால் அவர்கள் பணியாளரிடம் பணத்தினை கொடுக்கவில்லை. தாங்கள் எனது வங்கி இலக்கத்திற்கு பணத்தினை வைப்பலிடுவதாக கூறிவிட்டு, அவர்களுடன் சென்ற பணியாளருக்கு ஆயிரம் ரூபா பண த்தினை கொடுத்து திரும்பி அனுப்பிவிட்டார்கள் என தெரிவித்தார்.

மேலும் வழக்கின் 51ஆவது சாட்சியாக அழைக்கப்பட்ட முன்னாள் யாழ்.தலைமைப் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி ரஞ்சித் பாலசூரிய சாட்சியப் பதிவுக்காக அழைக்கப்பட்டு சாட்சியம் பதிவுசெய்யப்பட்டது.

யாழ்.பொலிஸ் நிலையத்தின் பொறுப்பதிகாரியாக இருந்த நான், வித்தியா கொலை வழக்குத் தொடர்பான விசாரணைகளை மேற்கொள்ளவில்லை. எனது பொலிஸ் நிலையத்தில் பணியாற்றிய உத்தியோகஸ்தர்களான உப பொலிஸ் பரிசோதகர் சிறிகஜன் தலைமையிலான குழு ஒன்று விசாரணை நடவடிக்கைகளை மேற்கொண்டிருந்தது.

இவ்வழக்கில் கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள் 5 பேர் யாழ்.பொலிஸ் நிலையத்தில் முற்படுத்தப்பட்டனர் ஊர்காவற்றுறை பொலிஸாரினால் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டு வந்தனர்.

சிறிகஜன் என்பவர் நபர் ஒருவரை பொலிஸ் நிலையத்தில் முற்படுத்திய பின்னர் விடுவிக்கப்பட்டமை தொடர்பான பிரச்சினை ஒன்று ஏற்பட்டிருந்தது. சந்தேக நபர்களை முற்படுத்தும் போது எமக்கு தெரியப்படுத்த வேண்டும. ஆனால். எழுத்து மூலமாக யாரும் பொலிஸ் நிலையத்தில் முற்படுத்தப்படவும் இல்லை.

மே மாதம் 21ஆம் திகதி கிளிநொச்சி பொலிஸாரினால் சந்தேக நபரான மகாலிங்கம் சசிகுமார் என்பவர் கிளிநொச்சி பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரியினால் யாழ்.பொலிஸ் நிலையத்தில் பாரப்படுத்தப்பட்டார்.

அவரிடம் வாக்குமூலம் பெற்றுக் கொண்டமை தொடர்பாக எனக்கு தெரியப்படுத்தப்பட்டது. மகாலிங்கம் சசிகுமாருடைய பயணதடை தொடர்பாக எனக்கு அறிவிக்கப்பட்டது. சிறிகஜன் என்பவர் யாழ்.மாவட்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் கூறியதாக எனக்கு தெரிவித்தார். அவருக்கு நான் சொன்னேன் நீதிமன்ற கட்டளையினை பெற்ற பின்னர்தான் பயணத்தடை தொடர்பாக கடடுநாயக்க விமான நிலையத்திற்கு அறிவிப்பினை செய்யுமாறு தெரிவித்தேன்

(23ஆம் பக்கம் பார்க்க....)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வானம் தூவிய...

மத்தியில் ஆச்சரியத்தை ஏற்படுத்தியது. கல்லூரி மைதானத்தில் காலைப் பிரார்த்தனையில் மாணவிகள் ஈடுபட்டிருந்த போது வானத்திலிருந்து விசிறிய மழைத்துளி மாணவிகளின் சீருடையில் பட்டு மஞ்சள் நிறத் தன்மையை ஏற்படுத்தியிருந்தன. இதனால் மாணவிகள் ஆச்சரியம் அடைந்தனர்.

இது தொடர்பில் கல்லூரி முதல்வர் யாழ்ப்பாண சுகாதார வைத்திய அதிகாரிக்கு தகவல் கொடுத்ததையடுத்து பொது சுகாதார பரிசோதகர் குழாம் அங்கு சென்று நிலைமைகளை ஆராய்ந்தது. (ந)

## விவியன் பாலகிருஸ்...

ற்கு விஜயம் மேற்கொண்டு வட மாகாண ஆளுநர் ரெஜினோல்ட் கூரேயை சந்தித்ததுடன், யாழ்ப்பாண பொது நூலகம் மற்றும் யாழ்ப்பாண போதனா வைத்தியசாலையின் நிலவரம் தொடர்பில் ஆராய்ந்தார்.

சிங்கப்பூர் வெளிவிவகார அமைச்சர் விவியன் பாலகிருஸ்ணன் மற்றும் அவரது பாரியார் உட்பட்ட குழுவினர் நேற்று காலை பலாலி விமான நிலையத்திற்கு வருகை தந்திருந்தனர்.

அவர்களை யாழ்ப்பாண மாவட்ட அரசாங்க அதிபர் உட்பட அரச உத்தியோத்தர்கள் வரவேற்பு அளித்திருந்தனர்.

அதன்பின்னர், வடமாகாண ஆளுநர் ரெஜினோல்ட் கூரேயை வட மாகாண ஆளுநர் அலுவலகத்தில் சந்தித்து கலந்துரையாடினார்.

சுமார் 15 நிமிடங்கள் ஆளுநருடன் சந்திப்பினை மேற்கொண்டிருந்த அமைச்சர் அங்கிருந்து யாழ்ப்பாண பொது நூலகத்திற்கும் சென்றார்.

அங்கு கடந்த 2011ஆம் ஆண்டு சிங்கப்பூர் அரசாங்கத்தின் நிதியுதவியில் யாழ்ப்பாண பொது நூலகத்தில் ஆரம்பித்து வைக்கப்பட்ட சிறுவர் பிரிவு மற்றும் பேருந்து நூல் நிலையத்தினையும் பார்வையிட்டதுடன், தற்போதைய நிலைமைகள் குறித்தும் கலந்துரையாடினார்கள்.

அதனைத் தொடர்ந்து யாழ்ப்பாண மாநகர ஆணையாளர் தலைமையில் தேசிய நூலக சபையினால் அன்பளிப்புச் செய்யப்பட்ட ஒரு தொகுதி நூல்களையும் யாழ்.பொது நூலக அதிகாரி சுகந்திர சதாசிவத்திடம் கையளித்தார்.

அதனைத் தொடர்ந்து, யாழ்ப்பாண போதனா வைத்தியசாலைக்கு விஜயம் மேற்கொண்டு, முறிவு நெறிவு சிகிச்சைப் பிரிவினைப் பார்வையிட்டதுடன், சிகிச்சை பெற்றவர்களுக்கு அன்பளிப்பு பொருட்களையும் வழங்கி வைத்ததுடன், யாழ்ப்பாண போதனா வைத்தியசாலை பணிப்பாளர் ரி. சத்தியமூர்த்தியுடன் போதனா வைத்தியசாலை நிலவரம் தொடர்பாக ஆராய்ததுடன், யாழ்.பல்கலைக்கழக மருத்துவ பீடத்திற்கும் சென்றிருந்தார். (செ-11)

## கடத்தல், வன்புணர்வு...

2015.05.19ஆம் திகதி யாழ்ப்பாணத்தில் எவ்வாறு நிலை இருந்தது என கேள்வி எழுப்பப்பட்டது.

அதற்கு அனைத்து கடைகளும் மூடப்பட்டிருந்தன. ஆர்ப்பாட்டங்களும் நடந்து கொண்டிருந்தன. புங்குடுதீவில் வித்தியா என்னும் மாணவி கூட்டு வன்புணர்வுக்கு உட்படுத்தப்பட்ட பின்னர் படுகொலை செய்யப்பட்ட சம்பவத்திற்கு சட்ட ரீதியில் நடவடிக்கை எடுக்குமாறு கோரியும், சந்தேக நபர்களை கைது செய்யுமாறு கோரியுமே ஆர்ப்பாட்டங்கள் நடத்தப்பட்டன. புங்குடுதீவு மாணவி வித்தியாவின் கொலையில் சட்டத்தினை நிலைநாட்டுமாறு கோரியும், சந்தேக நபர் ஒருவர் விடுவிக்கப்பட்டதை எதிர்த்து, மக்கள் கொந்தளித்து ஒன்று கூடியிருந்தனர்.

யாழ்.பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைத்திருந்த 5 சந்தேக நபர்களும் யாழ். நீதிமன்றத்தில் முற்படுத்தப்போவதாக எண்ணியிருந்தார்கள். இதனால் நீதிமன்றத்தினை அவர்கள் சுற்றிநின்றார்கள். தாக்குதல் மேற்கொண்டார்கள்

இத்தாக்குதல் சம்பவம் தொடர்பாக 131 பேர் கைது செய்யப்பட்டார்கள் என சாட்சியத்தில் தெரிவித்தார். அத்துடன் மன்றின் விசாரணைகள் இன்று வரை ஒத்திவைக்கப்பட்டதுடன், எதிரிகளுக்கான விளக்கமறியலும் நீடிக்கப்பட்டிருந்தது. (செ-9)

## காணி அளவீட்டு...

அளவீடு தொடர்பில் உரிமையாளர்களினால் வடமாகாணசபை உறுப்பினர் து.ரவிகரனுக்கு முறைப்பாடு தெரிவிக்கப்பட்டமையடுத்து சம்பவ இடத்திற்கு சென்ற வட மாகாண சபை உறுப்பினர் நேரில் பார்வையிட்டதுடன் அதற்கு எதிர்ப்பும் வெளியிட்டுள்ளார்.

கொக்குத்தொடுவாய் பிரதேசத்தில் இருந்து 1983ஆம்ஆண்டு மக்கள் இடம்பெயர்ந்துள்ளார்கள். அதன் பின்னரான கால கட்டங்களில் தமிழ்மக்களுக்கு சொந்தமான 2524 ஏக்கர் காணிகள் வெலிஓயா பிரதேச பகுதியில் அபகரிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறான நிலையில் மீண்டும் மக்களின் காணிகளை அபகரிக்கும் நோக்கில் அளவீட்டு செயற்பாடுகள் இடம்பெற்று வருகின்றது. கொக்குத்தொடுவாய் பகுதியில் 3 கிராம அலுவலர் பிரிவுகள் காணப்படுகின்றது. இதில் வாழ்கின்ற மக்கள் பெரும்பாலும் விவசாயத்தை நம்பியே வாழ்ந்து வருகின்றார்கள். இந்த மக்களின் நீர்பாசன காணிகள் விடுவிக்கப்படவேண்டும், காணி அளவீடுகள் நிறுத்தப்படவேண்டும், மக்களின் சொந்த காணிகள் மக்களிடம் ஒப்படைக்க வேண்டும், தமிழ் மக்களின் காணிகளை அபகரித்து தென்னிலங்கை மக்களுக்கு கொடுப்பதை ஏற்றுக்கொள்ளமுடியாது என்று கொக்குத்தொடுவாய் பிரதேசத்தில் வைத்து வடமாகாண சபை உறுப்பினர் து.ரவிகரன் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்துள்ளார். (செ-281)

## சிறுபான்மை...

சட்டம் இயற்றும் சபையான நாடாளுமன்றத்தில் சிறுபான்மையினருக்கு எதிராக எந்தவொரு சட்டத்தையும் இயற்ற முடியாது என்ற சரத்தை உள்வாங்குவதன் ஊடாக மாத்திரமே சிறுபான்மையினரின் பாதுகாப்பை உறுதிப்படுத்த முடியும் என கிழக்கு மாகாண முதலமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

ஐக்கிய நாடுகள் சபையின் அரசியல் விவகாரங்களுக்கான செயலாளர் நாயகம் ஜெப்ரி பெல்ட்மன் உடன் இடம்பெற்ற கலந்துரையாடலின் போதே கிழக்கு முதலமைச்சர் ஹாபிஸ் நசீர் அஹமட் இதனைக் சுட்டிக்காட்டியுள்ளார்.

இங்கு தொடர்ந்து கருத்து தெரிவித்த கிழக்கு முதல்வர், சோல்பரி யாப்பின் 29ஆம் சரத்து பின்னர் வந்த அரசியலமைப்புக்களில் இருந்து நீக்கப்பட்டதன்ஊடாகவே பல்வேறு குழப்பங்களும் இனங்களிடையேயான விரிசல்களும் மோதல்களும் உருவாகின என்பதே உண்மை,

எனவே சிறுபான்மையினர் மத்தியில் உள்ள சந்தேகங்கள் மற்றும் அச்ச நிலைமையை மாற்றும்விதமாக மீண்டும் அரசியலமைப்பில் இந்த சரத்தை இணைக்க வேண்டும்.

அதேபோன்று பௌத்த மதத்திற்கு அரசியலமைப்பில் முன்னுரிமையளிப்பது தொடர்பில் எமக்கு எந்த வித பிரச்சினையுமில்லை. ஆனால் ஏனைய மதங்கள் மற்றும் சமூகங்களுக்கும் உரிய இடம்அளிக்கப்பட வேண்டும் என்பதுடன் அவர்களின் பாதுகாப்பு உறுதிப்படுத்த வேண்டும்.

இதேவேளை மாகாண சபைகளுக்குரிய அதிகாரங்கள் வலுவூட்டப்பட்டு வழங்கப்பட வேண்டும் என்பதுடன் நிதி தொடர்பான முழுமையான கையாள்கை மாகாண சபைகளுக்கே வழங்கப்பட வேண்டும்.

யுத்தம் முடிந்து ஆண்டுகள் பல கடந்த போதிலும் இன்னும் பொது மக்களின் காணிகள் மற்றும் விவசாயக் காணிகள் படையினரிடமும் பாதுகாப்பு காரணங்களுக்காகவும் தொடர்ந்தும் மக்களிடம்கையளிக்கப்படாமல் உள்ளன.

எனவே அவற்றை விரைவில் மக்களுக்கு வழங்க ஆவன செய்யவேண்டும் என்பதுடன் காணி தொடர்பான அதிகாரங்கள் மாகாண சபைகளுக்கு வழங்கப்பட வேண்டியது அவசியமாகும்.

அத்துடன் இலங்கையில் வளங்கள் சமமாக பகிரப்படாமையினால் கிழக்கில் ஏற்பட்டுள்ள வேலைவாய்ப்பில்லாத பிரச்சினை மற்றும் வறுமை ஆகியவை தொடர்பிலும் இவை அரசியல் அதிகார ரீதியில் உள்ள பிரச்சினைகளாலேயே ஏற்பட்டுள்ளதாகவும் கிழக்கு முதலமைச்சர் ஐ.நா. பிரதிநிதிகளிடம் சுட்டிக்காட்டியமை குறிப்பிடத்தக்கது. (செ-11)

## மெருகூட்டப்பட்ட...

ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் உயர்ஸ்தானிகர் அலுவலகத்தால் நேற்று முன்தினம் வெளியிடப்பட்டுள்ள அறிக்கை ஒன்றிலேயே இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கைக்கு விஜயம் மேற்கொண்ட ஐக்கிய நாடுகள் சபையின் விசேட பிரதிநிதி பென் எமர்ஸன் தெரிவித்துள்ள கருத்துகளை அடிப்படையாக கொண்டு இந்த அறிக்கை வெளியிடப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் அவர் மேலும் கருத்து பகிர்கையில்,

பயங்கரவாதத் தடுப்புச் சட்டம் ஆழமான தவறுகளைக் கொண்டது என வர்ணித்ததுடன், அதன் கீழ் கைது செய்யப்படுவோர் மீதான சித்திரவதை என்பது, வழக்கமானதாகவும் அதிகளவிலும் காணப்படுகிறது.

சட்டம், தமிழ்ச் சமூகத்துக்கு எதிராக ஒப்பீட்டளவில் அதிகமாகப் பயன்படுத்தப்படுவதன் காரணமாக, அரசின் மெருகூட்டப்பட்ட சித்திரவதைக் கருவியின் கடுமையான பாதிப்பை அச்சமூகம் எதிர்கொண்டுள்ளது.

பாதுகாப்புத் துறையில், சித்திரவதை என்பது ஆழமாகப் பதியப்பட்டுள்ளது. கொடூரமான சித்திரவதை தொடர்பில் வருந்தத்தக்க நேரடியான அனுபவங்களை நான் கேட்டறிந்தேன்.

தடிகளால் அடித்தல், உடலுக்குப் பாதிப்பு ஏற்படும் வகையில் இருத்துதல், மண்ணெண்ணெயில் தோய்க்கப்பட்ட பிளாஸ்டிக் பைகளைப் பயன்படுத்தி மூச்சுத்திணற வைத்தல், விரல் நகங்களைப் பிடுங்குதல், விரல் நகங்களுக்குக் கீழ் ஊசிகளைச் செருகுதல்,

பல்வேறு வகையிலான தண்ணீர்ச் சித்திரவதைகள், பெருவிரல்களில் கட்டி பல மணி நேரங்களுக்குத் தொங்க விடுதல், பிறப்புறுப்புகளை சிதைத்தல் ஆகியவற்றை இந்தச் சித்திரவதைகள் உள்ளடக்குகின்றன

2016ம் ஆண்டின் இறுதியில், பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்ட சந்தேக நபர்களில் 80 சதவீதமானோர் சித்திரவதை பௌதிக ரீதியான தவறான நடத்தை ஆகியவற்றைச் சந்தித்ததாகக் கூறுகின்றனர்.

சித்திரவதை, இவ்வளவு தூரத்துக்கு அதிர்ச்சிகரமாகக் காணப்படுகின்ற போதிலும், பயன்தரக்கூடிய விசாரணைகள் இல்லாமையே காணப்படுகின்றது.

12 சந்தேகநபர்கள், விசாரணை எதுவுமின்றி 10 ஆண்டுகளுக்கும் மேலாகத் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். மேலதிகமாக 70 பேர், 5 ஆண்டுகளுக்கும் மேலாகத் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

இலங்கை, அதிகளவிலான பாதுகாப்புச் சவாலைச் சந்திக்கிறது. எனினும், சீர்திருத்தம், நீதி, மனித உரிமைகள், ஏறத்தாழ அதே இடத்திலேயே இருக்கின்றது.

நிலைத்திருக்கும் சமாதானத்தை உறுதிப்படுத்துவதற்காக, நிலைமாறு கால நீதிக்கான கட்டமைப்பை உருவாக்குவதற்கும், பாதுகாப்புத் துறையின் அவசரமான சீர்திருத்தத்துக்கும் வழங்கிய சர்வதேச பணிகளை, இலங்கை நிறைவேற்ற வேண்டும் என அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (செ-11)

## கேப்பாப்பிலவு...

482 ஏக்கர் காணிகளை விடுவிக்குமாறு வலியுறுத்தி குறித்த தொடர் போராட்டம் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

தமது சொந்த நிலத்தில் கால் பதிக்கும் எண்ணத்தோடு மார்ச் மாதம் 1 ஆம் திகதி ஆரம்பித்த தொடர் போராட்டத்தை தீர்வு கிடைக்கும் வரை தாம் முன்னெடுக்கப் போவதாக மக்கள் வலியுறுத்தியுள்ளனர்.

இந்நிலையில் கேப்பாப்பிலவு பகுதியில் 180 ஏக்கர் காணி நேற்று விடுவிக்கபடுவதாக மீள்குடியேற்ற அமைச்சு அறிவித்திருந்தது.

ஆயினும் பூர்விக கிராமத்தை விடுவிக்குமாறு கோரி நாம் போராடிவரும் நிலையில் நேற்றைய தினம் விடுவிக்கவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ள காணிகள் புலம்பெயர்ந்து வாழும் ஆறுபேருக்கு சொந்தமான பலவருட காலமாக காடாக காணப்பட்ட பிரதேசம் என சுட்டிக்காட்டிய மக்கள், இதைவிடு விக்கச் சொல்லி நாங்கள் யாரும் போராடவில்லை. இவைகள் விடுவிக்கப்பட வேண்டியவை தான். ஆனால் இது போராடி விடுவிக்க வேண்டிய தேவையில்லை. போராட்டத்துக்கு முன்னமே இது விடுவிக்க கூடியதாக இருந்தது.

நாங்கள் எங்களுடைய பூர்வீகமாக வாழ்ந்த பயன்தரு மரங்கள் வருமானங்கள் நிறைந்த பகுதியை விடுவித்து தருமாறே 141 நாளாக போராடுகிறோம். இந்நிலையில் இந்த பராமரிப்பற்று காணப்படும் காடாக கிடந்த காணியை நாங்கள் போராடாமலே விடுவித்திருக்கமுடியும். எங்கள் போராட்டத்தின் பின் எங்களை ஏமாற்றி கேப்பாப்பிலவு விடுவிக்கப்பட்டு விட்டது என்ற பொய் பிரசாரத்தை மேற்கொள்ளவே இந்த நாடகத்தை அரசாங்கம் மேற்கொள்கிறது எனவும்,

எதிர்க்கட்சி தலைவர் உள்ளிட்ட அனைவரும் வருகைதந்து பகுதியளவில் அல்ல இராணுவத்தோடு கதைத்து முழுமையாக விடுவித்து தருவதாக உறுதிகூறியே இவ்வளவு நாளாக இந்த வீதியோரம் போராடி வருகிறோம். இந்நிலையில் அரசாங்கம் எங்களை ஏமாற்றி வருகிறது. இந்த நடவடிக்கையை வன்மையாக கண்டிக்கிறோம் என மக்கள் தெரிவித்த நிலையில்,

நேற்று மாலை காணிவிடுவிப்புக்காக வருகைதந்த மீள்குடியேற்ற அமைச்சர், அரசாங்க அதிபர் உள்ளிட்டோரை போராட்டக்காரர்கள் வீதியில் மறித்ததால் அப்பகுதியில் பெரும் பரபரப்பு ஏற்பட்டது. மக்கள் குறித்த பிரச்சினையை அமைச்சருக்கு தெரிவித்ததோடு போராட்டத்தில் ஈடுபட்டுள்ள ஒருவரின் காணி கூட இல்லையென அமைச்சரை முற்றுகையிட்டனர்

இதன்பின்னர் மக்களோடு கலந்துரையாடிய அமைச்சர் ஊடகங்களுக்கு இவ்வாறு கருத்து தெரிவித்தார். காணிவிடுவிப்பு தொடர்பில் 26ஆம் திகதி தனது அமைச்சுக்கு போராட்டத்தில் உள்ள சிலரை வருமாறும் அடுத்த கட்டமாக 148 மில்லியன் ரூபா நிதி இராணுவத்துக்கு கொடுக்கவேண்டியுள்ளது. இந்த நிதியை எனது அமைச்சினூடாக கொடுக்க ஏற்பாடு செய்துள்ளேன். அந்த ஏற்பாட்டின் படி அவர்கள் 6 மாத அவகாசம் வேண்டுமென்று கோரியுள்ளனர். ஆனால் நான் இராணுவ அதிகாரிகளுக்கு குறித்த கால அவகாசம் அதிகம் எனவும் அதை விரைவாக விடுவிக்குமாறும் கோரியுள்ளேன். இவர்கள் 5 மாதமாக போராடுகிறார்கள். அதனால் 26 ஆம திகதி அமைச்சில் இராணுவத்தரப்பையும் அழைத்து தீர்வு காணுவோம் என தெரிவித்து அமைச்சர் அங்கிருந்து புறப்பட்டு சென்றிருந்தார். (செ-281)

## காணி நேற்று...

நேற்று விடுவிக்கப்படவில்லை என முல்லைத்தீவு மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி ரூபவதி கேதீஸ்வரன் தெரிவித்தார்

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில் ,

முல்லைத்தீவு மாவட்டத்தின் கேப்பாப்பிலவு பகுதியில் இராணுவமுகாம் அமைந்திருந்த 179 ஏக்கர் காணி நேற்று விடுவிக்கப்படுவதாக இருந்தது. இந்நிகழ்விற்காக மீள்குடியேற்ற அமைச்சர் டி.எம்.சுவாமிநாதன் வருகை தந்திருந்தார். இருப்பினும் போராட்டத்தில் ஈடுபட்டுள்ள மக்களின் காணிகள் இதற்குள் அடங்கவில்லை என மக்கள் தெரிவித்த காரணத்தினால் இந்நிகழ்வை அவர்கள் புறக்கணிப்பதான செயற்பாடுகளில் ஈடுபட்டனர்.

இதன்பின்னர் இப்பிரச்சினை தொடர்பில் மக்கள் அமைச்சரோடு கலந்துரையாடிய தன காரணத்தால் எங்களால் இந்த காணிகளை பெறமுடியாமல் போனது. ஆனால் காணிகள் கையளிப்பதற்கு ஏற்ற வகையில் ஆவணங்கள் தயார் செய்யப்பட்டுள்ளது. எனவே அவற்றை பெற்று உரியவர்களிடம் கையளிக்க முடியும். ஆனால் போராட்டத்தில் ஈடுபட்டு ள்ள ஒருவருடைய காணியும் அதனுள் அடங்கவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது. (செ-281)

## 160 கிலோ...

ருந்த சீனி கண்டய்னரில் இருந்து சுமார் 160 கிலோ கிராம் கொகேய்ன் போதைப் பொருள் கண்டெடுக்கப்பட்டுள்ளது.

கல்கிஸ்ஸ பொலிஸாரினால் நேற்று மாலை மேற்கொள்ளப்பட்ட சோதனையின் போது இவை கண்டெடுக்கப்பட்டுள்ளன.

கொகேய்ன் போதைப் பொருள் அடங்கிய 10 பொதிகள் கண்டெடுக்கப்பட்டதாகவும் ஒரு பொதியில் சுமார் 16 கிலோகிராம் அளவு கொகேய்ன் போதைப் பொருள் இருந்ததாகவும் பொலிஸார் தெரிவித்ததுடன் மேலதிக விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர். (செ-11)

## ஆமை இறைச்சி;...

சென்ற நபர் ஒருவரை தாம் கைது செய்துள்ளதாக தருமபுரம் பொலிஸார் தெரிவித்துள்ளனர். இச்சம்பவம் நேற்று புதன்கிழமை பிற்பகல் 03 மணியளவில் நடைபெற்றுள்ளது.

இது தொடர்பில் மேலும் தெரிய வருவது;

தருமபுரம் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி எம். எம். என். டீ.சதுரங்கவின் உத்தரவுக்கு அமைய விசேட ஊர்சுற்றுக் காவல் கடமையில் ஈடுபட்டிருந்த பொலிஸார் சந்தேகத்திற்கிடமான வகையில் ஒருவர் துவிச்சக்கரவண்டியில் பயணித்த அவரை தடுத்து நிறுத்தி சோதனையிட்ட போது பாதுகாக்கப்பட்ட அரிய வகை ஆமை ஒன்றை இறைச்சிக்காக வேட்டையாடிக் கொண்டு சென்றமை கண்டுபிடிக்கப்பட்டது.

இதனையடுத்து, சந்தேக நபர் ஆமையுடன் கைது செய்யப்பட்டு தருமபுரம் பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டு விசாரணைகள் நடைபெற்று வருவதாகவும் விசாரணைகளின் பின்னர் தடயப் பொருட்களுடன் சந்தேக நபரை கிளிநொச்சி மாவட்ட நீதிமன்றத்தில் ஒப்படைப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளதாக பொலிஸார் மேலும் தெரிவித்துள்ளனர். (செ-15)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## டெங்கு ஒழிப்பு;...

பகல் ஜனாதிபதி செயலகத்தில் நடைபெற்றது.

மொத்த டெங்கு நோயாளர்களில் முப்பது வீதமானோர் மாணவர்கள் என்பதனால் பாடசாலை வளாகங்களை டெங்கு அற்ற வலயமாக மாற்றும் முழுமையான பொறுப்பை அதிபர்களிடம் ஒப்படைப்பதற்கும், கல்வி அமைச்சின் செயலாளர் ஊடாக இவ் விடயம் தொடர்பில் நாட்டிலுள்ள அனைத்து பாடசாலை அதிபர்களை தெளிவுபடுத்துவதென வும் முன்மொழி யப்பட்டது.

டெங்கு அச்சுறுத்தல் உள்ள வலயங்களாக அடையாளம் காணப்பட்டுள்ள மாவட்டங்களுக்கு கூடுதல் முன்னுரிமை வழங்கி செயற்பட வேண்டியதன் முக்கியத்துவமும் கலந்துரையாடப்பட்டது. தற்போதைய கால நிலை மற்றும் அடுத்துவரும் மாதங்களில் மழை ஏற்படக்கூடிய நிலைமை போன்றவற்றை கருத்திலெடுத்து டெங்கு ஒழிப்பிற்காக உடனடி நடவடிக்கை எடுக்கப்படாவிட்டால் டெங்கு காய்ச்சல் மேலும் பரவும் நெருக்கடிக்கு முகம் கொடுக்க வேண்டியிருக்கும் என சுட்டிக்காட்டப்பட்டது.

ஏற்கெனவே முப்படையினரால் அமுல்படுத்தப்பட்டுள்ள டெங்கு ஒழிப்பு திட்டங்களுக்காக அரச அலுவலர்கள் மற்றும் பொதுமக்களின் வினைத்திறனான பங்களிப்பை பெற வேண்டியதன் முக்கியத்துவம் தொடர்பிலும், தற்போது நடைபெறும் டெங்கு ஒழிப்பு திட்டங்களை மேலும் பலப்படுத்துவதன் தேவைகள் பற்றி கலந்துரையாடப்பட்டது.

டெங்கு அச்சுறுத்தல் உள்ள இடங்கள் தொடர்பில் உரிய அலுவலர்களுக்கு அறிவிப்பதற்காக பொதுமக்களுக்கு வாய்ப்பு வழங்குவதற்காகவும் டெங்கு ஒழிப்பின் தேவை தொடர்பில் பொதுமக்களை தெளிவுபடுத்துவதற்காகவும் கைத்தொலைபேசி கட்டமைப்பு உள்ளிட்ட தகவல் தொடர்பாடல் நிறுவனங்கள் ஊடாக பெற்றுக்கொள்ள கூடிய ஒத்துழைப்பு தொடர்பிலும் கவனம் செலுத்தப்பட்டது.

அமைச்சர் பைசர் முஸ்தபா, பிரதி அமைச்சர் லசந்த அழகியவன்ன, சத்துரிக்கா சிறிசேன, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் செயலாளர் கமல் பத்மசிறி, சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் மருத்துவ கலாநிதி ஜயசுந்தர பண்டார மற்றும் மாவட்ட செயலாளர்கள், முப்படைத் தளபதிகள், பாதுகாப்புத்துறை அதிகாரிகளும் இந்த கலந்துரையாடலில் பங்குபற்றினார்கள். (செ-11)

## சகவாழ்வு, நல்லி...

சிங்கப்பூர் சுகாதார சேவை அமைய்த்தின் ஏற்பாட்டில் யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தின் மருத்துவத்துறை மாணவர்களின் எலும்பியல் அபிவிருத்தி பாடத்திட்டத்திற்காக காசோலைகள் வழங்கும் நிகழ்வு நேற்று யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தின் மருத்துவ துறை பீடத்தின் கேட்போர் கூடத்தில் யாழ் பல்கலைக்கழகத்தின் மருத்துவ துறை பீடாதிபதி எஸ்.ரவிராஜ் தலைமையில் நடைபெற்றது.

இங்கு கலந்து கொண்டு உரையாற்றுகையில், அமைச்சர் இதனை தெரிவித்தார் அவர் மேலும் கருத்து தெரிவிக்கையில்,

இலங்கையின் தற்போது ஒரு மாற்றத்திற்காக புதிய வழிகளில் ஆன படிமுறையிலான செயற்றிட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. அவற்றில் இன்றைய இரு நாடுகளுக்கு இடையிலான ஒரு இணக்கம் காணப்படுகின்றது.

அதற்காக ஒரு புரிந்துணர்வு பங்களிப்பு எதிர்காலத்தில் காணப்படும் இயல்பான மக்கள் தொடர்பான வாழ்க்கை முறையில் மிக தெளிவாக ஒரு பின் பற்றல்கள் அவசியம் காணப்படுகின்றது.

குறிப்பாக ஆங்கில மொழிக்கற்கை நெறியுடனான செயற்றிட்டங்களை கற்க முன்வர வேண்டும். அது தான் தற்போதைய நிலைமைக்கு முன்னுதாரணமான செயற்பாடாக உள்ளது.

வடமாகாணத்தில் தொழில்திறன் அபிவிருத்தியினை மேம்படுத்தவும் இளைஞர்களின் தொழில் முயற்சிகளுக்கான செயற்றிட்டங்களை நடைமுறைப்படுத்த சிங்கப்பூர் எதிர்பார்த்துள்ளது.

குறிப்பாக இலங்கை-சிங்கப்பூர் ஆகிய இரு நாடுகளில் இவ்வாறான மொழிப்புலமை மிக்க கொள்கைத் திட்டங்களை நடைமுறைப்படுத்த எதிர்பார்த்து இருக்கின்றோம்.

அவற்றின் ஒரு கருத்திட்டமாக இன்றைய ஒரு நாள் ஒரு சந்தர்ப்பமாக அமைந்துள்ளதாக சிங்கப்பூர் நாட்டின் வெளிவிவகார அமைச்சர் வைத்திய கலாநிதி விவியன் பாலகிருஸ்ணன் தெரிவித்தார்.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக சிங்கப்பூர் நாட்டின் வெளிவிவகார அமைச்சர் வைத்திய கலாநிதி விவியன் பாலகிருஸ்ணனுடன் வட மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இதன்போது, சிங்கப்பூர் சுகாதார சேவையின் அமையத்தினால் நான்கு மில்லியன் ரூபாயான சேகரிக்கப்பட்ட நிதியினை இந்த மாணவர்களிடம் காசோலைகளாக கையளிப்பதற்காக சிங்கப்பூர் நாட்டின் வெளி விவகார அமைச்சர் வைத்திய கலாநிதி விவியன் பாலகிருஸ்ணன் யாழ்ப்பாண பல்கலைகழக துணைவேந்தர் பேராசிரியர் ப.விக்னேஸ்வரனிடம் இவ் காசோலைக்கான நிதியினை வழங்கிவைத்தார்.

இதன்போது, வட மாகாண சுகாதார அமைச்சர் பா.சத்தியலிங்கம், யாழ்ப்பாண போதனா வைத்தியசாலையின் பணிப்பாளர் எஸ்.சத்தியமூர்த்தி மற்றும் போராசிரியர்கள், விரிவுரையாளர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (செ-11)

## பட்டதாரிகள் போ...

தொடர் கவனயீர்ப்பு போராட்டத்தை தற்காலிகமாக முடிவிற்கு கொண்டு வந்துள்ளனர்.

இது தொடர்பில் வட மாகாண வேலையற்ற பட்டதாரிகள் ஊடகங்களிடம் குறிப்பிடுகையில்,

வேலையற்ற பட்டதாரிகளுக்கு அரச வேலைவாய்ப்பு வழங்குவது தொடர்பாக மத்திய' அரசாங்கம் அமைச்சரவை பத்திரம் ஒன்றினை கொண்டுவந்துள்ளது.

இந்தநிலையில், வடமாகாண வேலையற்ற பட்டதாரிகளினால் 143 நாட்களாக யாழ்ப்பாண மாவட்ட செயலகத்திற்கு முன்னாள் நடத்தப்பட்ட தொடர் கவனயீர்ப்பு போராட்டத்தினை நேற்றுடன் தற்காலிகமாக முடிவிற்கு கொண்டு வருவதற்கு தீர்மானித்துள்ளதாக அவர்கள் தெரிவித்துள்ளனர்.

மேலும் வட மாகாண வேலையற்ற பட்டதாரிகளுக்கு ஒரு நிரந்தர தீர்வை பெற்றுத் தருவதற்கு அரசிற்கு இரண்டு மாதகால அவகாசம் வழங்கியுள்ளோம்.

இந்த காலப்பகுதிக்குள் எமக்குரிய தீர்வு கிடைக்காதவிடத்து மீண்டும் போராட்டத்தில் ஈடுபடுவோம் எனவும் அவர்கள் தெரிவித்தனர். (செ-11)

## திசாநாயக்கவு...

நீதவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

குற்றப்புலனாய்வு திணைக்கள அதிகாரிகளால் முன்னாள் கடற்படை ஊடகப் பேச்சாளர் டீ.கே.பி.திசாநாயக்க கைது செய்யப்பட்டார்.

கடந்த 2007-ம் ஆண்டு கொழும்பில் வைத்து 11 தமிழ் இளைஞர்கள் கடத்தப்பட்டு காணாமல் ஆக்கப்பட்ட சம்பவம் தொடர்பில் இவர் மீது குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

அதன்படி நேற்று கொழும்பு கோட்டை நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்ட அவரை ஆகஸ்ட் 02ம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க கோட்டை நீதவான் உத்தரவு பிறப்பித்தார். (செ-11)

## சிங்கப்பூர் வெளி...

பாலகிருஸ்ணன் நேற்று மதியம் வடக்கு மாகாண முதலமைச்சர் நீதியரசர் சி.வி.வி னேஸ்வரனை சந்தித்துள்ளார்.

வடக்கு மாகாண முதலமைச்சர் அலுலகத்தில் இடம்பெற்ற குறித்த சந்திப்பின் போது அவரது குழுவினர் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டிருந்தனர்.

இந்த சந்திப்பின்போது பல விடயங்கள் தொடர்பில் கலந்துரையாடப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

அத்தோடு முதலமைச்சரை சந்திப்பதற்கு முன்னதாக யாழ். போதனா வைத்தியசாலைக்கான விசேட விஜயத்தினை சிங்கப்பூர் வெளியுறவு அமைச்சர் மேற்கொண்டிருந்தார்.

மேலும் நேற்று காலை வடக்கு மாகாண ஆளுநரை அவரது அலுவலகத்தில் வைத்து சந்தித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (செ-11)


### விரைவு பொதிகள் சேவை, விமான பயணச்சீட்டுகள் விசா சேவைகள்

- அனைத்து சேவைகளும் மிக குறைந்த கட்டணத்தில்

(C-9054)



UK-550*/=Kg

மற்றும் அனைத்து நாடுகளுக்கும் குறைந்த விலையில்

DELIVERY IN 3 - 5 DAYS

V2 TRAVELS-0768226240

- யாழ்ப்பாணம் • கிளிநொச்சி • நெல்லியடி • பருத்தித்துறை • வல்வெட்டித்துறை

### மாபெரும் அரசியல் விஞ்ஞான கருத்தரங்கு

ஆசிரியர் :
எஸ்.கோகுலன்
BA(Hons) Political SPL

இடம் : பொருளியற் கல்லூரி நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.
காலம் : 22.07.2017 மற்றும் 23.07.2017 சனி மற்றும் ஞாயிறு
நேரம் : 11.30am - 4.30pm

(C-9111)

அனுமதிகளை முன்கூட்டியே பெற்றுக் கொள்ளவும். கையேடுகள் வழங்கப்படும். வெளி மாணவர்களும் பங்கு பெறலாம்.

### வீடு வாடகைக்குத் தேவை

3 அங்கத்தவர்கள் கொண்ட அரச துறையில் சிரேஷ்ட பதவிநிலையில் பணிபுரியும் குடும்பத்துக்கு ஆகக்குறைந்தது 3 அறைகள் கொண்ட நவீன கழிப்பறையுடனான வீடு A9 வீதி மற்றும் கச்சேரி, நல்லூர் பிரதேசங்களில் அண்மித்த பகுதியில் தேவை. வாகனத் தரிப்பு விரும்பத்தக்கது. உடன் தொடர்பு கொள்ளவும். (C-9119)

0775544622, 0716883940

### வீடு வாடகைக்குத் தேவை

கே.கே.எஸ் வீதியில் 500 மீற்றர் தூரத்திற்குள் நாச்சிமார் கோவிலுக்கும் முத்தட்டுமடம் கோண்டாவிலுக்கும் இடையில் வீடு வாடகைக்குத் தேவை.

தொடர்பு:
077 164 1686

(C-9124)



### FALC FRENCH LANGUAGE CENTRE

பிரெஞ்சு வகுப்புக்கள்

France இல் பயிற்றப்பட்ட விரிவுரையாளர் மூலம் கற்றுக் கொள்ளுங்கள்...

சர்வதேச டிப்ளோமா DELF A1,A2,B1,B2 வகுப்புக்கள் நடைபெறுகின்றன

2006 முதல் இன்றுவரை 1276 மாணவர்கள்...

இல. 40, பலாலி வீதி, (ஆரியகுளம்) 0779 789 456 021 221 7781

இல.181, முதலாம் மாடி, பிரதான வீதி, நெல்லியடி. 021 320 2973

IELTS Life SkillsA1,B1 வகுப்புக்களும்.....

(இலுப்பையடி சந்திக்கு அண்மையில் கராஜ் முன்பாக)

### வலம்புரி

விளம்பரத் தொடர்புகளுக்கு

021 221 7603

021 567 1532

### எவரெஸ்ட் குமாரிக்கா சந்தனாதி தைலம்



- நீண்ட கூந்தல் வளர்ச்சிக்கும்
- இளநரையை போக்கவும்
- பொடுகிலிருந்து நிவாரணம் பெறவும்
- கண் எரிச்சல், தலை வலியை நீக்கவும்
- ஞாபக சக்தியை அதிகரிக்கச் செய்யவும்
- ஏழு வகையான மூலிகைகள் உள் அடங்கிய சிறப்பு தைலம்

100 வீதம் இயற்கையானது

(கற்றாழை, வல்லாரை, நெல்லிக்காய், கரிசலாங் கண்ணி, கறிவேப்பிலை, பொன்னாங்காணி, அவுரி மற்றும் விற்றமின் E)

(9447)

எல்லா மருந்தகங்களிலும் சாதாரண கடைகளிலும் பெற்றுக்கொள்ளலாம்

தயாரிப்பு:
எவரெஸ்ட் மருந்தகம்,
உசன், மிருசுவில்,
யாழ்ப்பாணம்.

ஏக விநியோகஸ்தர்
பிரமநாதன் & Co
எண்.28, 26, பேரின்பநாயகம் வீதி,
சுண்டுக்குளி, யாழ்ப்பாணம்.

கைபேசி எண்: 0776389356, 0777153571

### காணவில்லை



(9859)

மேற்கண்ட படத்தில் இருக்கும் வே.நடராஜா என்பவரை கடந்த 14 ஆம் திகதியிலிருந்து காணவில்லை.

இவரைப்பற்றிய தகவல் அறிந்தால் தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி
186/14A, பருத்தித்துறை வீதி
குருநாதர் ஒழுங்கை , யாழ்ப்பாணம்.
தொலைபேசி இலக்கம்.

0212228616 , 0773333715

### வேலையாட்கள் தேவை

யாழ்.நகரில் இயங்கும் வெல்டிங் தொழிற்சாலைக்கு வெல்டிங் வேலை செய்யத் தெரிந்தவர்களும் பழக விரும்புபவர்களும் தேவை.

தொடர்பு:
075 491 2823

(9858)

### A/L தமிழ் கருத்தரங்கு

எதிர்பார்ப்பு வினா விடைகள்

நாக.தமிழிந்திரன் MA
(அதி விசேடம்)

1000 வரையானோரை campus அனுப்பிய அனுபவத்துடன்...

அன்னை புத்தகசாலை,
பூபாலசிங்கம் புத்தகசாலை.
யாழ்ப்பாணக் கல்லூரி
பட்டப்படிப்புகள் பீடம்
077 547 8159

(9856)


இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 20.07.2017 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org